பக்கங்கள்: பன்னிரண்டு + VI

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை (24.03.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:118

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

# பேச்சுக்கு வருமாறு ஜனாதிபதி கூட்டமைப்புக்கு நேற்று அழைப்பு

## தமிழ் எம்.பிக்கள் நாளையே முடிவெடுப்பர்

கொழும்பு, மார்ச் 24

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பது, வடக்கில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பது உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பாக தம்முடன் பேசவருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கின்றார்.

எனினும் இந்த அழைப்பை ஏற்று ஜனாதிபதியைச் சந்திப்பதா என்பது குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் நாளையே கூடி இறுதி முடிவெடுப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது. (12 ஆம் பக்கம் பார்க்க)



## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம், மார்ச் 24

காங்கேசன்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அதிகாரி (12 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ▶

## புதுக்குடியிருப்பில் மோதல்

கொழும்பு, மார்ச், 24

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியில் அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடும்சமரில் படைத்தரப்புக்கு இழப்புகள் ஏற்படவில்லை என தேசிய பாதுகாப்பிற்கான மத்திய நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

இச் சண்டையில் விடுதலைப்புலிகளின் 8 சடலங்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் இருந்து மீன்பிடிப் படகுகளில் 13 பேர் புல்மோட்டை போய்ச் சேர்ந்தனர்

திருகோணமலை, மார்ச் 24

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் எதுவித வழித்துணையும் இன்றி முல்லைத்தீவு புதுமாத்தளன் பிரதேசத்தில் இருந்து புல்மோட்டை தள வைத்தியசாலைக்கு 13பேர் வந்தனர்.

இரண்டு மீனவர் படகுகளில் வந்து சேர்ந்துள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## நிலக் கண்ணியில் சிக்கி படையினர் மூவர் காயம்

கொழும்பு, மார்ச் 24

அம்பாறை, பக்மிட்டியாவப் பகுதியில் நேற்றுக்காலை 6.50 மணியளவில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் நிலக் கண்ணி வெடியில் சிக்கியுள்ளனர் எனத் தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையம் செய்தி வெளியிட்டுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் புறப்படும் யாழ் தேவியின் எதிரொலி வடக்கின் நம்பிக்கை நாதமாக விளங்கும்

### தேசத்துடிப்பாகவும் விளங்கும் என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மார்ச்24

தெற்கில் இருந்து மீண்டும் புறப்பட உள்ள யாழ்தேவியின் எதிரொலி வடக்கு மக்களுக்கு நம்பிக்கை நாதமாக விளங்கும். அது தேசத்தின் இதயத்துடிப்பாக விளங்கி சரித்திர பூர்வமான ரயில் பாதையை புனரமைக்க உதவும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

வடக்குக்கான யாழ்தேவி சேவையை ஆரம்பிக்கும் பணிகளை அலரி மாளிகையில் நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:-

1956 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி யாழ்தேவி தனது முதலாவது (12 ஆம் பக்கம் பார்க்க)



## குடாநாட்டில் மின் வெட்டு நேரம் ஆகக் கூடியது இரு மணித்தியாலங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 24

குடாநாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நேர விவரங்களை மின்சார சபையின் பிராந்திய அலுவலகம் நேற்று வெளியிட்டுள்ளது.

தென்மராட்சி தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் மின்வெட்டு ஒரு மணித்தியாலயம் 45 நிமிடங்கள் முதல் இரண்டுமணித்தியாலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மின்வெட்டு நேர அட்டவணை 3 ஆம் பக்கத்தில்

தென்மராட்சியில் தினமும் மாலை 6 மணிமுதல் இரவு 7.15 மணிவரை மின்வெட்டு நடைமுறையிலிருக்கும்.

மாலை நேர (12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களை விடுவித்து ஆயுதத்தைக் கீழே வைத்தாலே புலிகளுடன் பேசுவது குறித்து அரசு முடிவு எடுக்கும்

### ஊடகத்துறை அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

விடுவிக்கப்படாத பகுதிகளில் உள்ள பொதுமக்களை அங்கிருந்து வெறியேறுவதற்கு புலிகள் அனுமதிக்க வேண்டும். பின்னர் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். அதற்குப் பிற்பாடே பேச்சுக் குறித்து ஆலோசிக்கப்படும் - என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்தார்.

அரச தகவல் ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு -

நிபந்தனையற்ற பேச்சுக்குத் தயார் என்று புலிகள் தெரிவித்துள்ள போதிலும் அவர்கள் பலவந்தமாக தடுத்து வைத்துள்ள மக்களை முதலில் விடுதலை செய்ய வேண்டும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயப் பகுதியில் தொடர் ஷெல் வீச்சு; 102 பேர் கொலையுண்டனர்; 140 பேர் காயம்

கொழும்பு, மார்ச் 24

முல்லைத்தீவில் மக்கள் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட மாத்தளன், வலைஞர்மடம், இடைக்காடு, முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை ஆகிய இடங்களை நோக்கி நேற்றுக் காலை முதல் இரவு 7 மணிவரை அகோரச் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என இணையத்தளங்கள் தகவல் (12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை அதிபர்

### திரு.தம்பிராசா சோதிலிங்கம்

(B.A., Dip. in Edu., M.E.D. - S.L.P.S 2:II)

யா/எழுதுமட்டுவாழ் கணேசா வித்தியாலத்தின் ஆசிரியராகவும் உப அதிபராகவும் இருந்து தற்போது மிருசுவில் அ.த.க. பாடசாலையில் அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் எமது மாமா இலங்கை அதிபர் சேவை தரம் 2: II இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம். இவர் மேன்மேலும் பல பட்டங்கள் பதவிகள்பெற வாழ்த்துகின்றோம்.

நி.மு.: எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுதுமட்டுவாழ்.

வாழ்த்துபவர்:
மருமகள் திருமதி ராகுலன் வைதேகி.

## 31ஆம் நினைவு நாள் அழைப்பு

பிறப்பு: 18 ★ 01 ★ 1950



இறப்பு: 23 ★ 02 ★ 2009

### அமரர் அம்பிகைபாகு இராசநாயகம்

கடந்த 23.02.2009 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த அமரர் அம்பிகைபாகு இராசநாயகத்தின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (25.03.2009) புதன்கிழமை காலைமுதல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம். அத்துடன் அன்னாரின் துக்க நிகழ்வில் பங்குகொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெவித்துக் கொள்கின்றோம்.

சட்டம்பியார் வளவு,
கொற்றாவத்தை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் கணேசலிங்கம் கனகசபேசன்

(11 ஆம் ஆண்டு மாணவன், யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)



அராலி தெற்கு, காளியம்மன் கோயிலடியைப் பிறப்பிறப்பிட மாகவும் அம்மன் வீதி, பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கணேசலிங்கம் கனகசபேசன் 22.03.2009 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் கணேசலிங்கம் - அன்னலட்சுமி தம்பதியரின் அன்புப் புதல்வனும் கார்த்திகேயன், கம்சலா, கோவர்த்தனன், வேணுகாந் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கணபதிப்பிள்ளை(ஆசிரியர்) மற்றும் அமரசிங்கம் (ஸ்தபதி, அராலி) ஆகியோரின் அன்புப் பெறாமகனும் தங்கமணி, தங்கரத்தினம், செல்வரத்தினம், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் இரகுநாதன், மகேஸ்வரன் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(24.03.2009)செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
சி.அமரசிங்கம்
(ஸ்தபதி, அராலி -பெரிய தந்தை)

### கணபதிப்பிள்ளை பவன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் பரிஸ் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை பவன் நேற்று (23.03.2009) திங்கட்கிழமை பரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் அன்னரத்தினம் தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற சிவசிதம்பரம் மற்றும் மலர்வதனம் தம்பதியரின் அன்பு மருமகனும் மாதினியின் (பரிஸ்) அன்புக் கணவரும் பிரபா (கனடா), கீதா, உமேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமார் (கனடா), பாலகிருஸ்ணன் (கனடா), சிவநந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வேணுகாசினி, கோபிசன் ஆகியோரின் பெரிய தந்தையும் சாந்தினி, சுகபிரமம் (கனடா), மாதவன், குகன், சுவர்ணா, சிவனி, வித்தகன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இணுவில்.
தொ.பே: 0214590486

தகவல்:
குடும்பத்தினர்.

## கிணற்றில் மீன்பிடிக்க முயன்ற மாணவன் தவறி வீழ்ந்து மரணம்

வேலணை, மார்ச் 24

வேலணை மத்திய கல்லூரி மாணவன் நேற்றுமுன்தினம் கிணற்றில் மீன் பிடிக்க முயற்சித்த போது தவறிக் கிணற்றில் வீழ்ந்து மரணமானார்.

வேலணை, வங்களாவடியைச் சேர்ந்த கேதீஸ்வரன் ரபீஸ்மன் (வயது 12) என்பவரே மரணமானவராவார்.

வீட்டில் பெற்றோர் இல்லாதவேளை அயல் வீட்டில் உள்ள கிணற்றில் இவர் மீன் பிடிக்க முயற்சி செய்தார் என்றும் அப்போது தவறி வீழ்ந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாணவனின் உடலில் மீன்கள் கடித்த காயங்களும் காணப்பட்டன.

மரண விசாரணைகளின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(1- 267)

## குடும்பநல உத்தியோகத்தர் தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 24

குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான வகுப்பு II 'ஆ' வகுப்புக்கான வினைத்திறன் காண் தடைப்பரீட்சை எதிர்வரும் வியாழன், வெள்ளிக்கிழமைகளில் இடம்பெறவுள்ளது.

செயல்முறைப் பரீட்சை கோண்டாவில் பிரதேச வைத்தியசாலையில் 26ஆம் 27 ஆம் திகதிகளிலும் வாய்மொழிப் பரீட்சை யாழ். சுகாதார சேவைப் பணிமனையில் 28ஆம் திகதியும் காலை 8.30 மணிமுதல் இடம்பெறும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (1)


### விற்பனைக்கு

கதவு நிலைகள்,யன்னல் நிலைகள், இரட்டைப்பீலி ஓடுகள் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: 0776672368

### ராஜீ திருமண சேவை

வெளிநாட்டில்P.Rஉள்ள மணமகன், மணமகள், உள்நாட்டில் உத்தியோக மணமகன், மணமகள் சுயதொழில்செய்யும் மணமகன், மணமகள் தேவைகளுக்குத் தொடர்பு கொள்ளவும்.

ராஜீ திருமணசேவை,
158/3,நாவலர் வீதி,யாழ்ப்பாணம்.
T.P.No.0774745647 e-mail-jeya 2629 @ gmail. com


## ஊடகக் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச்24

பாடசாலை மட்டத்தில் ஊடகக் கல்வியை அறிமுகப்படுத்தும் வகையில் தரம் 10 இற்கான ஊடகக் கல்வி நெறிப்படுத்தல் என்னும் கருப் பொருளில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு இன்று செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு இல.84, ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் நடைபெற வுள்ளது.

ஊடகவளங்கள் பயிற்சி நிலையப் பணிப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும்,சிறப்பு விருந்தினராக யாழ். மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரத்தினமும் கலந்துகொள்வர்.

(201-226)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர்
மு.மகேந்திரன் அவர்களின் அன்பு மாமனார்
அமரர் **கணபதிப்பிள்ளை சண்முகலிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை நலன்புரிக் கழகம்.
யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.

(83729)

## மரண அறிவித்தல்



### பத்மராணி சின்னப்பா (வசந்தா)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்டவரான பத்மராணி சின்னப்பா 22.03.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னப்பா, செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் ஸ்ரீ ஐங்கரனின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், புஸ்பநாதன் மற்றும் புஸ்பராணி, தேவிகாராணி, பிரேமராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருஞானம் மற்றும் கெங்காதரன், உத்தமகுணன், இந்திராணி, செல்வராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் செல்வராணியின் அன்பு மாமியும் ஹேமம்பிரியா, அபிலாஷ் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (24.03.2009) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி முதல் மாலை 6 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (25.03.2009) புதன் கிழமை பி.ப.3 மணியளவில் அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ஐங்கரன் (மகன்),
077 6198710

## மரண அறிவித்தல்



### திருமதி சறோஜினிதேவி வேலுப்பிள்ளை

கைதடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி வேலுப்பிள்ளை 22.03.2009 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளையின்(ஓய்வுபெற்ற உதவி அரசாங்க அதிபர், கிளிநொச்சி) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பர் - கற்பகம் தம்பதியரின் மருமகளும் சுரேந்திரன், நிமலேந்திரன், சத்தியேந்திரன், மோகேந்திரன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் பிரபாகினி, சுகாநந்தினி, ஜயந்தினி, சாரதா ஆகியோரின் அன்பு மாமியும் ஜனோன், ஜனினா, அஜனன், அபிதன், வினுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கோடீஸ்வரன்(ஓய்வுபெற்ற யாழ். பிரதம தபாலதிபர்), யோகேஸ்வரன் (ஓய்வு பெற்ற கணக்காளர்), செல்வராஜா (ஓய்வுபெற்ற கிராமசேவையாளர், கைதடி), மகேஸ்வரி,கமலாஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.03.2009 சனிக்கிழமை காலை 8 மணி முதல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மறு நாள் (29.03.2009) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று, பின் பொரளை இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## யார் தலைகீழாக...... நின்றாலும்.....!

இலங்கையின் வட பகுதியில் நடைபெறும் போரை நிறுத்தி தமிழ் மக்களின் அவல நிலையை-மனிதாபிமான நெருக்கடியை-நீக்குவதற்கு ஐக்கிய நாடுகள் உடனடியாகத் தலையிடவேண்டும். இவ்வாறு இந்தியாவில் உள்ள மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை அங்குள்ள சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசினர். அவ்வேளையே அவரிடம் வன்னி மக்களின் பேரவல நிலையைப் போக்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தலையிட வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

வன்னியில் போர்ப் பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் இடம்பெயர்வதாலும் - அடிக்கடி இடம்பெயர்வதாலும் - ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து சந்திப்பின்போது நவநீதம்பிள்ளையிடம் விஸ்தாரமாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது. தடுப்பாரின்றி அங்கு மனித உரிமை துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவது குறித்தும் சிவில் அமைப்புக்கள் புள்ளி விவரங்களுடன் எடுத்து விவரித்து விளக்கிக் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வன்னியின் மனிதாபிமான நெருக்கடியைத் தீர்ப்பதில் இலங்கை அரசாங்கம் எதனையும் உருப்படியாகச் செய்து நிலைமையைச் சீராக்குவதற்கு முற்படும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. அதற்கான நல்ல சமிக்ஞை எதுவும் இன்னமும் காட்டப்படவில்லை. போர்ப் பிரதேசத்தில் சிக்குண்டுள்ள மக்களை வெளியேற்றும் இலக்குடன் மட்டுமே அரசு செயற்படுகிறது. அதனைவிட சர்வதேசப் பிரதிநிதிகளை வன்னிக்குச் செல்வதற்கு அனுமதித்து, அவர்களின் கருத்துக்களை அறிந்து - மனிதாபிமான நெருக்கடியை தீர்க்க வேறு உகந்த வழி - மாற்று வழி, எதனையும் சிந்திப்பதாக இல்லை.

அதனால் சர்வதேசங்களோ - ஐக்கிய நாடுகள் சபையோ - இது விவகாரத்தில் தலையிட வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. அதன்நிமித்தமே மனித உரிமை அமைப்புகள் என்றவகையில், இந்தியா வந்துள்ள ஐ.நா. மனிதஉரிமை ஆணையாளரை சந்தித்து, அதன் தலையீட்டை வலியுறுத்தி உள்ளன எனக் கருதலாம்.

வன்னியில் போரில் கொலையுண்ட மக்களின் எண்ணிக்கை குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் வெளியிட்ட விவரம் ஊதிப்பெருப்பிக்கப்பட்டது எனக்கூறி அவரை - ஐ.நாவைப் - பொய்யனாக்க இலங்கை அரசு ஆவேசத்துடன் செயற்பட்டு வருகிறது. அது வேறு அத்தியாயம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இலங்கை விவகாரம் விவாதத்திற்கு வந்துவிடக்கூடாது. அதற்கான முயற்சியைத் தடுத்துவிட வேண்டும் என்று கொழும்பு அரசு கங்கணம் கட்டிக்கொண்டிருப்பது இன்னோர் அத்தியாயம்.

இத்தகைய பின்னணியில், இந்திய மனித உரிமைகள் அமைப்பின் கோரிக்கை சபைக்கு ஏறுமா என்பது கேள்விக்குரியதுதான்.

வன்னியில் மக்கள் தங்கும் பகுதிகள் மீது - பாதுகாப்புப் பிரதேசங்கள் மீது- கனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதல் நடத்தக்கூடாது என்று படையினருக்கு அரசாங்கம் கடும் உத்தரவு பிறப்பித்திருப்பதாக இலங்கை ஜனாதிபதி, ஐ.நா.வின் பொதுச் செயலாளர் பான்கி-மூனுடன் நடத்திய தொலைபேசிக் கலந்துரையாடலின்போது தெரிவித்திருந்தார்.

அந்த உத்தரவு சரியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றதா என்பதனைக் கண்காணிக்க அல்லது கண்டறிய சுயேச்சையான குழு எதுவும் அங்கு செயற்படுகின்றதா?

உத்தரவு சரியாகக் கடைப்பிடிக்கப்பட்டால் நாளாந்தம் வெவ்வேறு எண்ணிக்கையில் பொதுமக்கள் பலியாவது எதனால்?

தமது பக்கத்தில் எல்லாமே சரியாக, நியாயமாக மனிதாபிமானத்துடனேயே நடைபெறுகின்றன என வாதாடும், பிரசாரம் செய்யும் அரசாங்கம், இலங்கை விவகாரம் ஐக்கிய நாடுகள் சபைக்கு வராமல் தடுப்பதற்கு தனது முழுமையான சக்தியை பயன்படுத்தும் என்பதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

திட்டமிட்டவாறு இராணுவ, அரசியல் இலக்கு எய்தப்படும் வரை வெளியார் எவரும் - சர்வதேசம் - வன்னிப் பக்கமாகக்கால் வைத்தும் படுக்கக்கூடாது என்ற சிந்தனையில் அரசு தோய்ந்துள்ளது.

வன்னியில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்கியபோதே, சர்வதேசப் பிரதிநிதி எவரும் அங்கு தொண்டு நிறுவனம் என்ற முத்திரை ஒட்டிக்கொண்டு தானும் பணிபுரிய அனுமதிக்கக்கூடாது என்று அரசு திட்டமிட்டது.

அந்த வகையில் ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தவிர்ந்த ஏனைய வெளிநாட்டு மனிதாபிமானத் தொண்டு நிறுவனங்கள், பாதுகாப்பு அமைச்சு விடுத்த கடும் உத்தரவை அடுத்து, வன்னி மக்கள் காலைப் பிடித்துக் கதறி அழுதபோதிலும், விருப்பமின்றியே கடந்த ஆண்டு செப்ரெம்பர் 16 ஆம் திகதியுடன் வன்னியைவிட்டு முற்று முழுதாக வெளியேறின. அது எல்லாம் முடிந்த கதை.

இந்த வாய்ப்பாடுகளில் இருந்து, சமன்பாடுகளில் இருந்து, பிறந்துள்ள வெளிப்படையான தேற்றம் என்னவெனில், வன்னி விவகாரத்தில் ஐக்கிய நாடுகள் சபை தலையிடுவதையோ, சர்வதேசப் பிரதிநிதிகள் கண்காணிப்பதையோ இலங்கை அரசு விரும்பாது; விரும்பாது என்ன, தடுத்துவிட நூறு வீதம் முயற்சி செய்யும்.

ஆகையால், இந்திய மனித உரிமை அமைப்புக்களின் கோரிக்கை வெறும் காகித ஓடமாகும் என்றே எதிர்பார்க்கலாம்!

# மின்சார சபையுடனான ஒப்பந்தத்தில் சிக்கல் பணிகளை இடைநிறுத்தியது 'நொதேர்ன் பவர்'

## இதனால் மின்வெட்டு நேரம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்24

இலங்கை மின்சார சபைக்கும் 'நொதேர்ன் பவர்' மின்வழங்கும் நிறுவனத்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட யாழ்ப்பாணத்துக்கு மின் வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் யாழ்ப்பாணத்தில் அந்த நிறுவனத்தின் மின்வழங்கும் பணி இம்மாதம் 8ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய வந்துள்ளது.

இந்தச் சிக்கல்களைத் தீர்த்து அந்த ஒப்பந்தத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் மின்சார சபையின் கொழும்புத் தலைமையகம் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் செயற்பாடுகள் இம்மாதம் 8ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டமையால் யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு நேரத்தை அதிகரிக்கவேண்டிய தேவை மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ளதாகச் சபையின் யாழ்.அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 8ஆம் திகதிவரை 'நொதேர்ன் பவர்' நிறுவனம் இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் மின் நிலையத்துக்கு குறிப்பிட்ட அளவு மின்சாரத்தை வழங்கி வந்தது. இதனால் யாழ்.மாவட்டத்தில் ஆகக் கூடுதலாக ஒரு மணித்தியாலம் மட்டுமே மின்வெட்டு நடைமுறையில் இருந்தது. எனினும் இலங்கை மின்சார சபைக்கும் 'நொதேர்ன் பவர்' நிறுவனத்துக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் சிக்கல் ஏற்பட்டமையால் இம்மாதம் 8ஆம் திகதியுடன் அந்த நிறுவனத்தின் மின்வழங்கும் பணிகள் தடைப்பட்டன.

சுன்னாகம் மின்நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் இம்மாதம் 8ஆம் திகதியிலிருந்து தொழிற்படவில்லை எனவும் இதனால் யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு நேரத்தை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் மின்சார சபை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மின்சார சபைக்குத் தேவையான 32.5 மெகாவாற்ஸ்றில் தற்போது 19 மெகாவாற்ஸ் மின்சாரமே கிடைக்கின்றது. இதனால் மின்வெட்டு நேரம் 2 மணித்தியாலயங்களாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த அதிகாரி மேலும் கூறினார். தற்போது 15 மெகாவாற்ஸ் மின்சாரத்தை வழங்கக்கூடிய நிலையில் 'நொதேர்ன் பவர்' உள்ளபோதும் ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக அது தடைப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

'நொதேர்ன் பவர்' நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்த்து யாழ்ப்பாணத்தில் மின்விநியோகத்தைச் சீர்செய்வதற்கான தீவிர முயற்சியில் மின்சார சபையின் கொழும்புத்தலைமையகம் ஈடுபட்டுள்ளதாகவும் அது வெற்றியளிக்கும் பட்சத்தில் மின்வெட்டு நேரம் குறைக்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (50-4)

# நேர அட்டவணையின் பிரகாரம் யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்ப்பாணத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் நேர அட்டவணையை இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகம் அறிவித்துள்ளது.

இதன்படி ஒவ்வொரு நாளும் வெவ்வேறு நேரங்களில் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதிக்கு தற்போது விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து அகதிகள் வந்த வண்ணமுள்ளதால் உயரதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறையில் இருக்கும். ஏனைய இடங்களில் ஒரு மணித்தியாலம் 45 நிமிடங்கள் முதல் இரண்டு மணித்தியாலங்கள் வரை மின்வெட்டு மேற்கொள்ளப்படும்.

இதே போன்று காலை வேளையிலும் மின்வெட்டு மேற்கொள்ளப்படும்.

| இடங்கள் | நாள் | நேரம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | முதல்நாள்<br>அடுத்த நாள் | மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை<br>இரவு 8 மணிமுதல் இரவு 10 மணிவரை |
| பருத்தித்துறை<br>அச்சுவேலி | முதல் நாள்<br>அடுத்த நாள் | இரவு 8 மணிமுதல் இரவு 10 மணி வரை<br>மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணிவரை |
| தென்மராட்சி | ஒவ்வொருநாளும் | மாலை 6 மணி முதல் இரவு 7.15 மணிவரை |
| மானிப்பாய்<br>காரைநகர்<br>வட்டுக்கோட்டை<br>வேலணை<br>ஊர்காவற்றுறை | ஒவ்வொரு நாளும் | இரவு 7.15 மணி முதல் இரவு 9.15 மணிவரை |
| யாழ்.நகர்<br>சுதுமலை<br>உடுவில்<br>கே.கே.எஸ்.வீதி<br>நவாலி<br>ஆனைக்கோட்டை | ஒவ்வொரு நாளும் | மாலை 6.30 மணிமுதல் இரவு 7.30 மணிவரை<br>இரவு 9 மணிமுதல் இரவு 9.45 மணிவரை |

# இடைத்தங்கல் முகாம்களில் சேவையாற்றுவதற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதி

கொழும்பு,மார்ச்24

வன்னிப் பிரதேசத்திலிருந்து அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி வந்த பொதுமக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிமுகாம்களில் சேவையாற்றுவதற்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கப்படவுள்ளதாக அரசாங்க வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் இடைத்தங்கல் முகாம்களில் பணிகளை மேற்கொள்ள சர்வதேச மற்றும் உள்நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறு வனங்கள் மட்டுமே இதுவரையிலும் இடைத்தங்கல் முகாம்களில் சேவையாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

40 முதல் 45 வரையிலான சர்வதேச மற்றும் உள்நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தாமும் அகதிகளுக்குச் சேவையாற்ற விரும்புவதாகக் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அகதிகளுக்கு வழங்கவுள்ள மனிதாபிமான சேவைகள் குறித்துப் பூரண திட்ட அறிக்கையொன்று அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

## களனி பல்கலைக்கழகம் 26 ஆம் திகதி மீண்டும் திறப்பு

கொழும்பு, மார்ச் 24

களனி பல்கலைக்கழகம் நாளை மறுதிகம் வியாழக்கிழமை மீண்டும் திறக்கப்படுமென களனிப்பல்கலைக்களக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் இரு குழுக்களிடையே இடம்பெற்ற மோதலை அடுத்து பல்கலைக்கழகம் மூடப்பட்டது. எதிர்வரும் 25 ஆம் திகதி மாணவர்கள் பல்கலைக் கழக விடுதிகளுக்கு அனுமதிக்கப்படுவர் எனவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 12 | 25.03.2009<br>புதன்கிழமை |
| திதி: | சதுர்த்தசி<br>மு.இ. 10.10வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி<br>பி.இ. 05.50 வரை |
| சுபநேரம்: | 04.45-06.15 |
| ராகுகாலம்: | 12.15-01.45 |

## முல்லைத்தீவிலிருந்து வந்த 168 பேர் மிருசுவில் நலன்புரி நிலையத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 24

முல்லைத்தீவில் விடுவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து 51 குடும்பங்களைச் சேர்ந்த 168 பேர் யாழ்.வந்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை 36 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேரும் ஞாயிற்றுக்கிழமை 21 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேரும் வந்துள்ளனர்.

வாகனங்களில் கொண்டுவரப்பட்ட இவர்கள் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் மிருசுவில் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளோரின் எண்ணிக்கை ஆயிரத்து 536 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## போக்குவரத்து விதிமுறைகள் குறித்து நேற்று முதல் பொலிஸார் விளக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்.மாவட்டத்தில் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் கடுமையாக நடைமுறைப்படுத்தவுள்ள போக்கு வரத்து விதிமுறைகள் குறித்துப் பொலிஸார் நேற்று வீதிகளில் பயணம் செய்த வாகனச் சாரதிகளுக்கு விளக்கமளித்தனர்.

நேற்றுத் திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 31ஆம் திகதிவரை பொலிஸாரினால் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டின் ஓர் அங்கமாகப் போக்குவரத்து அறிவுறுத்தல்களை வழங்கும் பணியில் போக்குவரத்துப் பொலிஸார் நேற்று ஈடுபட்டனர்.

நகரப் பகுதியில் உள்ள பிரதான சந்திகளில் நேற்றுக்காலை முதல் மாலைவரை பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்ததைக் காணமுடிந்தது.

எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (50-224-9-51-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் வாகன பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், மார்ச்.24

மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்துக்கு மோட்டார் வாகனப் பரிசோதகர்களை ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பரீட்சை யூன் மாதம் கொழும்பில் நடைபெறும். பரீட்சார்த்தி 18-45 வயதுக்கிடைப்பட்டவராகவும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் மூலம் அல்லது அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியால் வழங்கப்படுகின்ற தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது தேசிய பயிலுநர் மற்றும் கைத் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா அல்லது உயர்கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்டுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடத்தப்படுகின்ற எந்திரவியல் பரீட்சையின் முதலாம் பகுதி சித்தியெய்திய சான்றிதழ் அல்லது மேற்குறித்த தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவைச் சபையினால் ஏற்றுக் கொள்ளக் கூடியதென்று அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிற தகைமையைக் கொண்டிருத்தலுடன் 2 வருட மேற்பார்வை மட்டத்திலான அனுபவத்துடன் சகல விதமான மோட்டார் வாகன ஓட்டுதலுக்கான சாரதி அனுமதிப் பத்திரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் பரீட்சைக்கட்டணமாக 350 ரூபா செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டையும் இணைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 20.03.2009 ஆம் திகதிய அரசாங்க வர்த்த மானியைப் பார்க்கவும். (203-7)


## SRI LANKA RED CROSS SOCIETY

### Vacancies for Community Mobilizers

SLRCS Branch Jaffna office invites application for the post of community Mobilizers to work in Tsunami housing projects on contract basis.

1. **No of Posts** - 02
2. **Place of work** - Jaffna District (Point Pedro, Ampan, Kudaththanai, Manatkadu)
3. **Contract period** - 06 months (renewable)
4. **Qualifications** -
   Should have GCE A/L with a minimum of two years experience as a community mobilizer in Tsunami housing construction, Community Watsan, Infrastructure & Livelihood activities in Public sector, Non governmental organization or International agencies
5. **Applicants should have an own Motorbike with driving license.**
6. **Closing Date** - 03.04.2009
7. **Salary** - Attractive

Please apply with Bio Data and copies of certificates and contact numbers to the following address.

**Branch Executive Officer**
**SLRCS Branch,**
**No.73, Kandy Road,**
**Jaffna.**


# மெய்வன்மைப் போட்டி

சங்கானை, மார்ச் 24

சங்கானை ஸ்தாபன அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி ச.நாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1-29)

## ஓராண்டு நினைவஞ்சலி



**அமரர் சதாசிவம் இரட்ணபாலா (இத்தாலி)**

திதி: 24.03.2009

ஜனனம் 19.10.1958 | மரணம் 04.04.2008

பாசமொடு பண்புகள் பல நிறைந்து
நேசமொடு எங்கள் மனங்களை நெகிழவைத்து
வாசமலராய் வலம் வந்த எங்கள் ஒளிவிளக்கே
தேசம்விட்டு விண்ணுலகம் வாசம் கொண்டீரோ?
மறைந்திடுமோ உங்கள் நினைவுகள் - உங்களை
மறந்திடுமோ எங்கள் இதயம்

புகையிரத வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். **குடும்பத்தினர்.**

(83686)

## தேவை

தனியார் வைத்திய நிலையத்தில் பணிபுரிய, பணி பழக O/L படித்த பெண் பிள்ளைகள் தேவை.

தொடர்பு: **Medi Care Clinic**
ஆடியபாதம் வீதி, கொக்குவில்மேற்கு.
(4.00 pm - 6.00 pm)

## தவறிவிட்டன

அரசசார்பற்ற நிறுவனமொன்றில் கடமைபுரியும் இராசசிங்கம் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய செலஸ்ரீன் பெர்ணபேத் என்பவரின் தொழில் அடையாள அட்டையும், அதே முகவரியுடைய இராஜரத்தினம் நசீரா என்பவரின் தே.அ.அட்டையும் (836972015V) இருபாலைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.


# திருமறைக் கலாமன்றம்

தயாரித்து வழங்கும்

## தவக்கால ஆற்றுகை

# கல்வாரி யாகம்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம் : மார்ச் 29, 30, ஏப்ரல் 01, 02, 04, 05, – 2009
(ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், சனி, ஞாயிறு)
நேரம்: மாலை 6.00 மணி
இடம்: திருமறைக் கலாமன்ற அரங்கு

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை இன்றுமுதல் யாழ்.திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
T:P/Fax: 021 222 2393

திருமறைக் கலாமன்றம்.


## விழி சுரக்கும் கண்ணீரால் நாம் செலுத்தும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 07.08.1931

மறைவு: 24.03.2008

அமரர்
**நா.பொன்னுத்துரை**

'இறைவனோடு என்றும் இன்புற்று
இருக்கவும் இனிய அன்பை இனிதே
பெற்றிட இறைவா நீ உதவிடுவாய்

கனத்த இரவுகளில் எம்
காலங்கள் கழிந்ததேனோ?
தனித்த பொழுதுகளாய் - எம்
தடங்கள் பதிந்ததேனோ?
அன்பான அப்பாவே
உம் பிரிவின் கனதியால்
கலைந்து போனது எம் கனவுகள்
கோடி ஆண்டுகள் சென்றாலும்
கொண்ட பாசம் விலகிடுமா?
இறைவனின் குளிர் நிழலில்
இணைந்து நீர் செபித்திடுவீர்
எம் இன்னலற்ற வாழ்வுக்காய்

என்றும் உம் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி.

சில்லாலை தெற்கு,
பண்டத்தரிப்பு.

# First Death Anniversary

&

Remembrance of

## The Rev.Daniel Rajaratnam Ampalavanar M.A., B.D

(Retired Pastor J.D.C.S.I)

Born 1924 08 05 | Entered Glory 2008 03 23



''God has called him to his mansion
To augment the choir on high
Sweet refreshment be his portion
In God's loving presence nigh
May his prayers support and help us
Keep us faithful, keep us whole
As we work for truth and goodness
Till we reach our heavenly goal''

(83730)

Word 01,
Pungudutivu.

FAMILY MEMBERS
BISHOP & PASTORS OF THE J.D.C.S.I.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை காங்கேஸ்



18/8, கொண்டலடி லேன், நல்லூரைப் பிறப்பிடமாகவும் கனடாவில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை காங்கேஸ் நேற்று (23.03.2009) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை-சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், சண்முகம்-அம்மாக்குட்டி தம்பதியரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும், சுரேஸ் (லண்டன்), சுகந்தி(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசுவின் அன்புச் சகோதரனும், அன்ரன் கீதராஜ்(கனடா), அஜித்தா(லண்டன்) ஆகியோரின் மாமனும், லெட்சுமி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னம்மா, தம்பையா, சின்னத்துரை மற்றும் பொன்னுத்துரை (அவுஸ்திரேலியா), இராசமணி(கனடா), சரவணமுத்து, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி(லைபிரியா), சரத்சந்திரன்(கனடா), சொல்வேந்தன் ஆகியோரின் மைத்துனரும் யாகுலன், சிந்துஜா, கௌசிகா, கௌதமன், சுதாரணி, யாதவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருநாவுக்கரசு
(சகோதரன்).

18/8, கொண்டலடி லேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(83724)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆனைக்கோட்டை கரைப்பிரான் வீதியில்

# அனுமதியின்றி இயங்கிவந்த மாலை நேரச் சந்தை முதலாம் திகதி தொடக்கம் இயங்கத்தடை

நவாலி, மார்ச்.24

ஆனைக்கோட்டை கரைப்பிரான் வீதியில் அனுமதியின்றி இயங்கிவந்த மாலை நேர மீன் சந்தை ஏப்ரல் முதலாம் திகதி முதல் இயங்குவதற்கு மானிப்பாய் பிரதேச சபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தை நீண்ட காலமாக இவ் வீதியில் இயங்கி வருகிறது. இச்சந்தையால் மக்களின் போக்குவரத்து தடைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

பழுதடைந்த மீன்கள் அதிலிருந்து வெட்டப்படும் கழிவுகள் என்பன அப்பகுதியில் கொட்டப்படுவதால் துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதாரத்திற்கு பங்கமும் ஏற்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதியில் குடியிருக்கும் மக்களும் பல கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவற்றைக் காரணம் காட்டி பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து பிரதேச சபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட மீன் வியாபாரிகள் இனிமேல் நவாலி, சாவற்கட்டு, மானிப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள சந்தைகளில் மீன் வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு அவர் அறிவித்துள்ளார்.

இவ் விதிகளை மீறுவோர் மீது பொலிஸாரின் உதவியுடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (203-100)

### அதிபர் சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு பெறுவதற்கு

# யாழ்.மாவட்டத்தில் இருந்து 7 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 32 பேர் தெரிவு

அச்சுவேலி, மார்ச்.24

இலங்கை அதிபர் சேவை வகுப்பு-3 இல் இருந்து அதிபர் சேவை வகுப்பு 2-II இற்கு சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு பெறுவதற்கு யாழ்.மாவட்டத்தில் ஏழு பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 32 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களின் சேவை தொடர்பான உறுதிப்படுத்தல் ஆவணங்கள் பொருத்தமான முறையில் இல்லாது இருப்பதால் பதவி உயர்வு நியமனக் கடிதங்களை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்துள்ளார்.

சேவை மூப்பு அடிப்படையில் இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இல் இருந்து அதிபர் சேவை வகுப்பு2-II இற்குப் பதவி உயர்வுகளை கல்வி அமைச்சு வழங்கியிருந்தது.

இந்த வகையில் பதவி உயர்வு பெறுவதற்கு வடக்கு மாகாணத்தில் 32 பேர் தகுதி பெற்றுள்ளனர்.

பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி பெற்றிருப்பவர்களின் நியமனம், பதவி ஏற்பு மற்றும் சேவை தொடர்பான உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் இதுவரை சம்பந்தப்பட்டவர்களினால் சமர்ப்பிக்கப்படவில்லை.

இது தொடர்பாக வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் [illegible]த்தனியாக சம்பந்தப்பட்டவர்களுக்குக் [illegible]தங்களை அனுப்பி வைத்துள்ளது.

அதில் அவர்கள் உட[illegible]டியாகச் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பாக விவரமாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

உரிய வேளையில் கேட்கப்பட்ட ஆவணங்களை வலயக் கல்விப் பணிப்பாளர்களின் உறுதிப்படுத்தலுடன் சமர்ப்பிக்கத் தவறும்போது பதவி உயர்வுகளை பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-11)

# அதிபர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டோர் விவரம் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது

அச்சுவேலி, மார்ச்.24

இலங்கை அதிபர் சேவையில் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டுள்ள அனைவரினதும் பெயர், மற்றும் சேவை விவரக் குறிப்பு உள்ளடங்கிய முழுமையான தகவல்களும் கல்வி அமைச்சினால் இணையத் தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி விவரங்களை ஒப்புநோக்கித் தவறுகளைத் திருத்துவதற்கு விண்ணப்பிக்குமாறு கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

கல்வி அமைச்சு தனது செயற்பாடுகளைக் கணனிமயப்படுத்தி சேவை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வுகள் மற்றும் வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் தகவல்களை திருத்தமான முறையில் பெற்றுக்கொள்வதற்கு ஏற்புடைய வகையில் அதிபர் சேவையில் உள்ளவர்களின் முழுமையான விவரங்களையும் கல்வி அமைச்சின் தளத்தில் www.moe.gov.lk. என்ற இணையத்தளத்தில் மாகாண ரீதியாக வெளியிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிபர்கள் ஒவ்வொருவரும் தமது விவரங்களை ஒப்புநோக்கித் திருத்தங்களை கல்வி அமைச்சுக்கு அறிவிப்பதற்கான விண்ணப்பப்படிவமும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தங்கள் தொடர்பான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் நாளை புதன்கிழமையாகும்.

விண்ணப்பங்களை அனுப்புவதற் கான இறுதித்தினம் நீடிக்கப்படலாம் எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவைச் சங்கத்தின் உப தலைவர் ஏ.சி.எம்.ஜவகர்ஷா கருத்துத் தெரிவிக்கையில்:-

கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள விவரங்களை ஒப்புநோக்கி உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதவிடத்து எதிர் காலத்தில் பதவி உயர்வு உள்ளிட்ட பல்வேறு சேவைகளையும் பெற்றுக் கொள்வதில் தடங்கல்கள் ஏற்படும் என்றும் தெரிவித்தார். (203-11)

# உள்ளூர் உ.கிழங்கின் வருகையால் வெளியூர் கிழங்கு விலை குறைந்தது

யாழ்ப்பாணம், மார்ச்.24

உள்ளூர் உருளைக்கிழங்கு அதிகளவில் சந்தைக்கு வந்து சேர்வதை அடுத்து கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட உருளைக்கிழங்கின் விலையும் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் கப்பல் மூலம் தருவிக்கப்பட்ட வெளியூர் உருளைக்கிழங்கு கிலோ 80 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதே சமயம் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு கிலோ 60 ரூபா முதல் 70 ரூபா வரை விற்கப்படுகின்றது.

இந்த உருளைக்கிழங்கின் அறுவடை முழுமையாக ஆரம்பித்துள்ளதால் அதன் விலை மேலும் வீழ்ச்சியடையலாம் என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (203-224)




# ஈழ மண்டல சதகம் புதிய பதிப்பாக வெளிவரும்

யாழ்ப்பாணம், மார்ச்.24

தமிழ் உரையாசிரியர் - மட்டுவில் ம.க.வேற்பிள்ளை ஆக்கிய இலக்கிய நூலான ஈழ மண்டல சதகம் என்ற நூல் புதிய பதிப்பாக மீண்டும் வெளிவரவுள்ளது.

இந்த நூல் மிகவும் பழமை வாய்ந்தது. அழியும் நிலையில் இருந்த இந்த நூல் பேராசிரியர் சிவலிங்கராஜாவின் முயற்சியினால் மட்டுவில் திருக்கணித பதிப்பக உதவியுடன் மீள் பதிப்பாக வெளிவரவுள்ளது.

இந்த நூலில் ஈழத்தின் பழமையும் பெருமையும் கொண்ட வரலாறுகள் பல வெளிவந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-131)

# ஒரு கிராமத்தின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அவசியம்

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்.24

ஒரு கிராமத்தின் சமூக பொருளாதார , கல்வி , கலாசார வளர்ச்சிக்கு சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிகவும் அவசியமானது.



இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் தலைவர் ஆ.தேவராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:-

''கிராம மட்ட அடிப்படை நிறுவனங்களில் சனசமூக நிலையங்களும் ஒன்றாகும். யாழ்.மாநகர சபைப் பகுதியில் இயங்கும் முதன்மைச் சனசமூக நிலையங்களுள் சரஸ்வதி சனசமூக நிலையமும் ஒன்றாகும். மக்களின் குறைகளைக் கண்டறிந்து அக்குறைகளை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். கிராம மக்கள் சனசமூக நிலையத்துடன் இணைந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலம் கிராம மக்களின் சமூக, பொருளாதார, கல்வி, விளையாட்டு, கலாசார அபிவிருத்தியை நிச்சயமாக ஏற்படுத்த முடியும்.

எமது மாநகர சபை நிதி நிலமை அபிவிருத்தி அடைந்த பின் எம்மாலான உதவிகளை நிச்சயம் செய்வோம். எமது மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் குறைபாடுகளைத் தீர்ப்பதற்கு வேண்டிய நிதியைப் பெறுவதற்கு அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளோம். நிதி கிடைத்ததும் எம்மாலான உதவியை இச் சனசமூக நிலையத்துக்குச் செய்வோம் என தெரிவித்துக் கொள்கிறேன்.

தனது ஊரிலுள்ள சனசமூக நிலையம் அரசினதோ அன்றி அரச சார்பற்ற நிறுவனங்களினதோ நிதி உதவியை எதிர்பாராது வெளிநாடுகளிலுள்ள ஊர் மக்களின் பங்களிப்புடன் மக்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடிய பல சேவைகளைச் செய்வதாகக் கூறி அது போல் நீங்களும் பிற நாடுகளில் வாழும் இந்த ஊர் மக்களின் உதவியைப் பெற்று சனசமூக நிலையத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

மேற்படி கருத்தரங்கில் அரியாலை, சரஸ்வதி சனசமூக நிர்வாகிகளும், கிராம மக்களும், யாழ். மாநகர சபை ஆணையாளர், செயலாளர், பொறியியலாளர், யாழ். பொது நூலக பிரதம நூலகர் உள்ளிட்ட பல முக்கிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (9)

# நலன்புரி நிலைய மக்களுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

நல்லூர், மார்ச் 24

இடம் பெயர்ந்த மக்களுக்கு உதவும் நடவடிக்கையாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளை கைதடி நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்காக 25 போத்தல் நல்லெண்ணை, 400 மெழுகுதிரி, 300 பாய், 400 டசின் தீப்பெட்டி, 200 புடைவைகள், 200 சாரம், 70 ரீசேட், பெண்களுக்கான ஆடைகள், சேட் 200, சவர அலகுகள் 400 ஆகியவற்றை வழங்கியுள்ளது.

குறிப்பிட்ட பொருள்களை பொறுப்பேற்பதற்கு ஆவன செய்யுமாறும் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் யாழ்.கிளையின் செயலாளர் என்.பாலகிருஷ்ணன் கேட்டுள்ளார். (203-111)



யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம் கடந்த சனிக்கிழமை குருநகர் கலாசார மண்டபத்தில் இலவச மருத்துவ முகாமை நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கலந்து கொண்டோரை முதலாவது படத்திலும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் லயன் ப.கிரிதரன் உரையாற்றுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

மருத்துவ முகாமில் டாக்டர் நோயாளர் ஒருவரை பரிசோதனை செய்வதை மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்:நந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்

## உதவிதேவையானோருக்கு உதவத் தயங்காதீர்

இளைஞர், யுவதிகள் சமய தத்துவக் கருத்துக்களை மனிதநேயம் மலர மண்ணில் மனங்களில் அமைதி வளர, பரவ போதித்து வருவதைப் பல அமைப்புகளின் பெயரில் பார்க்கிறோம்.

ஆனால் 14.03.2009 அன்று பி.ப.4 மணி இருக்கலாம் கஸ்தூரியார் வீதியில் ஓர் மூத்த பிரஜையை, ஓர் சமூகத் தொண்டரை ஏதோ ஒரு வாகனம் மோதி படுகாய மடையச் செய்து விட்டது. நாசியினால் குருதி வடிய 30 நிமிடங்களுக்குமேல் அதே இடத்தில் நாதியற்ற நிலை, தலையில் பலத்த அடி எவருமே அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவோ, முதலுதவி செய்யவோ முயலவில்லை. எல்லோரும் வேடிக்கை பார்த்த நிலை. அவர் செய்த தொண்டின் பயன் என்னவோ அவர் இல்லத்தின் அயலில் வசிக்கும் ஒருவர் அவ்வழியால் வந்து இனங்கண்டு வைத்தியசாலையிலும் சேர்த்தார். இன்றுவரை சிகிச்சை நடைபெறுகிறது. நடந்தது என்னவென்று அச்சூழலில் விசாரித்ததில் எவரும் சொல்வது ''தெரியாது'' மூத்த பிரஜையின் அடையாள அட்டைவேறு அவர் பையில் இல்லை. மனிதநேயம் செத்து விட்டது. மனங்கள் மரத்துப் போய் விட்டன. உதவி செய்தால் உபத்திரவம்; என்ற பயம்வேறு வகை கூற துணிச்சலற்ற நிலை. போதனைகள் வெறும் போதனைகளாகவே அவை செயலில் இல்லை. சாதனை செய்ய சூழ்நிலை இல்லையே என்ற குரலும் கேட்கிறது. சத்யம் வெல்லும் சகலருக்கும் இதில் நம்பிக்கை உண்டு. தாமதம் ஏற்பட்டால் ஓர் உயிர் தாட்சண்யமின்றிப் போயிருக்கும். குறிப்பாக இப்படியாக விபத்துக்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மனித நேயத்துடன் உதவி தேவை யானவர்களுக்கு உடன் உதவத் தயாராவோம்.

*உரும்பிராய்.* **அன்னைதாஸன்.**

## முழுநேர மின்சாரம் - பகற்கனவா?

சென்ற வருடத்தின் பிற்பகுதியில் இருந்து பல தடவைகள் பிராந்தியப் பத்திரிகைகளிலும் தேசியப் பத்திரிகைகளிலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு 24 மணி நேர மின்சாரம் என அறிக்கைகள் பல அதிகாரிகளாலும், அரசியல் வாதிகளாலும் வெளிப்படுத்தப்பட்டன. மிக விரைவில் முழு நேர ஒளியைப் பெறுவோம் என அனைவரும் நம்பினார்கள். ஆனால் நிலைமை மிக மோசமாகிறதே ஒழிய சீராகவில்லை.

பொற்பதி வீதி, கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் எங்களின் நிலை மிகவும் பிரதாபகரமாக உள்ளது. இரவில் 1 மணி நேரம் இருந்த மின்வெட்டு 2 மணி நேரமாகிவிட்டது. அதிகாலையிலும் மின்வெட்டு இடம்பெறுகிறது. மாணவர்களின் சுய படிப்பிற்கும், அறிவுப் பசி கொண்டவர்களின் தேடலுக்கும் உரிய நேரமாக இரவுப் பொழுதும் அதிகாலை நேரமுமே உள்ளன. இந்த இரண்டு நேரமுமே இருளாகி விட்டால் அறிவற்ற மந்தைக் கூட்டமாகவே நமது அடுத்த சந்ததி மாறிவிடும்.

தமிழ் மாணவன் நலன், தமிழர் சமுதாய நலன் என்பவற்றில் ஈடுபாடுகொண்ட அதிகாரிகள், அரசியல் வாதிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஆக்க பூர்வமாக அறிக்கைகள் மட்டும் விடாது, செயல் வடிவமாக்கி மின் ஒளி பூரணமாகக் கிடைக்க ஆவன செய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

பெருமைக்கும் ஆனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல் என்பதே தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கும் ஆகும்.

**சிவ.மகாலிங்கம்.**

## மகளிர் துடுப்பாட்டம் யாழ்ப்பாணத்திலும் அறிமுகமாகுமா?

மார்ச் 7 ஆம் நாள் மகளிர் உலகக்கிண்ணத் துடுப்பாட்டப் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் ஆரம்பித்தமை பலரும் அறிந்ததே. இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மே.இந்தியத் தீவுகள், தென்னாபிரிக்கா மாத்திரமின்றி தென்னாசிய நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளும் பங்கேற்கும் போது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை துடுப்பாட்டம் ஆண்களின் விளையாட்டாக மட்டுமே கருதப்படுகிறது.

ஒரு சில 5-பந்துப் பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய மகளிருக்கான மென்பந்துப் போட்டிகள் நடைபெற்றிருக்கின்ற போதிலும் சரியான வழிகாட்டல்களும் பயிற்சியுமற்ற போட்டிகளாகவே அவை இடம்பெற்றிருந்தமையாலும் ஆர்வமுள்ள பலர் அறியாதிருந்தமையாலும் சரியான தகைமை வெளிப்படுத்தல்களுக்கு இடமிருக்கவில்லை. துடுப்பு, பாதுகாப்பு கவசங்கள் போன்றவற்றைப் பெறுவதற்கு பணத் தேவைகள் இருக்கவே செய்கிறது. ஆனால் இவற்றை மாத்திரம் கருத்தில் எடுத்து பயிற்சிகளை ஆரம்பிப்பதை பின் போடுவது முறையல்ல. ஆண்களுக்கே சரியான பயிற்சிகளும் மைதானங்களும் இல்லாதபோது பெண்களுக்கு எப்படி ஆரம்பிப்பது என்று சிலர் வாதிடலாம். ஆனால் இன்று யாழ்.மகளிரைப் பொறுத்தவரை அவர்கள் மத்தியில் பிரபலம் பெற்ற விளையாட்டுக்களை எடுத்து நோக்கின் துடுப்பாட்டமே முதலிடம் வகிக்கின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். மாவட்ட அளவிலான ஓர் அணியை உருவாக்குவதற்கு யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் முதலான சம்பந்தப்பட்ட அமைப்புகள் முன்வருமா? பகிரங்க அழைப்பை விடுப்பதன் மூலம் ஆர்வமுள்ளவர்கள் பங்கெடுக்க வாய்ப்புக்கள் வழங்கப்படுமா? மகளிர் உலகக்கிண்ணத்தைத் தொடர்ந்து மகளிருக்கான T 20 நடைபெற உள்ள இக்காலத்திலும் கூட இம் முயற்சி அவசியமற்றதாகக் கருதப்படுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல. இவ்விடயம் சம்பந்தமாக உரியவர்களின் ஆக்கபூர்வமான நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம்.

*யாழ்ப்பாணம்.* **சாயினி.**

## பிழையான தகவல் தந்துள்ளனர்

05.03.2009 அன்று உதயன் பத்திரிகை வாசகர் திருமுகம் பகுதியில் பிரசுரமான வீதியைத் திருத்தும்போது சிறார்களின் சுகத்தையும் கவனியுங்கள்'' என்னும் பகுதி தொடர்பான விளக்கம்

நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 13 வீதிகள் UNOPS நிறுவனத்தினரால் சபை ஊடாக புனரமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பத்திரிகையில் பிரசுரமான சங்கத்தானை முதலாம் ஒழுங்கையும் அடங்கும்.

வீதி திருத்த வேலைகள் கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் இவ் வீதிக்கும் மக்கி போடப்பட்டு பரவப்பட்டது. இவ்வீதியைப் பயன்படுத்தும் மக்களின் ஏகோபித்த சம்மதத்துடனும் அவ்வூர் மக்களின் பங்களிப்பினாலும் தான் அவ்வேலை செய்யப்பட்டது.

ஒரே நேரத்தில் 13 வீதி வேலைகளும் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் மாணவர்களின் நலன் கருதி எனது விசேட பணிப்பின் பேரில் ஒன்று விட்ட ஒரு நாள் பவுசர் மூலம் வீதிக்கு தண்ணீர் ஊற்றப்பட்டு வருகின்றது. இது தொடர்பாக ஆரம்பப் பாடசாலை அதிபருடன் உரையாடியுள்ளேன். இவ்வீதி தொடர் வேலையாக UNOPS நிறுவனத்தால் மக்கள் பங்களிப்புடன் தார் வீதியாக செய்யப்படவுள்ளது என்பதையும் தங்கள் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

வீதிவேலைகள் தொடர்பான விவரங்கள் அறியாத பெற்றோர் ஒரு பிழையான தகவலை தங்கள் பத்திரிகைக்கு வழங்கியுள்ளார்கள் என நினைக்கிறேன்.

*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி.*

**செயலாளர்,**
*நகரசபை, சாவகச்சேரி.*

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹா

## திருமண அழைப்பு

நிகழும் சுபமங்களகர சர்வதாரி வருஷம் பங்குனித் திங்கள் 14ஆம் நாள் 27.03.2009 வெள்ளிக்கிழமை மு.ப. 9.45 மணிமுதல் 10.15 மணிவரையுள்ள இடப லக்கினமும், ரேவதி நட்சத்திரமும், அமிர்த சித்த யோகமும் கூடிய சுப வேளையில்

| | |
|---|---|
| திரு.திருமதி கிருஷ்ணசாமி பத்மநாதன் | திரு.திருமதி இரத்தினம் மகேஸ்வரன் |
| தம்பதியரின் | தம்பதியரின் |
| சிரேஷ்ட புத்திரன் திருநிறைச் செல்வன் | ஏக புத்திரி திருநிறைச் செல்வி |
| **சியாம்ம கிருஷ்ணா** *(சியாம்)* | **வித்தியா** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் திருமணம் நிறைவேற பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்களை குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லத்தில் 28 ஆம் திகதி பி.ப. 3 மணி
மணமகள் இல்லத்தில் 30ஆம் திகதி பி.ப.3 மணி.
இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டி
இங்கனம் தங்கள் நல்வரை நாடும்.

| | |
|---|---|
| திரு.திருமதி கிருஷ்ணசாமி பத்மநாதன் (குடும்பம்) | திரு.திருமதி இரத்தினம் மகேஸ்வரன் |
| *1203, காங்கேசன்துறை வீதி,* | 45/4, பூநாறி லேன், |
| *யாழ்ப்பாணம்.* (83710) | கொக்குவில் மேற்கு, கொக்குவில். |


# பொதுமக்களின் பாதுகாப்புக் கருதியே வன்னியில் மெதுவான படை நகர்வு

## போர் முடிவுற ஒரு வாரமும் ஆகலாம் ஒரு மாதமும் ஆகலாம்

கொழும்பு, மார்ச் 24

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கு அரசு மும்முரமாக நடவடிக்கைகளை எடுப்பதால் இராணுவ முன்னகர்வுகள் மிக மெதுவாகவே முன்னெடுக்கப்படுகின்றன என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் முல்லைத்தீவின் முன்னரங்குகளிலேயே இன்னமும் உள்ளனர் எனவும் இடம் பெயர்ந்து வந்த மக்களில் சிலர் அவர்களைப் பார்த்துள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

''இராணுவத்தால் அவர்களைக் கைது செய்ய முடியாவிட்டால் அவர்கள் தற்கொலை செய்துகொள்வார்கள், தலைமைத்துவம் அழிக்கப்பட்டதும் அந்த அமைப்பு சிதறுண்டுவிடும். ஹிட்லர் கூட இறுதி நேரம்வரை தான் வெல்லலாம் என்று நினைத்தார்'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் மீதமுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு எவ்வளவு காலமெடுக்கும் என்பதைத் தெரிவிக்க பாதுகாப்புச் செயலாளர் மறுத்துள்ளார்.

''என்னால் காலவரையறையொன்றைத் தெரிவிக்க முடியாது. முதலில் பொது மக்களை வெளியேற்ற வேண்டும். அதன் பின்னர் நிலங்களை எமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரவேண்டும்'' என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்காகத் தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதால் படையினர் மிக மெதுவாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினர் வன்னியில் தமது நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கான தூரம் வெகு தொலைவில் இல்லை, அது ஒரு வாரமும் ஆகலாம் அல்லது மாதமுமாகலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மேல்மாகாண வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் கையளிப்பு

கொழும்பு, மார்ச் 24

எதிர்வரும் மேல்மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்று தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் படவுள்ளன. தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் இவற்றைத் தபால் மா அதிபரிடம் ஒப்படைப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாக்காளர் அட்டைகள் அனைத்தும் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் இவை தபால் நிலையங்களுக்கு அடுத்த மாதம் ஆறாம் திகதி அனுப்பப்படும் என்று தபால் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இவ்வாக்காளர் அட்டைகள் அடுத்தமாதம் 11ஆம் திகதிமுதல் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்பதற்காக 35 ஆயிரத்து 421 பேர் தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் கொழும்பைச் சேர்ந்த 8 ஆயிரத்து [illegible] பேரும் கம்பஹாவைச் சேர்ந்த 15 ஆயிரத்து 796 பேரும், களுத்துறையைச் சேர்ந்த 10 ஆயிரத்து 926 பேரும் அடங்குகின்றனர்.

தபால்மூல வாக்கெடுப்பு ஏப்ரல் மாதம் இரண்டாம் மற்றும் மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இறுதி வாக்கெடுப்பு ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறும்.

(சி)

## முதலாம் ஆண்டின் பிரிவில் நினைவாக ...

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 03 |
| 11 | 04 |
| 1925 | 2008 |



**அமரர் கார்த்திகேசு சின்னத்தம்பி**
*(தர்மகர்த்தா மல்வில் கிருஷ்ணன் கோயில்)*

திதி: திரியோதசி

ஆண்டொன்று கழிந்த போதும்
எம் தந்தையின் நினைவு இன்றும்
எங்கள் முன் நிழலாடுகிறது
எமை வாழ வைத்த தெய்வமே
நாம் மறவோம் உங்களை என்றுமே
பரந்தாமன் பாதங்களில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் நினைவுடன்:
*சங்கம் வீதி,*
*சங்கத்தானை, சாவகச்சேரி.* **குடும்பத்தினர்.**

(83711)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்கு அருகில் இருந்து பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும்

## நடேசன் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 24

இந்தியாவின் நலன்களுக்கு எதிராக நாம் ஒருபோதும் செயற்படவில்லை. எமக்கு அருகில் இருந்து பிரச்சினையில் இந்தியா தலையிடவேண்டும்.

விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து ஒளிபரப்பாகும் சி.என்.என்.ஐ.பி. தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ்வியில் அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது பகுதியில் உள்ள மக்களை முதலில், 'சிக்கியுள்ள மக்கள்' என்ற சொல் பயன்படுத்தப்படுவது முறையானது அல்ல. இது அவர்களின் நிலம். அவர்கள் தலைமுறை தலைமுறையாக அங்கு வாழ்ந்து வருகின்றனர். சிறிலங்கா அரசு அந்த மக்களை அவர்களின் வாழ்விடங்களில் இருந்து துரத்தும்வரை அங்கு மக்கள் வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்கள் 'சிக்கியுள்ள மக்கள்' அல்ல. தமது பழைய வாழ்க்கையை மீண்டும் பெற்றுக்கொள்ள அவர்கள் போராடி முயற்சித்து வருகின்றனர்.

வெளிவந்து கொண்டிருப்பவை எல்லாம் வதந்திகள்தான். தலைவர் இங்கு எமது மக்களுடன் தான் வாழ்கின்றார் என்பதை என்னால் உறுதிப்படுத்த முடியும்.

இந்தியாவின் நலன்களுக்கு எதிராக நாம் எப்போதும் செயற்பட்டதில்லை, அவ்வாறு செயற்படும் நோக்கமும் எமக்குக் கிடையாது. இந்தியாவின் தென்முனையினது பாதுகாப்பு, தமிழீழ மக்களின் அரசியல் நல்வாழ்வோடும் பாதுகாப்போடும் தான் பின்னிப் பிணைந்துள்ளது.

நிபந்தனைகள் அற்றதும், தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை உள்ளடக்கிய அரசியல் தீர்வை கொண்டதுமான பேச்சுக்களில் ஈடுபட நாம் எப்போதும் தயாராகவே இருக்கின்றோம்.

இந்த பிராந்தியத்தின் வலிமை மிக்க நாடு இந்தியா. அது எங்களின் நண்பன்.

இந்தியா எப்போதும் எமது பக்கத்தில் இருந்து தமிழர் பிரச்சினையில் தலையிட வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

உள்நாட்டு விவகாரங்கள் தொடர்பாக எல்லாக் கட்சிகளும் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருப்பது உண்டு. ஆனால், அவை தொடர்பாக நான் கருத்துக் கூறுவது பொருத்தமானதாக இருக்காது.

இருந்த போதும் ஈழத் தமிழ் மக்களுக்காக எல்லா தமிழக மக்களும் ஒன்றிணைந்து இருப்பது தமிழீழ மக்களுக்கு மகிழ்வைத் தருகின்றது.

இன்று ஈழத் தமிழ் மக்களின் பலமாக இருப்பது தமிழக மக்களினதும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களினதும் ஆதரவுகள்தான் என்றார்-பா.நடேசன்.

## தென்மராட்சி கல்விவலய முறைசாராப் பிரிவினரால் பயிற்சி

தென்மராட்சிக் கல்வி வலய முறைசாரக் கல்விப் பிரிவினர் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.யில் உள்ள சமூக கற்கை நிலையத்தில் பின்வரும் பயிற்சிநெறிகளை ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கவுள்ளனர்.

வருமானக் கற்கை நெறிகளான பூவேலை மற்றும் எழுத்தறிவூட்டல், ஆங்கிலமொழி அறிவு விருத்தி ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வித்தியாலய அதிபரிடம் உரிய விண்ணப்ப படிவங்களைப் பெற்று விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (203-207)

# கச்சதீவை புனித பிரதேசமாக்கும் இலங்கையின் முடிவுக்கு மத்திய அரசும், தமிழக அரசும் உறுதுணையாக உள்ளனவா?

## ஜெயலலிதா கண்டனம்

கொழும்பு, மார்ச் 24

கச்சதீவைப் புனித பிரதேசமாக மாற்றுவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை



எடுத்து வருவதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்த கருத்துக்கு தமிழகத்தின் அ. தி. மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா கண்டனம் தெரிவித்துள்ளார். இலங்கையில் பொது மக்களை அழிப்பதற்கு உறுதுணையாக இருந்தது போன்று, கச்சதீவு குறித்த அறிவிப்புக்கு அவை இரண்டும் உறுதுணையாக உள்ளனவா என்றும் அவர் சாடியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருப்பவை வருமாறு :-

இலங்கை அமைச்சர் தினேஷ் குணவர்தன கச்சதீவை புனிதப் பகுதியாக அறிவிக்கப் போவதாக இலங்கை நாடாளுமன்றத்தில் கூறியிருக்கிறார். இலங்கை அரசின் இதுபோன்ற செயலுக்கு முதலில் எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1895 மற்றும் 1930 ஆம் ஆண்டுகளின் வரைபடங்களின்படி கச்சதீவு இந்தியாவுக்கே சொந்தமானது. இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்த கச்சதீவு 26.06.1974 அன்று அப்போதைய இந்தியப் பேரரசால் இலங்கைக்குத் தாரை வார்க்கப்பட்டது. அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் கருணாநிதி. தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கும் நிகழ்ச்சிகள் அன்றாடம் நடந்து வருகின்றன. தமிழக மீனவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை நிலவுகிறது.

ராமநாதபுரத்தைச் சேர்ந்த சீனிகுப்ப படையாச்சி என்பவரால் கட்டப்பட்ட புனித அந்தோனியார் கோவில் கச்சதீவில் உள்ளது. வருடத்திற்கு ஒருமுறை அங்கு நடத்தப்படும் திருவிழாவில் தமிழக மற்றும் இலங்கை மீனவர்கள் கலந்து கொள்வது வழக்கம். அந்தத் திருவிழாவில் கலந்துகொள்வதற்கும், மீன்வலைகளை அங்கு உலர்த்தவும் நமக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள்கூட பறிபோய்விட்டன.

கச்சதீவைப் புனித பகுதியாக அறிவிக்கப் போகிறோம் என்று தன்னிச்சையாக இலங்கை அரசு அறிவித்தும் அது குறித்து மத்திய அரசும் தி.மு.க. மாநில அரசும் வாய் திறக்காது மௌனமாக இருப்பது கண்டிக்கத்தக்கது. இலங்கைத் தமிழர்களை அழிக்க உறுதுணையாக இருந்தது போல், கச்சதீவைப் புனித பகுதியாக அறிவிக்க வேண்டும் என்ற இலங்கை அரசின் அறிவிப்பிற்கும் மத்திய அரசும், தமிழக தி.மு.க. அரசும் உறுதுணையாக இருக்கின்றனவோ என்ற சந்தேகம் தமிழக மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

எனவே, தமிழக மீனவர்களைக் காப்பாற்றும் வகையில், இலங்கை அரசின் இந்த அறிவிப்பை மத்திய அரசு முளையிலேயே கிள்ளி எறிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துவதோடு கச்சதீவை இலங்கை அரசிடமிருந்து மீண்டும் மீட்பதற்கான நடவடிக்கைகளிலும் மத்திய அரசு ஈடுபட வேண்டும் என்று தமிழக மக்களின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் - என்று தெரிவித்துள்ளார். (அ-சி)

# தென்மராட்சியில் கசிப்பு வைத்திருந்த ஐவருக்கு ஒரு லட்சத்து 18 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச்24

தென்மராட்சிப் பிரதேசத்தில் கசிப்பு வைத்திருந்த ஐவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஒரு லட்சத்து 18 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினர் கொடிகாமம், மீசாலை வடக்கு, சங்கத்தானை, வெள்ளாம் போக்கட்டி ஆகிய பகுதிகளில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது இந்த ஐவரும் அகப்பட்டனர்.

இந்த ஐந்து பேருக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.

சந்தேக நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அபராதம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் கச்சாய் வீதி- நாகநாதர் வீதியில் சட்ட விரோத கசிப்பு வைத்திருந்த இருவருக்கு தலா 40 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 25 மாத, 20 மாத சாதாரண சிறையும் விதிக்கப்பட்டது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த நபருக்கு 25 ஆயிரம் ரூபா அபராதமும், செலுத்தத் தவறின் 15 மாத சாதாரண சிறையும், சங்கத்தானை தட்டா தெருவைச் சேர்ந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 8 மாத சாதாரண சிறையும் விதிக்கப்பட்டது.

வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த நபருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத் தவறின் 3 மாத சிறையும் விதித்து நீதிவான் உத்தரவிட்டார். (203-207)

# இன்றைய உலகில் ஆங்கில அறிவு இருந்தால் பல்வேறு வளர்ச்சிப் படிகளை எட்ட முடியும்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

யாழ்ப்பாணம், மார்ச்.24

இன்றைய உலகில் ஆங்கில அறிவு இருந்தால்தான் நாம் பல்வேறு துறைகளில் பரிணாம வளர்ச்சியை அடைய முடியும். எனவே மாணவர்கள் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயம், மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியவற்றின் நிறுவுனர் தினம், பரிசளிப்பு விழா, 'வளனார்' சஞ்சிகை வெளியீடு ஆகிய நிகழ்வுகளுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அதிபர் வி.நடராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்தவை வருமாறு:-

எமது நாட்டில் வளமான சிறந்த ஆங்கில ஆசிரியரும், ஆங்கிலக் கல்விக் கூடமும் சகல வசதிகளுடனும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் ஆங்கிலத் தேர்ச்சி மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

மாணவர்கள் ஆங்கிலக் கல்வியின் தேவையினையும், முக்கியத்துவத்தினையும் உணர்ந்து, கருத்திலெடுத்துக் கற்க முன்வரவேண்டும்.

இன்று இங்கு உயர்தர மாணவர்களினால் 'வளனார்' என்கின்ற சஞ்சிகையின் இரண்டாவது இதழ் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பட்டால் மாணவர்களை ஊக்கப்படுத்துவதாக அமையும்.

இந்த நிகழ்வில் சிறந்த மாணவர்களைத் தெரிவு செய்து பரிசில்கள் வழங்கப்படுகின்றது. இவ்வாறான நிகழ்வு பாடசாலைகள் தோறும் கட்டாயம் நடத்தப்பட வேண்டிய நிகழ்வாகும்.

இன்றைய நிகழ்வில் பரிசில் பெறும் மாணவர்களை ஊக்குவிப்பதோடு, பரிசில் பெறாத மாணவர்கள் எதிர்வரும் காலத்தில் பெற வேண்டும். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் இணைந்து கூடிய கவனம் எடுக்க வேண்டும்-என்றார்.

இந்த நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையின் ஆசிரியர் சு.ஸ்ரீகுமரனும், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.விஜயகுமாரும் நிகழ்த்தினர். (203-204-112)



மாதகல் சென்.ஜோசவ் மகா வித்தியாலயம், மாதகல் நுணசை வித்தியாலயம் ஆகியவற்றின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் மறைப்பணி நிறுவுனர் எஸ்.எம்.பி.ஆனந்தகுமார் அடிகளார் உரையாற்றுவதையும், யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ சிரேஷ்ட விரிவுரையாளர் இ.விஜயகுமார் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

சஞ்சிகையின் முதற்பிரதியை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் வெளியிட்டு வைக்க முதற் பிரதியைக் கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் பெற்றுக் கொள்வதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள் :சரவணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்குப் புதிய பயிலுநர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு ஏப்ரல் 10ஆம் திகதி

யாழ்ப்பாணம், மார்ச் 24

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2009ஆம் ஆண்டுக்கு புதிய பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத்தேர்வு எதிர் வரும் 10ஆம் திகதி தொடக்கம் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கணிதம் (ஆங்கிலம்), நடனம், சித்திரம், சங்கீதம், நாடகமும் அரங்கியலும், சமூகவிஞ்ஞானம், தொழில்நுட்பக் கற்கை ஆகிய பாடத்துறைகளுக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வெளியாகியுள்ளது.

அழைக்கப்பட்டோரின் பெயர், விவரம் வருமாறு:

**கணிதம் (ஆங்கில மொழிமூலம்)**

ரி.தாரணி (தம்பசிட்டி, பருத்தித்துறை), எ.நிரூஷன் (ஸ்ரேசன் ரோட், வவுனியா), எம்.நிஷாந்தா மரியதாஸ் (மவுண்ற்காமல் றோட், யாழ்ப்பாணம்), எஸ்.தாரணி (மீசாலை), வி.தாட்சாயினி (பிறவுண் றோட், யாழ்ப்பாணம்), எஸ்.றம்யா (சண்டிலிப்பாய்), எஸ்.பிரவீனா (வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்), எஸ்.இளைமாதா (கரவெட்டி) கே.அனுக்கிரகா (கரவெட்டி வடக்கு, கரவெட்டி), எஸ்.ராதை (உடுவில் கிழக்கு, சுன்னாகம்), ஆர்.சுகனன் (கொக்குவில்), ஐ.மரியடிலக்ஷி (சித்தங்கேணி), ரி.சரணியா (வல்வெட்டித்துறை), எஸ்.பரணிதரன் (சுன்னாகம்), எஸ்.புஷ்பரூபா (உரும்பிராய்), பி.பபிலா (சுன்னாகம்), எஸ்.சுஜிஸ்ரா (உடுவில் தெற்கு, மானிப்பாய்), எஸ்.சபேசன் (புலோலி வடகிழக்கு, பருத்தித்துறை), ஜெ.நந்துயா (மல்லாகம்), எஸ்.ஸ்ரீப்பிரியா (உடுவில் றோட், மானிப்பாய்), றாகவானந்தம் (கருணவாய் கிழக்கு; கரவெட்டி), எம்.தனுஷியா (அச்சுவேலி), கே.வனுஜா (கோப்பாய்), ரி.சசிகரன் (கோண்டாவில்), எஸ்.சர்மிலா (கரவெட்டி கிழக்கு, கரவெட்டி), எம்.லோகபரணி (அளவெட்டி வடக்கு, அளவெட்டி), எஸ்.வனஜா (தும்பளை மேற்கு, பருத்தித்துறை, எஸ்.ஜெயசுதன் (சங்கானை), வை.பிரியசாளினி (சண்டிலிப்பாய்), வி.பிரியா (வட்டுக்கோட்டை), எஸ்.கஸ்தூரி (கோப்பாய்), ஆர்.பிரியசானந்தினி (ஏழாலை), பி.கஸ்தூரி (கரவெட்டி), எஸ்.கீர்த்தனா (சுன்னாகம்), என்.சகிலா (உடுப்பிட்டி), எ.யமுனா மீனாட்சி (சாவகச்சேரி), கே.லக்ஷனா (தெல்லிப்பழை), கேமலட்சுமி (வல்வெட்டித்துறை), ரி.வினோதஜானி (கரவெட்டி), வை.சஜீவன் (கொடிகாமம்), ரி.தினேஷ் (ஏழாலை), ரி.நிரோசா (மல்லாகம்), எஸ்.தயாபரம் (அச்சுவேலி), எம்.சாமிலா (சரசாலை, தெற்கு), எஸ்.திருமகள் (கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம்), எ.மயூரநாதன் (சீனியர் லேன், கலட்டி), எஸ்.சாந்தி (வல்வெட்டித்துறை), பி.தில்லைவனராஜா (மீசாலை), ஜி.ஜீவிதா (கந்தர்மடம்), பி.தர்சிதா (சீனியர் லேன், யாழ்ப்பாணம்), எஸ்.டினேஸ் (மிருசுவில்), என்.யாழினி (சுன்னாகம்).

**நாடகமும் அரங்கியலும் தமிழ்மொழி-மூலம்**

கே.சர்மினி (வட்டுக்கோட்டை), ஜி.கோபிநாத் (நாவலடி, உடுப்பிட்டி), கே.சுதாகரன் (கொடிகாமம்), ஆர்.வஜீனா (சுன்னாகம்), இ.லக்ஷனா (ஊர்காவற்றுறை), பி.பகிர்பரன் (சுழிபுரம்), எஸ்.சுதாகரன் (புலோலி), வி.நிரோஜன் (வேலணை), ஆர்.கிஷாலினி (மல்லாகம்), எஸ்.எட்வின்ராஜ் (குருநகர்,யாழ்ப்பாணம்), பி.யாழினி (பருத்தித்துறை), எஸ்.விநோஜா (பண்டத்தரிப்பு), என்.தாரணி (வடலியடைப்பு), ரி.கௌசியா (நீர்வேலி), எஸ்.கிருஷ்னானந்தினி (பண்டத்தரிப்பு), பி.யூட் கமில்டன் (கறீற்றல் லேன், யாழ்ப்பாணம்), வி.கரதீபன் (வல்வெட்டித்துறை), ரி.விஜிதா (சுழிபுரம்), எஸ்.சுதாகரன் (ஏழாலை), என்.விநோதா (குடத்தனை), கே.கர்ணாகரன் (பண்டத்தரிப்பு), ஆர்.துளசினி (ராசாவின் தோட்டம்), எஸ்.பாலரட்ணம் (முருகமூர்த்தி கோயிலடி, உடுவில்), ஜெ.கஸ்தூரன் (மல்லாகம்), வி.சுபாஜினி (அளவெட்டி மத்தி), ரி.நிதர்ஷன் (சண்டிலிப்பாய்), கே.கர்ஷனா (சுன்னாகம்), பி.பிரசாந்தி (சுன்னாகம்), கே.கே.பிரதீபா (மீசாலை), எ.டுலா (குருநகர், யாழ்ப்பாணம்), எஸ்.எஸ்.சஞ்செயன் (உடுப்பிட்டி), ரி.துர்ஷிகா (வேலணை), வை.ஜான்சி (நல்லூர்), என்.நிஷாந்தினி (சண்டிலிப்பாய்), பி.கிருஷிகா (ஏழாலை), பி.கஜமுகன் (சுழிபுரம்), எஸ்.கௌரி (நீர்வேலி), எஸ்.சந்திரமோகன் (கரவெட்டி), பி.லக்ஷியா (கரவெட்டி), ஆர்.ராகுலன் (வல்வெட்டி), ரி.கிஷாந்திலதா (சண்டிலிப்பாய்), வி.விஜிதரன் (வேலணை), ஆர்.எ.டோமினிக் (பருத்தித்துறை), எல்.கயல்விழி (குடத்தனை), சி.டி.மகேஸ்வரன் (உடுவில்), எம்.மேகலா (பண்டத்தரிப்பு), ஜே.அஸ்வினி (கரவெட்டி), ஜெ.பிரணோம் (அத்தியடி), ஆர்.துஷா (கரவெட்டி), ரி.மேரி சுதர்சினி (குடத்தனை), ரி.இளவரசன் (வல்வெட்டித்துறை), என்.றஞ்சித் கண்ணா (திருநெல்வேலி), வை.நடிறதன் (உரும்பிராய்), ஆர்.விஜயதர்சினி (கரவெட்டி), எஸ்.சிவசஜித்தா (இணுவில்).

**சங்கீதம்**

மேரிறொசித்தா (மானிப்பாய்), கே.கஜந்தினி (மருதடி, காரைநகர்), வி.சுதாநிதி (மந்துவில் கிழக்கு, கொடிகாமம்), எம்.பிரதா (கரணவாய் வடக்கு, கரவெட்டி), எஸ்.யாழினி (இணுவில் கிழக்கு, சுன்னாகம்), ரி.ஜேமிலா (கொக்குவில் மேற்கு, கொக்குவில்), எஸ்.வினுஜா (சுன்னாகம்), ஜே.ஜெயரூபினி (மயிலிட்டி வடக்கு, காங்கேசன் துறை), எஸ்.சிந்து (அளவெட்டி), எஸ்.சிவரூபா (கரவெட்டி, கிழக்கு), என்.செல்வரத்தினம் (சாவற்காடு, மானிப்பாய்), எஸ்.சரண்யா (சாவகச்சேரி), வி.துஷ்யந்தி (நீர்வேலி), எம்.ஜெனனி (ஏழாலை), கே.நிரோசி (உடுவில் மேற்கு, சுன்னாகம்), மனோத்னி (மிருசுவில்), வை.சசிந்தா (கல்வயல், சாவகச்சேரி), வி.டயானி (ஆனைக்கோட்டை), யு.நாகதர்ஜினி (வட்டுக்கோட்டை), இ.ரூபினி (கரம்பன், ஊர்காவற்றுறை), கே.வில்வராசா (கொக்குவில்), ரி.நிஷாந்தினி (மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி), ஜி.பி.தர்சிகா (மருதடி றோட், யாழ்ப்பாணம்), எஸ்.பிரம்ளா (கோண்டாவில் வடக்கு), வை.சிந்துகா (சுன்னாகம்), கே.கிருஷ்னியா (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), எஸ்.கல்பனா (அராலி தெற்கு, வட்டுக்கோட்டை), எஸ்.சர்மினி (தாவடி, கொக்குவில்), வி.கஜேந்திரன் (கரணவாய் மேற்கு, கரவெட்டி), ஏ.ஆரணி (இணுவில் கிழக்கு, இணுவில்), ஆர்.அனித்தா (அராலி றோட், சங்கானை), சிந்து ஜெயகுலராஜா (கல்வியங்காடு), எஸ்.கோகுல் (கைதடி), என்.மகாலிங்கம் (மல்லாகம்).

**சமூகவிஞ்ஞானம்**

எஸ்.வாகீசன் (இணுவில் கிழக்கு), எ.சோபனா (சுன்னாகம்), ஜே.ரி.மேரிநிலாஜினி (வெற்றிலைக்கேணி), எம்.அமிர்தா (சங்குவேலி தெற்கு, மானிப்பாய்), ஆர்.ஜெயமதன் (அரியாலை), ரி.கோகுலராம் (கந்தர்மடம்), ரி.தாரணி (விபாபாரி மூலை, பருத்துறை), பி.சூரிகலா (திருநெல்வேலி கிழக்கு), ரி.கலைச்செல்வி (புள்ளியன்கட்டுலேன், ஆனைக்கோட்டை), என்.விஜயரட்ணம் (புலோலி மேற்கு, பருத்தித்துறை), வி.கேமினி (கந்தரோடை மேற்கு, சுன்னாகம்), பி.மயூரன் (சுதுமலை தெற்கு, மானிப்பாய்), ரி.ஞாணகிரி (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), எம்.சங்கீதா (மாதகல்), எஸ்.ஸ்ரீலதா (கொழும்பு 06), பி.கரிகாலன் (கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்), ரி.பிறின்சியா (அச்சுவேலி, தெற்கு), எஸ்.மாலதி (பொலிகண்டி), எஸ்.நவரட்ணம் (மானிப்பாய்), கே.சுதர்ஜினி (சண்டிலிப்பாய்), எம்.திவானா (றம்பைக்குளம், வவுனியா).

**நடனம்**

வி.ஹேமராதா (சித்தன்கேணி), வி.எஸ்.ருஷியந்தி (சுன்னாகம்), எம்.தனயா (சுன்னாகம்), பி.சங்கீதா (திருநெல்வேலி கிழக்கு), பி.சுஜாதா (உரும்பிராய்), வி.ஜெனிஷானா (தெல்லிப்பழை), பி.சர்மிளா (கொடிகாமம்), பி.யாழினி (மானிப்பாய்), வி.ஜசிந்தா (கொக்குவில்), எம்.எஸ்.ஜெயராணி (இணுவில்), ஆர்.பிரியங்கா (மல்லாகம்), உஷாநந்தினி (ஆனைக்கோட்டை), ஜே.இந்துஜா (வல்வெட்டித்துறை), எ.நிரோஜினி (கோண்டாவில்), எம்.வாசுகி (கொக்குவில்), எஸ்.ரோமியா (கொக்குவில்), ஏ.கனிதீபா (சுன்னாகம்), ரி.டிலுக்ஷி ஆன்சி (கோப்பாய்), பி.நிருஷா நிருணாளினி (யாழ்ப்பாணம்),

**தொழில்நுட்ப கல்வி**

எஸ்.சுதாரியன் (கரவெட்டி), ஜே.சஞ்ஜீவ் (நல்லூர்), கே.மயூரன் (யாழ்ப்பாணம்), ஆர்.சுகீந்திரன் (கரவெட்டி), எஸ்.தினேஸ் (சுன்னாகம்), ஆர்.சுதர்சன் (எழுதுமட்டுவாள்), ஆர்.டிலக்ஸன் (பண்டத்தரிப்பு), எஸ்.நிஷாந்தன் (கொடிகாமம்), ரி.டயானி (மானிப்பாய்), கே.கஜீவன் (கரவெட்டி), ஆர்.ஆனந்தகுமார் (நீர்வேலி), எம்.ஜெயமிதுன் (மல்லாகம்), ஜே.சஞ்ஜீவ் குமார் (வட்டுக்கோட்டை), பி.தயாரூபன் (கோப்பாய்), வி.மேனகா (வல்வெட்டித்துறை), ஜே.ஜீவாருணம் (மானிப்பாய்), எஸ்.மயூரினி (மானிப்பாய்), பி.காந்தராசா (பண்டத்தரிப்பு), கே.மயூரன் (சுன்னாகம்), பி.வைகுந்தன் (கரவெட்டி), எஸ்.கஜமுகன் (மல்லாகம்), ஏ.கெங்காகரன் (சாவகச்சேரி).

## வானிலைப் பாசறை

யாழ்ப்பாணம், மார்ச் 24

ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் தரம் 6,7,8,9 ஆகிய வகுப்புகளுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் அதிகாலை 4 மணிவரை வானிலை பாசறை இடம்பெற்றது.

இப்பாசறை இக்கல்லூரியின் அதிபர் வணபிதா ஜேம்ஸ் சிங்கராஜர் தலைமையில் இடம்பெற்றது.

இப்பாசறையில் வளவாளராக யாழ்.கல்வி வலய ஆசிரிய வளநிலை முகாமையாளர் எ.இரட்ணசிங்கம் கலந்து கொண்டு இப்பாசறையை நடத்தினார்.

இவ்வானிலை பாசறையில் தீவக வலயத்தைச் சேர்ந்த விஞ்ஞான ஆசிரியர்களும் மற்றும் ஆய்வுகூட உதவியாளர்களும் கலந்துகொண்டனர்.

இந்த வானிலை பாசறையில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி, சென் மேரிஸ் வித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர்.

(203-325)

# மக்கள் பாதுகாப்பு வலயம் மீது தாக்குதல் 9 சிறுவர்கள் உட்பட 34 பேர் பலி!

தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் எறிகணைத் தாக்குதல்களில் கடந்த ஞாயிற்றுக்கிமை 9 சிறுவர்கள் உட்பட 34 தமிழர்கள் பலியானார்கள். 40 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இணையத்தளச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு;

மக்கள் பாதுகாப்பு வலய பகுதிகளான மாத்தளன், அம்பலவன்பொக்கணை மற்றும் வலைஞர்மடம் பகுதிகளை நோக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆட்லறி ஷெல், பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் 9 சிறுவர்கள் உட்பட 34 பொது மக்கள் பலியானார்கள். 40 பேர் காயமடைந்துள்ளனர்.

பலியானோர் விவரம் வருமாறு:

வாணி (வயது 05), க.அர்ச்சுணன் (வயது 06), ம.விதுசன் (வயது 03), கே.மருதன் (வயது 07), கி.தேவகி (வயது 05 மாதம்), வி.தேனுஜா (வயது 03), சு.விதுரன் (வயது 06), ம.மதிநிலா (வயது 10), து.தேவதீசன் (வயது 12), க.கனகம்மா (வயது 78), து.நாகேஸ்வரி (வயது 26), வீ.நெல்சன்குமார் (வயது 34), அ.துரைராசா (வயது 67), த.அருச்சுனன் (வயது 60), பெ.அருமைநாயகம் (வயது 33), வை.அன்னமேரி (வயது 56), இ.அன்னமலர் (வயது 55), தே.விஜயமாலா (வயது 28), க.விஜயகுமாரி (வயது 35), வே.ரஞ்சன் (வயது 38), மா.மரியம்மா (வயது 47), க.மணிமாறன் (வயது 55), சி.மருமலர் (வயது 79), வீ.மரியம்மா (வயது 68), த.தீசன்குமார் (வயது 74), வீ.மரிஸ்ரலா ராணி (வயது 56), வ.காருண்யா (வயது 23), மா.இருதயதாஸ் (வயது 72)

இவர்களில் 25 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டபோது உயிரிழந்துள்ளனர். ஏனையோரின் பெயர் விவரம் கிடைக்கப்பெறவில்லை - என்றுள்ளது.

## தொடரும் போர் நடவடிக்கைகளால் வன்னியில் சிறுவர்களின் உளநலம் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 24

வன்னியில் போர் நடவடிக்கைகள் காரணமாகச் சிறார்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொது வைத்தியசாலை உளநலப்பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

வான்தாக்குதல், எறிகணைத் தாக்குதல் என்பவற்றினால் உறவுகளைப் பறிகொடுத்தும், தாக்குதல்கள் நடைபெறும் இடங்களில் படுகொலைகளை நேரில் பார்த்தும் அங்குள்ள சிறார்கள் உளநலம் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குக் கொண்டு வரப்படும் சிறார்கள் பெற்றோர்களினால் கைகள் இரண்டும் கட்டப்பட்டு கொண்டு வரப்படும் துயரநிலை தொடர்வதாகவும் வைத்தியசாலை விவரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் பாடசாலைகள் போர் நடவடிக்கை காரணமாக இயங்காமல் இருப்பதன் காரணமாக சிறார்கள் மத்தியில் உளப்பாதிப்புக்கள் அதிகரித்துள்ளதாகவும் களத்தில் உள்ள உளவளத் துணையாளர்களால் தெரிவிக்கப்படுகின்றது.

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மார்ச் 24

மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பங்குனித்திங்கள் குளிர்த்தி அபிஷேகம் எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

(201-236)

* * *

கரவெட்டி, மார்ச் 24

வல்வை வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து உற்சவம் நடைபெறவுள்ளது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 08ஆம் திகதி புதன்கிழமையும் அதனைத் தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று 11ஆம் திகதி சனிக்கிழமை பகல் - இரவு உற்சவத்துடன் நிறைவுறும்.

(201-70)

* * *

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞானவைரவர் ஆலயத்தில் பங்குனித்திங்களை முன்னிட்டு ஒவ்வொரு திங்களும் பங்குனிப் பொங்கல் வைபவம் இடம்பெற்று வருகிறது.

அன்றைய தினத்தில் விசேட பூசை, அபிஷேகம் போன்றவையும் இடம்பெற்று வருகின்றன.

(201-224)

* * *

[illegible] மேற்கு தேவரையாளி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத்திருவிழா நேற்று திங்கட்கிழமை பங்குனித்திங்கள் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் அதனைத் தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளன.

(201)

* * *

கொக்குவில் மேற்கு மணியர்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய வருடாந்த பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(201)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 24

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய சிவபெருமான் வருடாந்த அலங்காரத்திருவிழா எதிர்வரும் 30ஆம் திகதி பங்குனித்திங்களன்று ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 8ஆம் திகதி புதன் கிழமை காலை 8.45 மணிக்குத் தேர்த்திரு விழா ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக் குத் தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது.

(201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் மேலதிக இராணுவம்: அமெ. முழு வீச்சில் நடவடிக்கை

வாஷிங்டன், மார்ச் 24

''ஆப்கானிஸ்தானில் தலிபான் போராளிகளுக்கு எதிரான சண்டையை முழுவீச்சில் மேற்கொள்வதற்காக அங்கு அமெரிக்கா மேலதிக துருப்புகளை அனுப்புகின்றது. அதேவேளை, அங்கிருந்து வெளியேறுவதற்கான உபாயத் திட்டமும் அமெரிக்கா விடம் இருக்கவேண்டும். இது அவசியமாகும்.''

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஞாயிற்றுக்கிழமை சி.பி.எஸ்ஸுக்குத் அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார். சி.பி.எஸ்ஸின் 30 நிமிட நிகழ்ச்சிக்கு அவர் இப்பேட்டியை அளித்தார்.

''ஆப்கானிஸ்தானைப் பொறுத்தமட்டில், விசாலமான யுத்த தந்திரோபாயத் திட்டமொன்றே எமக்கு அவசியம். இதில் வெளியேறுவதற்கான உபாயமும் அடங்கும். ஏனெனில், முனைப்பான போராட்டம் ஒரு நிலையானதல்ல. சாசுவதமாக நீடிக்கும் என்றும் கூறுவதற்கில்லை'' என்றும் அவர் அதில் தெரிவித்தார்.

''எமது விசாலமான திட்டம் பல அம்சங்களையும் உள்ளடக்கியிருக்கும். ஆப்கானிஸ்தானின் பொருளாதார நிலைப்பாட்டை சரிவிலிருந்து மீட்டு கட்டி எழுப்புதல், பாகிஸ்தானுடனும் இப்பிராந்தியத்திலுள்ள இதர நாடுகளுடனுமான இராஜதந்திர உறவுகளை அபிவிருத்தி செய்தல் ஆகிய அம்சங்களும் இதில் இடம்பெறும்'' என்றும் ஒபாமா தெரிவித்துக்கொண்டார்.

''அமெரிக்கா மீதான தாக்குதல்களுக்கான திட்டங்கள் ஆப்கான் மண்ணிலேயே வகுக்கப்படுகின்றன. எனவே, இத்தாக்குதல்களை தடுப்பதற்கான தனது கேந்திரப் பணியை அமெரிக்கா, ஆப்கானி லேயே மேற்கொள்ளவேண்டும். இது விடயத்தில் அமெரிக்காவால் பராமுகமாக இருந்துவிட முடியாது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''அல்-குவைதாவால் அமெரிக்காவைத்தாக்க முடியாது. அமெரிக்க உடைமைகளை நிர்மூலமாக்க முடியாது. எங்கள் நேச நாடுகளையும் தாக்க இயலாது என்ற நிலைப்பாட்டையே நாம் எதிர்பார்க்கின்றோம். இந்த நிலைப்பாட்டைத் தோற்றுவிப்பதற்காகவே இந்த யுத்த முஸ்தீபுகளில் கேந்திரப் பணிக்கு நாம் முன்னுரிமை வழங்குகின்றோம்'' என்றும் அவர் கூறினார்.

''2001 ஆம் வருட செப்டெம்பர் 11 ஆம் திகதி, அமெரிக்கா மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதையடுத்து, சூத்திரதாரிகளை மடக்குவதற்காகவும், மேலதிக தாக்குதல்களை முறியடிப்பதற்காகவுமே அமெரிக்கத் துருப்புகள் ஆப்கானுக்குள் நுழைந்தன. இது அமெரிக்காவின் அன்றைய கேந்திரப்பணி. அதைப்போன்றதே அமெரிக்காவின் இன்றைய கேந்திரப் பணியும் அமையும்'' என்றும் ஒபாமா தெரிவித்துக் கொண்டார்.

## அமெரிக்காவில் விமான விபத்து; 17 பேர் பரிதாபமாக உயிரிழப்பு

வாஷிங்ரன், மார்ச் 24

அமெரிக்காவின் வடமாநிலமான மொண்டேனாவில் இடம்பெற்ற விமான விபத்தில், விமானத்திலிருந்த 17 பேரும் கொல்லப்பட்டனர். இவர்களில் பிள்ளைகளுமடங்குவர் என சமஷ்டி விமான சேவை நிர்வாகத்துறைப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இது ஒரு சிறிய விமானமாகும். கலிபோர்னியாவிலுள்ள ஒரோவில்லி என்னுமிடத்திலிருந்து, பூட்டி நகரிலுள்ள விமானத் தளத்தை நோக்கி வந்த இவ்விமானம், விமானத்தளத்துக்கு அண்மையில் விபத்துக்குள்ளானது என்றும் அவர் விவரித்தார்.

காலநிலை சீர்கேடடைந்திருந்தது. மேக மூட்டங்கள் கவிந்திருந்தன. அதனால் பூட்டி நகர விமான நிலையத்துக்கு, 500 அடி தொலைவிலுள்ள மயானப்பகுதியில் மோதுண்டு இவ்விமானம் விபத்துக்குள்ளானது என அண்மையிலுள்ள [illegible] சாலை ஊழியரான நிக் டிபாஸ்குயல், பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.



சீனாவிலுள்ள குயாங் சூ என்னுமிடத்திலிருந்து ஜப்பானிய தலைநகரான டோக்கியோவுக்கு அருகிலுள்ள நரீத்தா சர்வதேச விமான நிலையத்தை நோக்கி வந்த சரக்கு விமானமொன்று, இவ் விமான நிலைய ஓடுதரையில் விழுந்து வெடித்து, தீப்பிழம்பாக மாறியது. இதில் இரு விமானிகள் பலியானார்கள். தீயணைப்புப் படையினர் 30 நிமிடங்கள் பேராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இதில் பலியான விமானி கெவின் கைலி மொஸ்லிக்கு வயது 54. உதவி விமானி அந்தோனி ஸ்டீபன் பினோவுக்கு வயது 49. இருவரும் அமெரிக்கர்கள் என அதிகாரிகள் குறிப்பிட்டார்கள்.

# வெளிநாட்டுத் தொழிலாளர்களுக்கு விசா கட்டுப்பாடு 2 வருடங்களுக்கு மட்டுமே

## அமெ. குடியுரிமைத்துறை தெரிவிப்பு

வாஷிங்ரன், மார்ச் 24

அமெரிக்க நிறுவனங்களில் பணியாற்றிவரும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு எச்1பி விசா வழங்குவதில் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும் சர்ச்சைக்குரிய கட்டுப்பாடுகள் இரு ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும் என அமெரிக்க குடியுரிமைத்துறை அறிவித்துள்ளது.

அமெரிக்க பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காக ஜனாதிபதி பராக் ஒபாமா, ''அமெரிக்கர்களை மட்டுமே பணியில் அமர்த்த வேண்டும்'' என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். இந்தச் சட்டத்தின் காரணமாக அரசின் நிதியுதவி பெற்ற நிறுவனங்கள், திறமைவாய்ந்த வெளி நாட்டுத் தொழிலாளர்களைப் பணியில் அமர்த்துவதில் தடை ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஒக்ரோபர் 1 முதல் தொடங்கும் நிதியாண்டுக்கு மொத்தம் 65 ஆயிரம் பேருக்கே எச்1பி விசா வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது தவிர, அமெரிக்காவில் உயர்கல்வி பயின்று விண்ணப்பித்துள்ள 20 ஆயிரம் வெளிநாட்டவர்களின் மனுக்களும் எச்1பி விசா வழங்குவதற்காக பரிசீலிக்கப்படும் என அமெரிக்க குடியுரிமைத்துறை அறிவித்துள்ளது.

அமெரிக்க அரசின் புதிய சட்டத்தால் இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத்துறையில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களே அமெரிக்க வங்கிகள், பொருளாதார சேவை நிறுவனங்கள் ஆகியவற்றில் அதிகளவில் பணியாற்றுகின்றனர்.

## அல்குவைதா பிரிட்டனை பாகிஸ்தானிலிருந்தே தாக்கத் திட்டம் - பிரதமர் பிரவுன்

''அல்-குவைதா அமைப்பின் முக்கிய தலைவர்கள் பாகிஸ்தானிலேயே பதுங்கியுள்ளார்கள். அங்கு இருந்தவாறே அவர்கள் இங்கிலாந்து மீது தாக்குதல்களை மேற்கொள்ள ஏற்பாடு செய்து வருகிறார்கள்'' என பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன், தமது கட்டுரையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

''மத்திய கிழக்கைச் சேர்ந்த பல்வேறு தீவிரவாதக் குழுக்களும் பாகிஸ்தானையே புகலிடமாகக் கொண்டுள்ளன. பாகிஸ்தானில் தலைமறைவாக இயங்கிவரும் இக்குழுக்கள் ஒருங்கிணைந்தே செயற்பட்டு வருகின்றன'' என்றும் பிரிட்டிஷ் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார்.

''அல்-குவைதா தீவிரவாதிகள் வலுப்பெற்றுள்ளார்கள். தற்கொலைத் தாக்குதல்கள் மூலமாக பாரிய உயிர்ச் சேதங்களை விளைவிக்கக்கூடிய நிலையில் அவர்கள் உள்ளார்கள். இவர்கள் படுகொலைகளை நோக் காகக் கொண்டவர்கள். மரணிக்கும் மக்களைப் பற்றி சிந்திக்கத் திராணியற்றவர்கள்'' என்றும் அவர் சாடியுள்ளார்.

### 11 ஆண்டுகளுக்குப் பிறகு

# அவுஸ்திரேலியாவுக்கு இன்னிங்ஸ் தோல்வி



மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரு போட்டிகளில் வென்று வெற்றிக் கிண்ணத் தைக் கைப்பற்றிய அவுஸ்திரேலிய அணி வீரர்கள்...

கேப்டவுன், மார்ச்.24

அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகள் இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடந்தது. இதில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலியா 209 ஓட்டகளும், தென்னாபிரிக்கா பிரின்ஸ், கலீஸ், டிவில்லியர்ஸ் ஆகியோரின் சதத்தின் உதவியுடன் 651 ஓட்டங்களும் எடுத்தன. பின்னர் 442 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா 3ஆவது நாள் முடிவில் 2 விக்கெட்டுக்கு 102 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் 4ஆவது நாள் தொடர்ந்து ஆடிய அவுஸ்திரேலிய அணி, இறுதிக் கட்டத்தில் கடுமையாகப் போராடியது. குறிப்பாக ஜோன்சன், மெக்டொனால்ட் ஆகியோரின் ஆட்டம் அவுஸ்திரேலியாவின் கௌரவமான ஓட்டஎண்ணிக்கையை எட்ட உதவியது. மெக்டொனால்ட் தனது பங்குக்கு 68 ஓட்டங்கள் (99 பந்து) சேர்த்தார்.

முடிவில் அவுஸ்திரேலிய அணி 2 ஆவது இன்னிங்ஸில் 422 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதன் மூலம் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தனது முதலாவது டெஸ்ட் சதத்தை எட்டிய ஜோன்சன் 123 ஓட்டங்கள் (103 பந்து, 11 பவுண்டரி, 5 சிக்ஸர்) குவித்து கடைசி வரை களத்தில் இருந்தார். தென்னாபிரிக்கா தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் போல் ஹாரிஸ் 6 விக்கெட்டுகளும், ஸ்ரெயின் 3 விக்கெட்டுகளும் வீழ்த்தினர். அவுஸ்திரேலிய அணி 11 ஆண்டுகளுக்கு பின்னர் (கடைசியாக இந்தியாவுக்கு எதிராக, 1998ஆம் ஆண்டு, கொல்கத்தா) முதல் முறையாக இன்னிங்ஸ் தோல்வியை சந்தித்துள்ளது. இருப்பினும் 3 டெஸ்ட் கொண்ட தொடரை அவுஸ்திரேலிய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றிவிட்டது.

## நடால் மீண்டும் சம்பியன்



உலகின் முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற பரிபாஸ் ஓபன் டென்னிஸ் தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடந்தது.

நேற்று நடந்த ஆண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலைவீரர் ஸ்பெயின் நாட்டின் ரபெல் நடால், இங்கிலாந்தின் ஆண்டி முரேவை 6-1, 6-2 என்ற நேர் செற்றில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் ஸ்வொனரோவா, சேர்பியாவின் அனா இவனோவிச்சை 7-6, 6-2 என்ற நேர் செற்றில் வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார்.

# டோனியின் விளம்பர வருமானம் ரூ.300 கோடி



கிரிக்கெட் களத்தில் வெற்றிகளைக் குவித்து வரும் இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி விளம்பர உலகிலும் கொடி கட்டிப் பறக்கிறார். இவரது விளம்பர வருமானம் இந்திய மதிப்பில் சுமார் ரூ. 300 கோடியை எட்டியுள்ளது.

டோனி தலைமையில் இந்திய அணி சிறந்த முன்னேற்றம் கண்டு வருகிறது. கடந்த 2007இல் ருவெண்ரி 20 உலகக் கோப்பையை வென்று சாதித்தது. அதற்கு பின் நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றிநடை தொடர, விளம்பர நிறுவனங்கள் டோனியை மொய்க்கத் தொடங்கின. ஒரு பொருளுக்கு மொடலாகத் தோன்ற ஆண்டுக்கு இந்திய மதிப்பில் ரூ.5 கோடி சம்பளமாக பெறுகிறார். தற்போது வீடியோ கமெரா, டைட்டான் கடிகாரம், பெப்ஸி, ரீபோக், பிரில்கிறீம், சியாராம் உள்ளிட்ட 19 நிறுவனங்கள் ஒப்பந்தம் செய்துள்ளதால் ரூ.95 கோடி கிடைக்கிறது. இவை 3 ஆண்டுக்கான ஒப்பந்தம் என்பதால் ரூ.285 கோடி வருமானம் பெறுவார். இவற்றில் பெப்ஸி, ரீபோக் நிறுவனங்கள் 10 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்துள்ளன. இந்த இரண்டு நிறுவனங்கள் மூலம் ரூ. 100 கோடி பெறுகிறார்.

சில நிறுவனங்கள் தங்களுக்கு மட்டும் மாடலாக குறிப்பிட்ட காலத்துக்கு தோன்ற வேண்டுமென வற்புறுத்தும். இதற்கு டோனி கூடுதல் தொகை பெறுகிறார். பெரிய நிறுவனங்கள் செயல்பாட்டின் அடிப்படையில் ஊக்கத் தொகை அளிக்கின்றன. டோனியைப் பொறுத்தவரை விக்கெட் காப்பாளர், துடுப்பாட்டக்காரர், அணித்தலைவர் என மூன்று பணிகளிலும் சிறப்பாகச் செயற்படுவதால் கூடுதல் தொகையை எளிதாகப் பெற்று விடுகிறார். கடந்த ஆண்டு ரிவி விளம்பரங்களில் அதிக நேரம் தோன்றியவர்களில் கொலிவுட் நட்சத்திரம் ஷாருக்கான் முதலிடத்தில் இருக்கிறார். அடுத்த இடத்தில் டோனி உள்ளார். அனைத்து பொருள்களுக்கும் விளம்பரம் செய்ய இவர் விரும்பவில்லை [illegible] முன்னுரிமை அளிக்கிறார்.

# இங்கிலாந்தில் டெஸ்ட் விளையாட பாகிஸ்தான் அதிகாரிகள் பேச்சு

லண்டன், மார்ச் 24

இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பேச்சு நடத்தி வருகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காக பாகிஸ்தானில் விளையாட பெரும்பாலான அணிகள் மறுத்து வருகின்றன. இதனிடையே லாகூரில் இலங்கை வீரர்கள் மீது நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் பாகிஸ்தானில் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படுவதற்கான வாய்ப்பை மேலும் பாதித்துள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டியில் ஆடுவது பற்றி பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பேச்சு நடத்தி வருகிறது.

இங்கிலாந்து அணியோடு டெஸ்ட் தொடரில் விளையாடுவதோடு, அவுஸ்திரேலிய அணியோடும் இங்கிலாந்தில் டெஸ்ட் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் தீவிரமாக பேச்சு நடத்திவருகிறது. இதுதொடர்பாக இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய கிரிக்கெட் [illegible] தான் அதிகாரிகள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவின் ஒவ்வொரு ஊர்களிலும் கும்பலாக பலியாகிக் கிடக்கும் மக்கள்!

## குண்டுக் காயத்துடன் தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு



குண்டுக் காயங்களுடன் தமிழகம் வந்த அகதிகளை முதல் படத்திலும், உள்படத்தில் அவர்கள் வந்த படகை, அதிகாரிகள் சோதனையிடுவதையும் காணலாம்.

நாகை, மார்ச் 24

முல்லைத்தீவில் மக்கள் குடியிருக்கும் பகுதியில் தினமும் குண்டு வீச்சுகள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கும்பல் கும்பலாகப் பலியாகிக் கிடக்கிறார்கள். உயிர் பிழைப்பதற்காக நாம் இங்கு தப்பி வந்தோம்.

- இவ்வாறு குண்டடிபட்ட நிலையில் தமிழகம் சென்ற அகதிகள் தெரிவித்துள்ளனர் என தமிழக நாளேடான 'தினகரன்' செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து அதில் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு -

நாகை மாவட்டம், கல்லாறு மீனவர் கிராமத்திற்கு நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30 மணிக்கு படகு ஒன்று வந்தது. அதில் வந்த 6 ஆண்கள், 7 பெண்களிடம் கல்லாறு மீனவர்கள் விசாரிக்கும்போது, தொடர் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தப்படுவதால் முல்லைத்தீவுப் புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து தப்பி வருகின்றோம் எனத் தெரிவித்தனர்.

இதுபற்றி பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர்களிடம் நாகை எஸ்.பி. அஸ்வின் கோட்னிஸ் விசாரணை நடத்தினார். பின்னர் அனைவரும் இராமநாதபுரத்தில் உள்ள மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சந்திரகாந்தா, சிவக்குமார், சிவசந்திரன், செந்தூரான், கோபிகா, ஈஸ்வரி, அன்புமணி, கேதீஸ்வரி, தேம்பாயினி, அகல்விழி, காந்தரூபன், மனைவி கல்யாணி மற்றும் அந்தோணி முத்து ஆகியோரே இவ்வாறு அகதிகளாக வந்தவர்கள் ஆவர். இவர்களில் காந்தரூபனின் இடது கையில் குண்டுக் காயம் இருந்தது. சிவச்சந்திரன், சிவக்குமார் ஆகியோர் போலியோவால் பாதிக்கப்பட்டவர்கள்.

அகதிகள் கூறியவை வருமாறு -

முல்லைத்தீவு மாத்தளன் பகுதியைச் சேர்ந்த 5 குடும்பங்களை சேர்ந்த 43 பேர் 3 படகுகளில் கடந்த 21 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு புறப்பட்டோம். 20 மணி நேரம் இடைவிடாது பயணம் செய்தோம். வழியில் எங்கள் படகில் எரிபொருள் தீர்ந்து விட்டதால் காற்றின் திசையில் படகு அடித்துச் செல்லப்பட்டது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மீனவர்களிடம் டீசல் வாங்கிக்கொண்டு, நாகை வந்து சேர்ந்தோம். மற்ற 2 படகுகள் எங்கு சென்றன என்று தெரியவில்லை.

முல்லைத்தீவில் மக்கள் குடியிருக்கும் பகுதியில் தினமும் குண்டுகள் வீசப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் மக்கள் கும்பல் கும்பலாகப் பலியாகிக் கிடக்கிறார்கள். உயிர் பிழைப்பதற்காக நாம் இங்கு தப்பி வந்தோம் - என்றனர்.

# ஈழத் தமிழருக்காக தீக்குளிக்காதீர்கள்!

## மன்றாடுகிறார் நெடுமாறன்

சென்னை, மார்ச் 24

ஈழத் தமிழருக்காக தீக்குளிப்பு போன்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் கெஞ்சி மன்றாடுகின்றார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

புதுக்கோட்டை - கொத்தமங்கலத்தில் தே.மு.தி.க. தொண்டர் பாலசுந்தரம் ஈழத்தமிழருக்காகத் தீக்குளித்து இறந்த செய்தியறிந்து மிகுந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தேன். தமிழக இளைஞர்கள் கட்சி வேறுபாடின்றி ஈழத் தமிழர்களுக்காக தங்கள் இன்னுயிரையும் தியாகம் செய்யத் தயாராக உள்ளனர் என்பதையே பாலசுந்தரத்தின் ஈகம் காட்டுகிறது.

அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பாக எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்.

தீக்குளிப்பு போன்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம் என மீண்டும் மீண்டும் வேண்டி கேட்டு கொள்கிறேன் - என்றார்.

# நடுக்கடலில் இராமேஸ்வரம் மீனவர்கள் சுற்றிவளைத்து தாக்கப்பட்டு சித்திரவதை

## மீன்பிடிச் சாதனங்கள், மீன்கள் நாசம்

இராமேஸ்வரம், மார்ச் 24

நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரம் மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படையினர் தாக்குதல் நடத்தி மீன்பிடிச் சாதனங்கள், மீன்களை அள்ளிச்சென்றனர் என தமிழக நாளேடுகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த சனியன்று 500இற்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்கள் நடுக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அந்த வழியாக ஆயுதம் பொருத்திய 7 சிறிய கப்பல்களில் 30 இற்கும் மேற்பட்ட இலங்கைக் கடற்படையினர் ரோந்து சென்றனர்.

அவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த படகுகளைக் கண்டதும் வானத்தை நோக்கி துப்பாக்கியால் சுட்டு உடனடியாக அவ்விடத்தில் இருந்து திரும்பிச் செல்லும்படி எச்சரிக்கை விடுத்தனர்.

மீனவர்கள் கடலில் விரித்திருந்த வலைகளை எடுத்துக் கொண்டு அவசர அவசரமாக திரும்பிக் கொண்டிருந்தனர். ஆனால் அதற்குள் இலங்கைக் கடற்படையினர் சில படகுகளை சுற்றி வளைத்தனர். பின்னர் அவர்கள் படகுக்குள் இறங்கி மீனவர்களை அடித்துத் தாக்கினார்கள். ஐஸ் கட்டி மீது படுக்க வைத்து சித்திரவதை செய்தனர். மேலும் வலைகளை வெட்டினர். படகுகளில் இருந்த பற்றரி, மீன்பிடிச்சாதனங்கள், மீனவர்கள் பிடித்து வைத்திருந்த விலை உயர்ந்த இறால் மீன்கள் என்பவற்றை அள்ளிச்சென்றனர் எனக் கூறப்படுகிறது.

இதனையடுத்து மீனவர்கள் பாதியிலேயே மீன்பிடிப்பதை நிறுத்திவிட்டு கரை திரும்பினர். இந்த தாக்குதல் சம்பவம் இராமேஸ்வரத்தில் மீனவர்களிடையே பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தாக்குதலில் காயமடைந்த மீனவர்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுச் சென்றனர். ஆனால் இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து மீனவர்கள் யாரும் மீன்துறை அதிகாரிகளிடம் முறைப்பாடு தெரிவிக்கவில்லை.

# இலங்கை மீனவர்கள் 16 பேர் இந்தியக் கடற்படையால் கைது

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்கள் 18 பேரை இந்தியக் கடலோர காவல் படையினர் கைது செய்துள்ளனர்.

இந்தியக் கடலோரக் காவல் படையினர் கடலோரப் பகுதிகளில் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் புதுச்சேரியில் இருந்து 110 கடல் கி.மீ., தொலைவில் இலங்கை மீனவர்கள் இந்திய எல்லையில் புகுந்து மீன்பிடிப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, கடலோரக் காவல் படையினர் மூன்று விசைப்படகுகளையும் சுற்றி வளைத்து அதிலிருந்த 18 இலங்கை மீனவர்களையும் சிறைப்பிடித்தனர்.

சிக்கிய 18 பேரும் காசிமேடு மீன்பிடி துறைமுகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, முறைப்படி மீன்பிடித் துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பொலிஸார் வழக்குப் பதிந்து 18 பேரையும் கைது செய்து, புழல் சிறையில் அடைத்தனர் எனக் கூறப்பட்டது.

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து பட்டம் வாங்க மறுத்த கல்லூரி மாணவி!

## அரியலூரில் பரபரப்புச் சம்பவம்

அரியலூர், மார்ச் 24

இலங்கையில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து தமிழகத்தில் கல்லூரி மாணவி ஒருவர் பட்டம் வாங்க மறுத்துள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதன் விபரம் வருமாறு -

அரியலூர் அரச கலைக்கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில் மாணவ - மாணவிகளுக்குப் பட்டம் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு மாணவராக பெயர் சொல்லி அழைக்கப்பட அவர்கள் மேடைக்குச் சென்று பட்டம் பெற்றனர்.

இந்தக் கல்லூரியில் எம்.எஸ்.சி. சுற்றுச்சூழல் படிப்பு முடித்த அரியலூர் ஒட்டகோவிலைச் சேர்ந்த மாணவி சுமதியை பெயர் சொல்லி அழைத்தனர். அவர் பட்டமளிப்பு விழா அரங்கத்தில் அமர்ந்திருந்தும் பட்டம் வாங்க மேடைக்குச் செல்லவில்லை. மீண்டும் அவரை அழைத்தும் அவர் பட்டம் பெறச் செல்ல மறுத்துவிட்டார். இதனால் விழா அரங்கில் பரபரப்பு ஏற்பட்டது.

இதன் பின்னர் மற்ற மாணவர்களுக்கு பட்டம் வழங்கப்பட்டது. விழா முடிந்ததும் துணை வேந்தர் பொன்னவைக்கோ, கல்லூரி முதல்வர் பன்னீர் செல்வத்திடம் பட்டம் பெற மறுத்த மாணவி சுமதியை அழைத்து வரும்படி கூறினார். இதைத்தொடர்ந்து அந்த மாணவியை கல்லூரி முதல்வர் அறைக்கு அழைத்து சென்றனர். துணைவேந்தர் அவரிடம் பட்டம் பெற மறுத்தமை பற்றி விசாரித்தார்.

அப்போது இலங்கையில் அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது தனது மனதை மிகவும் பாதித்துள்ளது என்றும், ஈழத்தமிழர்கள் துயரத்தில் இருக்கும்போது தான் பட்டம் பெற்று மகிழ்ச்சி அடைய விரும்பவில்லை என்றும் மாணவி சுமதி தழுதழுத்த குரலில் கூறினார்.

இதன்பின்னர் அந்த மாணவியை சமாதானப்படுத்தி அவருக்கு துணைவேந்தர் பட்டம் வழங்கினார்.

# தமிழகத்துக்குள் புலிகள் ஊடுருவலா?

## பொலிஸார் தீவிர ரோந்து

இராமேஸ்வரம், மார்ச் 24

இலங்கையிலிருந்து 2 விடுதலைப் புலிகள் தப்பிவந்து இராமேஸ்வரத்திற்குள் ஊடுருவ உள்ளனர் எனக் கிடைத்த தகவலின் பேரில் பொலிஸார் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டு விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு -

இலங்கையில் இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் போர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. இதனால் தமிழகக் கடலோரப் பகுதிகளில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இலங்கையில் இருந்து 2 விடுதலைப் புலிகள் கடல் மார்க்கமாக தப்பி இராமேஸ்வரத்திற்குள் ஊடுருவ உள்ளனர் என நேற்றுமுன்தினம் கியூப் பிரிவுப் பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து கடற்கரைப் பகுதி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் கியூப் பிரிவு, மத்திய புலனாய்வுப் பொலிஸார், கடலோரக் காவல் படையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ரோந்து செல்லும் பொலிஸார் கடல் தொழிலில் ஈடுபடும் இளைஞர்களிடம் ரகசிய விசாரணை நடத்தினர். இராமேஸ்வரம், தங்கச்சிமடம், பாம்பன், மண்டபம் பகுதிகளில் அடையாளம் தெரியாத மற்றும் சந்தேகப்படும்படியான புதிய நபர்களின் நடமாட்டம் உள்ளதா என்பது குறித்து அந்தப் பகுதி மீனவர்களிடம் விசாரணை நடத்தப்படுகிறது.

மேலும் ஹோட்டல்கள், தங்கும் விடுதிகள், வைத்தியசாலைகள் என்பன கடுமையாகக் கண்காணிக்கப்படுகின்றன. கடல் பகுதியில் இந்தியக் கடலோரக் காவல் படைக்கு சொந்தமான 'ஹிதுர்சென்னமா' என்ற போர்க்கப்பலில் 200இற்கும் மேற்பட்ட கடற்படையினர் கண்காணித்து வருகின்றனர். அத்துடன் இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான போர்க் கப்பல் ஒன்றும் மன்னார் வளைகுடாப் பகுதியிலும், ஹோவர் கிராப்ட் கப்பலும் தீவிர ரோந்தில் ஈடுபட்டு கண்காணித்து வருகின்றன.



வானில் இருந்தபடி விஜயகாந்த் பிரசாரம் செய்தபோது.......

# மக்களுடன்தான் கூட்டணி

## தேர்தல் பிரசாரத்தில் விஜயகாந்த் தெரிவிப்பு

காஞ்சிபுரம், மார்ச் 24

தெய்வத்துடனும், மக்களுடனும்தான் எங்கள் கூட்டணி - தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த், காஞ்சிபுரத்தில் நேற்றுமுன்தினம் தேர்தல் பிரசாரத்தைத் தொடக்கிவைத்துப் பேசினார். பிள்ளையார்பாளையம், தேரடி, செவிலிமேடு, தாமல் உள்ளிட்ட பகுதிகளில் அவர் பிரசாரம் செய்தார். வானில் இருந்தபடி விஜயகாந்த் பேசியவை வருமாறு -

தி.மு.க., அ.தி.மு.க. என்று நீங்கள் மாறி, மாறி வாக்குப்போட்டு என்ன பயன்? தமிழ்நாடு இன்னும் வறுமையில்தான் இருக்கிறது. இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி இருக்கிறார்கள். முல்லை பெரியாறு, காவிரி, பாலாறு பிரச்சினைகளை இவர்கள் தீர்த்து வைத்தார்களா? தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். மத்திய அரசு தட்டிக் கேட்கவில்லை. தே.மு.தி.கவில் ஒருவர் ஜெயித்தாலும் நாடாளுமன்றம் சென்று பிரச்சினைகளைச் சொல்லித் தட்டிக் கேட்போம்.

தெய்வத்துடனும், மக்களுடனும்தான் எங்கள் கூட்டணி. யாருடன் கூட்டணி வைக்கலாம் சொல்லுங்கள்? நான் அடையாளம் காட்டும் நபரை நீங்கள் ஜெயிக்க வையுங்கள். உங்கள் பிரச்சினையைத் தீர்க்கிறேன். அடையாளம் காட்டுபவர்களுக்கு வாக்குப் போடுங்கள் என்று சொல்வதில் ஒரு பொருள் இருக்கிறது.

சிலர், மது ஒழிப்பு மாநாடு நடத்துகிறார்கள். வறுமையை ஒழிக்க மாநாடு போடுகிறார்களா? மக்களைக் கொள்ளை அடித்து மாநாடு நடத்துகிறார்கள் - என்றார்.

இதனிடையே, அவர் வெளியிட்ட அறிக்கையில், இலங்கை பிரச்சினைக்காக யாரும் தீக்குளிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போரை நிறுத்துவதற்கு தி.மு.க.
# சகலபாதையும் செய்து விட்டது என்கிறார் கருணாநிதி



கொழும்பு, மார்ச் 24

''இலங்கையில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்குத் தேவையான சகலதையும் தி.மு.க. செய்துவிட்டது. இந்த விடயத்தில் இதற்குமேல் எதுவுமே செய்யமுடியாது.''

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் தி.மு.க. தலைவரும், தமிழக முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதி.

''இந்தச் சூழ்நிலையில் எங்களால் எதையெல்லாம் செய்ய முடியுமோ அதையெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை மக்கள் அறிவார்கள். இந்தப் பிரச்சினை தேர்தல் முடிவுகளைப் பாதிக்காது. இலங்கையில் போர் நிறுத்தத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன'' என்று கலைஞர் தெரிவித்தார்.

கேள்வி:- விடுதலைச் சிறுத்தைகள் - பா.ம.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மத்திய, மாநில அரசுகள் இலங்கையில் போர் நிறுத்தத்திற்கு எதையும் செய்யவில்லை என்று குற்றம் சாட்டி வருகின்றன. இதற்கு எப்படிப் பதிலளிக்கப் போகிறீர்கள்?

பதில்:- இலங்கையில் போர்நிறுத்தத்திற்குத் தேவையான அனைத்தையும் நாங்கள் ஆற்றியிருக்கிறோம். இலங்கைத் தமிழர் பிரச்சினையை இராணுவ ரீதியாகத் தீர்க்க முடியாது. அந்தப் பிரச்சினையை அமைதியான, அரசியல் ரீதியான பேச்சுகள் மூலம் தீர்க்க வேண்டுமேயன்றி போர் மூலமாகஅல்ல. போர் நடைபெற்றுவரும் பகுதிகளில் உடனடியாக ஜனநாயக ரீதியான சகஜநிலை உருவாக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டை மத்திய அரசு எடுத்துள்ளது. அந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் மத்திய அரசு செயல்முறைகளை வகுத்து நடவடிக்கைஎடுத்து வருகிறது.

இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வைப்பற்றி தமிழ்நாட்டில் மற்ற எந்த அரசியல் கட்சிகளையும் விட தி.மு.க.தான் மிகுந்த அக்கறை எடுத்து நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை தமிழக மக்களும், இலங்கைத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் நன்கறிவார்கள்.

1956 ஆம் ஆண்டில் இருந்து தி.மு.க. மேற்கொண்ட நடவடிக்கைகள் - நடத்திய போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள் - செய்த தியாகங்கள் இங்குள்ள அனைவருக்கும் தெரியும்.

இந்தியா ஓர் இறையாண்மைமிக்க நாடு. அதைப் போலவே இலங்கையும் இறையாண்மை மிக்க நாடுதான். ஒரு இறையாண்மை மிக்க நாடு மற்றொரு இறையாண்மை மிக்க நாட்டிற்கு எந்த வகையான வேண்டுகோளை விடுக்கலாம், அந்த நாட்டின் மீது எத்தகைய அழுத்தத்தைக் கொடுக்கலாம், அதற்கு அரசியல் சட்ட ரீதியாக இருந்துவரும் கட்டுப்பாடுகள் என்ன என்பதையும் மக்கள் தெளிவாகவே அறிவார்கள் - என்றார். (அ-சி)

## தடுப்பூசி ஏற்றப்பட்ட மாணவியின் மரணத்துக்கு மருத்துவக் கவனயீனமே காரணம் எனப்படுகின்றது

கொழும்பு, மார்ச் 24

மாத்தறையில் ருபெல்லா தடுப்பூசி ஏற்றப்பட்ட மாணவியொருவர் உயிரிழந்தமைக்கு மருத்துவ கவனயீனமே காரணம் என ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுகாதார சேவையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் பி.ஜி.மகிபால தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணையின்போது மாத்தறை சென். தோமஸ் கல்லூரி மாணவி இறப்பதற்கு மருத்துவ கவனயீனமும் பாடசாலைகளில் தடுப்பூசி ஏற்றப்படும்போது, பின்பற்றவேண்டிய வழிமுறைகள் புறக்கணிக்கப்பட்டமையுமே காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இவ்விசாரணை முடிவுகள் சுகாதார அமைச்சரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, மாணவியின் ம்ரணம் தொடர்பான மற்றுமொரு விசாரணையை உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் மேற்கொள்ளவுள்ளனர். இதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு பிரான்ஸ் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நிபுணர்கள் இலங்கையில் பயன்படுத்தப்படும் தடுப்பூசிகளின் தராதரம் குறித்து ஆராயவுள்ளனர். (அ-சி)

## ருபெல்லா தடுப்பூசி வழங்கியதில் மாத்தளையிலும் மாணவிகள் பாதிப்பு

கொழும்பு, மார்ச் 24

மாத்தளை ரத்தோட்டை பகுதியில் மேலும் பாடசாலை மாணவிகள் சிலர் ருபெல்லா தடுப்பூசி ஒவ்வாமை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த 17ஆம் திகதி இந்த மாணவிகளுக்கு ருபெல்லா வழங்கப்பட்டமைக்கான தகவல்கள் வெளியாகியுள்ளன என ரத்தோட்டை வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆறு மாணவிகள் இவ்வாறு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவர் நேற்றுமுன்தினமும், ஏனைய நான்கு மாணவிகள் நேற்றைய தினமும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.(சி)

## கல்வி டிப்ளோமா மீள்பதிவு இன்று

யாழ்ப்பாண[illegible] 24

இலங்கை திறந்த பல்கல[illegible]கழக யாழ்-பிராந்திய நிலையத்தில் ப[illegible]மேற் கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை இதுவரை பயின்று இடைநிறுத்திய/ தொடராமல் நிறுத்திக் கொண்டவர்கள் மீள்பதிவினை மேற்கொள்ளும் முகமாக இன்றும் நாளையும் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துக்கு சமுகம் தருமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். (1)

## மானிப்பாயில் இன்று பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், மார்ச் 24

வலி.தென்மேற்கு பிரதேசசபையின் மானிப்பாய் கிராம உப - அலுவலகத்தில் பணியாற்றி பதவியுயர்வு பெற்று இடம் மாற்றலாகிச் சென்ற கே.ஆரூரன், க.ஜீவானந்தன் ஆகியோருக்கான பிரிவுபசார விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 ம ணிக்கு அலுவலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக வலி - தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் கலந்து கொள்வார். (1)

## தொண்டர் ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட தொண[illegible]ர் ஆசிரிய சங்கக் கலந்துரையாடல் நாளை[illegible]தன் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.புதி[illegible]யர் கல்லூரியில் நடைபெறவிருக்கி[illegible] சகல தொண்டர் ஆசிரியர்களையும் சமுகம் தருமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (1)

## அச்சுவேலியில் அதிபர்கள் கூ[illegible]ட்டம்

அச்சுவேலி குடும்பப் பாடசாலை அதிபர்களுக்கான கல்வி அபிவிருத்திக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்கிழமை 11.[illegible] மணிக்கு புனித தெரேசா மகளிர் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெறவுள்ளது. குடும்பப் பாடசாலை அதிபர்கள் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு ஆதரவாக வாசுதேவ நாணயக்கார நீதிமன்றில் சாட்சியம்

### மனித உரிமை விடயத்தில் ஜனாதிபதிக்கு உதவியவர் என்று தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 24

ஊடகவியலாளர் எஸ்.ஜே. திஸநாயகம் நேற்றுக் கொழும்பு மேல்நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டார்.

அந்த வேளையில், அவருக்கு ஆதரவாக மூத்த அரசியல்வாதியும் ஜனாதிபதியின் ஆலோசகருமான வாசுதேவ நாணயக்கார நீதிமன்றில் சாட்சியமளித்தார்.

முன்னர், மனித உரிமை விடயங்களில் தம்முடன் இணைந்து பல்வேறு பணிகளை திஸநாயகம் முன்னெடுத்தவர் என்று வாசுதேவ நாணயக்கார நீதிமன்றில் கூறினார்.

''மனித உரிமைகள் விடயத்தில் நானும் திஸநாயகமும் இணைந்து ஜனாதிபதியுடன் பணியாற்றியிருக்கிறோம். திஸநாயகம் தயாரித்த மனித் உரிமை அறிக்கையைத்தான் ஜனாதிபதி ஜெனிவாவுக்கு கொண்டுசென்றார். இப்படியாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சகல சமூகத்தவர்களுடனும் இணைந்து பணியாற்றிய திஸநாய்கம் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பார் என நான் கருதவில்லை'' - என்று வாசுதேவா தெரிவித்தார்.

இதேவேளை - பொலிஸாரிடம் தாம் வழங்கிய வாக்குமூலம், சுய விருப்பின் பேரில் - சுதந்திரமாக - வழங்கப்படவில்லை என்றும், பொலிஸார் தம்மிடம் வற்புறுத்தியே - அச்சுறுத்தியே - வாக்குமூலம் பெற்றனர் என்றும் திஸநாயகம் நீதிமன்றில் தெரிவித்தார்.

இவற்றைச் செவிமடுத்த நீதிவான் திபால விஜயசுந்தர திஸநாயகத்தின் தடுப்புக் காவலை மேலும் நீடித்து உத்தரவிட்டார். (அ-சி)

## ஐ.தே.க. தலைமையை எதிர்க்கும் எம்.பிக்கள் அரசுடன் ஒருபோதும் இணையவே மாட்டார்கள்

### கட்சிக்குள் இருந்தே போராட்டம் என்கிறார் ஜோன்சன் பெர்னாண்டோ

கொழும்பு, மார்ச் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து ரணில் விக்ரமசிங்கவை நீக்கவேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ள ஐ.தே.க. எம்.பிக்கள் எவரும் அரசுடன் இணையமாட்டார்கள் என்றும் அரசின் வலையில் சிக்கித் தேசிய அரசு ஒன்றை அமைக்க இடங்கொடுக்கமாட்டார்கள் என்றும் ஐ.தே.கட்சி எம்.பி. ஜோன்ஸன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தலைமைத்துவத்தை மாற்றி கட்சியைச் சீரமைக்கும்வரை கட்சிக்குள் இருந்தே போராட்டம் நடத்தப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் மாற்றப்பட்டு, எதிர்காலத் தேர்தல்களை வெற்றிகொள்ளும் வகையில் கட்சி சீர்திருத்தப்படல் வேண்டும் என்று தான் உட்பட பல ஐ.தே.கட்சி எம்.பிக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

எமது இந்தப் போராட்டம் கட்சியின் எதிர்கால நலனை அடிப்படையாகக் கொண்டதே தவிர வேறு தீய நோக்கங்களைக் கொண்டது அல்ல.

எமது இந்தப் போராட்டத்தின் விளைவாக நாம் அரசுடன் இணையப் போகிறோம் என்று சிலர் கூறினர். அதில் எந்த உண்மையுமில்லை.

அரசில் இணைய வேண்டிய எந்தத் தேவையும் எமக்கில்லை. எமது கட்சியில் சில முக்கிய மாற்றங்களை மேற்கொண்டாலே போதும்.

ஆனால், பொருளாதார ரீதியாக இந்த நாட்டைச் சீரழித்துக் கொண்டு மக்கள் மீது பாரிய சுமையை ஏற்றி போலியானதோர் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் இந்த அரசின் வலையில் நாம் ஒருபோதும் சிக்கமாட்டோம். கட்சியின் செயற்குழு உரிய தீர்மானத்தை மேற்கொள்ள காலம் எடுத்துக்கொண்டாலும் கூட தலைமைத்துவத்தை நீக்கும் எமது போராட்டம் உள்ளே இருந்தவாறு தொடரும் - என்றார். (அ-சி)

## மரண அறிவித்தல்

### செல்வி ஜீவமணி சின்னத்துரை



இல.18 பழைய பூங்கா வீதி கண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஜீவமணி சின்னத்துரை (22.03.2009) ஞாயிற்றுக் கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசம்மா ஆகியோரின் அன்பு மகளும், அருமை நாயகம் Dr.தர்மநாயகம் (கிருந்திவல), துரைசிங்கம் (மூத்தமணி) அருளானந்தம் (சின்னமணி) காலஞ்சென்ற பிரான்சிஸ் மற்றும் றூபாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திலகேஸ்வரி, பிறேமாவதி, ஜெயதேவி (பபா), ஜெயானந்த தேவி, மாகிரட்கிறேஸ், கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (25.03.2009) புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அவரது பூதவுடல் நல்லடக்கத்திற்காக பரி.யோவான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல: 18 பழைய பூங்கா வீதி,*
*கண்டுக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## சேவைநலன் பாராட்டு



### திரு. இராசையா - வரதராசா
(ஆசிரியர் சேவை தரம் I)

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் 18 வருடங்களாக பணியாற்றி இன்று (24.03.2009) தனது சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு இராசையா வரதராசா (ஆசிரியர் சேவை தரம் I) அவர்கள் எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவையினைப் பாராட்டுவதோடு அவரது ஓய்வு காலத்தில் அவர் தமது குடும்பத்தோடு சகல சௌபாக்கியங்களுடன் இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,வதிரி. *பாடசாலைச் சமூகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை, யாழ்ப்பாணம்.





நேற்றைய தாக்குதலில் காயமடைந்த மழலைகளைப் படங்களில் காண்கிறீர்கள்.

## திருகோணமலை குருக்களுக்கு மரண தண்டனை

திருகோணமலை, மார்ச் 24

தனது மனைவியை கொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த திருக்கோணேஸ்வர ஆலய முன்னாள் குருக்களான சிவகடாட்சக் குருக்கள் விசாகேஸ்வர ஐயருக்கு நேற்று திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

1996 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி கொலைச்சம்பவம் இடம்பெற்ற போதும் 2006 ஜூலை 21 ஆம் திகதி இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆனால் எதிரி நீதிமன்றில் ஆஜராகவில்லை.

எதிரி வெளிநாடு செல்வதற்கு கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு சென்ற போது குடிவரவு குடியகல்வு அதிகாரிகளினால் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றின் மூலமாக திருகோணமலைக்கு அனுப்பப்பட்டிருந்தார். (அ-06)

## புதுக்குடியிருப்....

(முதலாம் பக்கந் தொடர்ச்சி)

படையினர் கைப்பற்றியுள்ளனர் என ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டது.

அதேவேளை பற்றிக்கரைப்பிரதேசத்தில் 55 ஆவது படைப்பிரிவினருக்கும் புலிகளுக்குமிடையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகளுக்கே இழப்புகள் ஏற்பட்டன என ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.

எனினும் இம் மோதல்களில் இரு தரப்புக்கும் ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பான எண்ணிக்கை எதுவும் வெளியிடப்படவில்லை.

(அ-சி)

## பாதுகாப்பு வலய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ளன.

இந்தத் தாக்குதலில் 25 சிறுவர்கள் உட்பட 102 பேர் மரணமானார்கள் என்றும் 27 சிறுவர்கள் உட்பட 140 பேர் காய மடைந் தனர் என்றும் இணையத்தளங்கள் மேலும் தெரி வித்தன.

இணையத்தளங்களில் நேற்றைய இழப்புக்கள் குறித்துத் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் வருமாறு:-

மக்கள் பாதுகாப்பு வலயப் பகுதிகளான மாத்தளன், வலைஞர்மடம், இடைக்காடு, முள்ளிவாய்க்கால் மற்றும் அம்பலவன் பொக்கணை பகுதிகளில் திங்கட்கிழமை படையினர் அதிகாலை தொடக்கம் அகோர ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை நடத்தினர்.

இதில் 25 சிறுவர்கள் உட்பட 102 மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 27 சிறார்கள் உட்பட 140 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் 'நிக்கொட்' நிறுவனப் பணியாளர் ஒருவரும் கூட்டுறவுச் சங்கப்பணியாளர் மூவரும் அடங்குகின்றனர்.

**தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்**

மாத்தளன் பகுதியை நோக்கி நேற்றுக் காலை தொடக்கம் இரவு 7 மணிவரை படையினர் நடத்திய அகோர ஆட்லெறி ஷெல் ஆர்பிஜி உந்துகணை மற்றும் துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல்களில் மட்டும் 68 பேர் பலியானார்கள்.

இடைவிடாது நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பல குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் முழுமையாக படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் அதிகமானோர் உடல் சிதறிப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சியான ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுத்தாக்குதல்களால் இப்பகுதியில் காயமடைந்தவர்களை மீட்புப் பணியாளர்கள் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பலர் உயிரிழந்துள்ளனர்.

கரைத்துறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க நிவாரணக் கிளை மற்றும் அதன் தலைமைப் பணியகம், களஞ்சியம் வாகனங்கள் தரித்து நின்ற பகுதிகள் எல்லாம் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகின. அவை பெரும் அழிவுகளுக்கு உட்பட்டன. மேலும் நிவாரணம் பெற வந்தவர்கள் அதிகளவில் கொல்லப்பட்டும் காயமடைந்துமுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் நேற்று மாலை வரை அடையாளம் காணப்பட்டவர்களின் பெயர் விவரம் வருமாறு:

து.நாகேஸ்வரி (வயது 26), வீ.நெல்சன் குமார் (வயது 34), வீ.உதயசேகர் (வயது 43), சு.பாலசுப்பிரமணியம் (வயது 34), சு.பாலசிங்கம் (வயது 45), த.தருமலட்சுமி (வயது 60), சு.மாரி (வயது 52), கே.ரஜனி காந்த் (வயது 29), மோ.தர்சிகன் (வயது 06), க.பஞ்சலிங்கம் (வயது 50), தா.அற்புதம் (வயது 60), தா.ஸ்ரீஸ்கந்தராசா (வயது 47), ப.சந்திராதேவி (வயது 40), வே.ஆறுமுகம் (வயது 75), வெ.குஞ்சுப்பனி (வயது 76), சி.சண்முகநாதன் (வயது 57), கா.கலைவரதராசா (வயது 54), வீ.சசிதரன் (வயது 38), ல.சசிதரன் (வயது 37), த.யோகமணி (வயது 36), தே.தேவசகாயம், (வயது 59), தே.அமராவதி (வயது 49), கு.நாகேஸ்வரன் (வயது 21), கே.ரஞ்சித் (வயது 28), யோ.தர்சிகா (வயது 06), கி.காவியா (வயது 30), வி.செல்லையா (வயது 78), செ.மாரிமுத்து (வயது 88), சே.தவராசா (வயது 45), த.கௌரி (வயது 25), ம.தேனுஜா (வயது 03), ந.ஜதுர்சிகன் (வயது 02 மாதங்கள்), செ.லக்சனா (வயது 08 மாதங்கள்), த.விபுசன் (வயது 13), ச.கல்பனா (வயது 05), செ.லக்சனா (வயது 08), சிறீ.நிலானி (வயது 13), மி.மரியமலர் (வயது 13), க.துசியந்தன் (வயது 10), சு.யதீஸ்வரன் (வயது 04), சு.ஜனதீசன் (வயது 07), சு.சந்திரகலா (வயது 17), நீ.பாலகுமார் (வயது 11), சி.கலைவாணி (வயது 35), இ.கண்மணி (வயது 74), க.ரீற்றா (வயது 47), வீ.வீரம்மா (வயது 60), கி.கணேசராசா (வயது 35), ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஏனையோரின் பெயர்கள் விவரம் திரட்டப்படும்வரை கிடைக்கவில்லை

கரைத்துறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வைக்கப்பட்டிருந்த உலக உணவுத்திட்ட நிவாரணப்பொருள்கள் பொருள்களை ஏற்றி-இறக்க செஞ்சிலுவைச் சர்வதேச குழுவால் வழங்கப்பட்ட எரிபொருள் மற்றும் நிவாரணப் பொருள்களை ஏற்றும் லொறிகள், டிராக்டர்கள் என்பனவும் படையினரின் ஷெல் தாக்குதல்களில் தேசமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## மீண்டும் புறப்படும் யாழ்தேவியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணத்தை ஆரம்பித்தது. ஆனால், அந் தப் பெறுமதி வாய்ந்த ரயில் பாதையை பின்னர் பயங்கரவாதிகள் நாசம் செய்தனர்.

ஆனால், பழைய கீர்த்தியை நாம் மீள உருவாக்கலாம். அதன்பொருட்டு மங்களகரமான இந்த வைபவத்தில் 'உத்தரமித்திரா' (வடக்கின் தோழன்) நிதியம் ஆரம்பிக்கப்பட் டிருக்கிறது.

எமது அரசு ஒரு பக்கம் பயங்கர வாதிகளிடம் இருந்து மக்களை விடுவித்து வருகி றது.மறுபுறம் வடக்குக் கிழக்கை அபிவிருத்தி செய்கிறது.

ரயில் பாதை அமைக்கும் பணியை எனது ஏப்ரல் மாத சம்பளத்தை வழங்கி ஆரம்பித்து வைக்கிறேன்.

இந்த பணிகளில் எனது அம்பாந் தோட்டை மக்களை ஈடுபடுத்தப் போகிறேன்.

அத்துடன் வவுனியாவுக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் உள்ள 28 ரயில் நிலையங்களையும் புனரமைக்க இருக்கின்றேன்.

வவுனியாவில் இருந்து 5 கிலோ மீற்றர் தூரத்துக்கு யாழ்தேவி சேவையை ஏப்ரல் 23ஆம் திகதி முதல் விஸ்தரிக்கத் திட்டமிட் டிருக் கிறேன் -என்றார்.

நிகழ்வில் ஜனாதிபதி தமிழ் மொழியிலும் உரையாற்றினார்.

நேற்றைய நிகழ்வில் 'வடக்கின் வசந்தம்' இணையத்தளத்தை கிரிக்கெட் சாதனையாளர் முத்தையா முரளிதரன் தொடக்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மற்றும் அமைச்சர்கள், சமயப் பிரமுகர்கள், முதலமைச்சர்கள், ராஜ தந்திரிகள் என பலர் கலந்து கொண்டனர். (அ-1-6)

## குடாநாட்டில் மின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மின்வெட்டுக்குப் புறம்பாக குடாநாட்டின் சகல இடங்களிலும் காலை நேரங்களிலும் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-1)

## பேச்சுக்கு வரு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கையெழுத்துடன் இந்த அழைப்பு நேற்று கூட்டமைப்பு எம்.பிக்கள் 22 பேருக்கும் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அழைப்பிதழ் முதலில் பக்ஸ் மூலமாக அனுப்பப்பட்டது.அதனைத் தொடர்ந்து அரை மணிநேரம் கழித்து கொழும்பில் உள்ள கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரது வீடுகளுக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

26ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு அலரி மாளிகையில் இச்சந்திப்பை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அந்த அழைப்பிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழைப்பிதழைப் பெற்றுக்கொண்ட எம்.பிக்கள் இது தொடர்பில் நாளை கூடி முடிவெடுக்கத் தீர்மானித்துள்ளனர்.

தற்போதைய அரசியல் நிலைவரம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, யுத்தம் மற்றும் வன்னியில் இருந்து மக்கள் இடம்பெயர்தல் உள்ளிட்ட பல விடயங்கள் பற்றி இச்சந்திப்பில் பேசப்படும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு ஒன்றை முன்வைப்பதற்காக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு 107 தடவைகள் கூடியபோதும் இதில் கலந்துகொள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஒரு தடவையேனும் அரசால் அழைப்பு விடுக்கப்படவில்லை என்று கூட்டமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பு எம்.பி. பா. அரியநேத்திரன் கடந்த வாரம் நாடாளுமன்றில் உரையாற்றியபோது இது தொடர்பாக சுட்டிக் காட்டியமையும் குறிப்பிடத்தக்கது.(அ-சி)

## காசநோய் தருப்பு தின நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், மார்ச் 24

சர்வதேச காச நோய் தடுப்பு தினமான இன்று யாழ். காசநோய் வைத்தியசாலையில் பி.ப. 2.30 மணிக்கு 'காசத்தினை நிறுத்த எங்களால் முடியும் நாம் சுலபமாக கட்டாயம் செய்ய முடியும்' எனும் தொனிப் பொருளில் நிகழ்வு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ஏ.கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (1-6)

## புதுமாத்தளனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் 8ஆண்களும், 3பெண்களும், 2சிறுவர்களும் அடங்குவர். பல நாள்களாகக் காத்திருந்து எரிபொருள்களை சேகரித்தே தா[illegible] இங்கு வந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

புது மாத்தளனில் இருந்து நள்ளிரவு வேளையில் புறப்பட்டு ஒன்றரை நாள்கள் பயணம் செய்து கொக்குத்தொடுவாய்ப் பிரதேசத்தை அடைந்த இவர்கள் பின்னர் கடற்படையின் துணையுடன் புல்மோட்டை தள வைத்தியசாலைக்குக் கூட்டிச் செல்லப் பட்டு அனுமதிக்கப்பட்டனர். (அ-06)

## கப்பல் சேவை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு தெரிவித்தார்.

இந்தச் சேவையில் பயணம் செய்ய பயணச் சீட்டுப் பெற்றவர்களை ரயில் நிலையப் பகுதிக்கு வரும்படி கேட்கப் பட்டுள்ளது.(1)

## நில்க்கண்ணியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவத்தில் இராணுவத்தினர் மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் அம்பாறை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். என்றும் அந்த ஊடக மத்திய நிலையம் தெரி வித்துள்ளது.

## மக்களை விடுவித்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதே அரசின் நிலைப்பாடாகும். அதனையடுத்து புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்த பின்னரே பேச்சுக் குறித்து கவனம் செலுத்தும் நிலைப்பாட்டை அரசு கொண்டிருக்கிறது.

இலங்கை அரசு, தமிழ்மக்களைப் புறக்கணிக்கிறது என புலிகள் வெளிநாடுகளில் பிரசாரம் செய்து வருகின்றனர். எனினும் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கைகளை தற்போது உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன- என்றார். (அ-சி)


BIOLOGY
A/L 2009 DAY
Paper Class
Tue., Wed. 3.15-4.30p.m.
ஆரம்பம்
24.03.2009
Tue. 3.15 p.m.
V.A.ஞானேந்திரன்
NEC
Clock Tower Road, Jaffna

அடிப்படை சுகாதார மருத்துவ கற்கை நெறி
JFHL
நோக்கம்: அடிப்படை சுகாதார மருத்துவ அறிவையும், செயற்றிறன்களையும் பெற்றுக்கொண்டு தேவைப்படும் இடங்களில் பயன்படுத்தல்

| | |
|---|---|
| அடிப்படைத் தகைமை | :G.C.E. O/L |
| பயிற்சிக்காலம் | :6 மாதம்(வார இறுதி நாள்கள்) |
| பயிற்சிக் கட்டணம் | :ரூபா 4000.00 |
| விண்ணப்ப முடிவுதிகதி | :10.04.2009 |
| அனுப்பவேண்டிய முகவரி | :இணைப்பாளர், "சுகவாழ்வுக்கான பயணம்" 41, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம். |

பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
தொலைபேசி இலக்கம்: 060 221 6436
மருத்துவ அறிவையும்திறன்களையும் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
இணைப்பாளர்.
சுகவாழ்வுக்கான பயணம்

வெளிவந்து விட்டது
வரலாறு
S.M. கண்ணகுமார் (B.com)
மீட்டலும் பயிற்சியும்
9ஆம், 10ஆம், 11ஆம் உயர்தர மாணவர்களுக்கான புதிய வெளியீடு
★நூற்றுக்கணக்கான பல் தேர்வு வினா விடைகள்
★நூற்றுக்கணக்கான இலங்கைப்படவினா விடைகள்
★நூற்றுக்கணக்கான உலகப்பட வினா விடைகள்
★பல படங்கள் தொடர்பான வினா விடைகள்
2008 ஆம் ஆண்டு PassPaper புள்ளி வழங்கும் திட்டம்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
பழையமாணவர்சங்க
20 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்
தலைவர்: திரு.க.சண்முகசுந்தரம்
இடம்: யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி
(பேராசிரியர் அ.துரைராசா ஞாபகார்த்த மண்டபம்)
காலம்: 29.03.2009 ஞாயிறு முற்பகல் 10 மணி
அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.
பழைய மாணவர் சங்கம்,
உடுப்பிட்டி அ.மி. கல்லூரி,
வல்வெட்டித்துறை.
பொ.சுரேஸ்குமார்,
செயலாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.03.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

**உதயன்**

**நற்சிந்தனை**

உன்னால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒருபோதும் நினைக் காதே. அப்படி நினைப்பது ஆன்மீகத்துக்கு முற்றிலும் முரண்பட்டது

**க.பொ.த.உயர்தர கல்விச்சுடர்**

24.03.2009 செவ்வாய்க்கிழமை

**Special Guidance For A/L 2009&2010**

க. பொ.த உயர்தர மாணவர்களுக்கென தனியாக வெளிவரும் **கல்வி இணைப்பிதழ்**


**உயர்தர கலை, வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான விளக்கக்கட்டுரைத்தொடர்-2**

# பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தலும் பட்டியல்களின் வகைகளும்

**அன்பு மாணவர்களே!**

**இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்குச்சந்தையின் பங்களிப்புப் பற்றி அடிக்கடி அதிகம் பேசப்பட்டு வருகின்றது. எனினும், இது பற்றிவிளக்கமின்மையும்அறிவின்மையும்மாணவர்மத்தியில்காணப்படுகின்றன. 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்கக் கம்பனிச்சட்டம் உருவானதன் பின்னர் கம்பனிகளின் செயற்பாடுகளிலும் பங்குச்சந்தையிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.இவைஉயர்தரகலை,வர்த்தகப்பிரிவுமாணவர்கள் அவசியம் அறிந்துகொள்ளவேண்டியவை.எனவே,அனைவரும் இலகுவில் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் இந்தக் கட்டுரைத்தொடர் பிரசுரிக்கப்படுகின்றது.**

கடந்தவாரத் (17.03.09) தொடர்ச்சி...

பங்குச்சந்தையின் தொழிற்பாடுகளில் எழக்கூடிய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு, பணிப்பாளர் சபை அவ்விடயங்கள் சார்பான பல உப கமிட்டிகளை அமைத்துக்கொண்டுள்ளது.

அவையாவன,

* சட்ட விதிகளுக்கும் உப விதிகளுக்குமான கமிட்டி. (Rules and by - laws Committee)
* நிதிப் பகுப்பாய்வு அபிவிருத்திக்கமிட்டி. (Finance, Research and Development Committee)
* ஒழுங்காற்று மற்றும் நடுத்தீர்ப்புக்கமிட்டி. (Disciplinary and Arbitration Committee)
* பிணக்குகள் தீர்த்துவைத்தல் கமிட்டி. (Dispute Resolution Committee)
* கணக்காய்வு உப கமிட்டி. (Audit Sub - Committee)

## இலங்கைப் பங்குச்சந்தையில் சாதாரண பங்குகள் பட்டியலிடல்

கொழும்புப் பங்குச்சந்தையில் கம்பனிகள் பட்டியற்படுத்தல் இரு வகையான திரைகள் மூலம் நிகழ்கின்றன. அவை பிரதான (முதலாந்தர) பட்டியல் திரை, இரண்டாந்தர பட்டியல் திரை என அழைக்கப்படுகின்றன. இவற்றிற்கு மேலதிகமாக பட்டியற்படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகளை கைமாற்றுவதற்கு OTC பட்டியல் திரை என்ற பெயரில் மற்றுமொரு திரையும் இருக்கின்றது. இவை ஒவ்வொரு பட்டியல் திரையிலும் பட்டியல்படுத்துவதற்கு அல்லது கம்பனிகளின் பெயர்களைப் பதிவுசெய்துகொள்வதற்குப் பொதுக்கம்பனி ஒன்று பின்வரும் தகைமைகளைநிறைவு செய்திருக்கவேண்டுமென பங்குகள் கைமாற்றகம் குறித்துரைக்கின்றது.

### பிரதான(முதலாந்தர)பட்டியல்திரை (Main Board)

பொதுக்கம்பனி ஒன்று அதனது சாதாரண பங்குகளை பிரதான பட்டியல் திரையில் பட்டியல் படுத்திக்கொள்வதற்கு அது பின்வரும் தகைமைகளை நிறைவு செய்திருக்க வேண்டும்.

அ. குறித்த கம்பனி குறைந்த பட்சம் 75 மில்லியன் ரூபாவுக்கு வழங்கியமூலதனத்தையோ அல்லதுசந்தை மூலதனத்தையோ கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. குறித்த கம்பனி குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கான இலாபகரத் தன்மையை வெளிப்படுத்தியிருக்கவேண்டும்.

### இரண்டாந்தர பட்டியல் திரை (Second Board)

பொதுக்கம்பனி ஒன்று இரண்டாந்தர பட்டியல் திரையில் சாதாரண பங்குகளை பட்டியற்படுத்திக்கொள்வதற்கு அக்கம்பனி 5 மில்லியன் ரூபாவுக்கான வழங்கிய மூலதனம் அல்லது சந்தை மூலதனத்தை வைத்திருக்கவேண்டும்.

இரண்டாந்தர பட்டியல் திரையில் பட்டியல்படுத்தியுள்ள கம்பனி ஒன்று முதலாந்தர பட்டியல் திரையில் பட்டியற்படுத்திக்கொள்வதற்கும் விண்ணப்பிக்க முடியும். அதற்கு அக்கம்பனி முதலாந்தர பட்டியல் திரையில் பட்டியல்படுத்திக் கொள்வதற்கான தகைமைகளை நிறைவு செய்திருக்கவேண்டும்.

தற்போது கீழ்க்காணும் 12 கம்பனிகள் இரண்டாந்தர பட்டியல் திரையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ளன.

* ஏஸியன் எலையன்ஸ்
* பேன் ஏஸியா
* போட்ரஸ் ரிஸோர்ட்ஸ்
* கீல்ஸ் ஹோட்டல்
* லைட் ஹவுஸ் ஹோட்டல்
* மாரவில ரிஸோர்ட்ஸ்
* ஆஷா சென்ரல்
* ஆசிரி மெடிக்கல்
* ஈ சௌலிங்
* விடுல் லங்கா
* உடப்புசல்லாவ பெருந்தோட்டக் கம்பனி
* டெஸ் ஹக்ரோ

**விசேடமாக**

**உயர்தரப் பொருளியல் மாணவர்களுக்காக நடைமுறை விவரங்களுடன் ஒப்பிட்டு தொகுக்கப்பட்டுள்ளது.**

## பங்குச்சந்தையில் கடன் பிணைகள் பட்டியற்படுத்தல்

பொதுக்கம்பனிகளின் கடன் பிணைப்பத்திரங்கள் கொழும்புப் பங்குச் சந்தையில் முதலாந்தரப்பட்டியல் திரையில் அல்லது இரண்டாந்தரப் பட்டியல் திரையில் பட்டியற்படுத்திக் கொள்ள முடியும்.

### பிரதான (முதலாந்தர) பட்டியல் திரை (Main Board)

கொழும்பு பங்குச்சந்தையின் முதலாந்தரப்பட்டியல் திரையில் குறித்த ஒரு கம்பனியின் கடன் பத்திரங்களை பட்டியற்படுத்திக்கொள்வதற்கு அக்கம்பனி பின்வரும் தகைமைகளை நிறைவு செய்திருக்கவேண்டும்.

அ. பட்டியற்படுத்திக்கொள்ளும் கடன் பத்திரங்களுக்கான வட்டியையும் மூலதனத்தையும் செலுத்த முடியும் என்பதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் பெற்றுள்ள வங்கி ஒன்றின் மூலமோ அல்லது கொழும்புப் பங்குகள் கைமாற்றகம் ஏற்றுக்கொண்டுள்ள கடன் வழங்கும் நிறுவனம் ஒன்றின் மூலமோ உத்தரவாதம் பெற்றிருக்கவேண்டும். அல்லது

ஆ. குறித்த கம்பனியின் பிணைப்பத்திரங்களுக்கு அக்கம்பனியின் சொத்துக்களால் உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கவேண்டும் அல்லது.

இ. இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு ஏற்றுக்கொள்ளக்கூடிய கடன்கள் மதிப்பீட்டு நிறுவனம் ஒன்றின் மூலம் குறித்த கம்பனியின் கடன் பிணைப்பத்திரங்கள் முதலீட்டு அளவு சார்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்று பெற்றிருக்கவேண்டும்.

### இரண்டாந்தர பட்டியல் திரை (Second Board)

குறைந்தபட்சம் 3 ஆண்டு காலம் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் கம்பனி ஒன்றை இரண்டாந்தர பட்டியல் திரையில் பட்டியல்படுத்திக்கொள்வது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

### (OTC) பட்டியல் (OTC Board) திரை

இது பட்டியற்படுத்தப்படாத கம்பனிகளுக்கான பட்டியலாகும். பட்டியற்படுத்தப்படாத பொதுக்கம்பனிகள் தங்கள் பங்குகளை OTC பட்டியல் மூலம் கைமாற்றம் செய்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு தம்மை கொழும்புப் பங்குச்சந்தையில் பதிவு செய்துகொள்ளவேண்டும். அவ்வாறு பதிவு செய்துகொண்ட கம்பனிகள் தமது சாதாரண பங்குகளை மாத்திரம் OTC பட்டியல் மூலம் கைமாற்றல்கள் செய்துகொள்வதற்கு அனுமதிக்கப்படும். பிரதான பட்டியல், இரண்டாம்தர பட்டியல் என்பவற்றில் பட்டியலிடுவதற்கு எதிர்பார்த்திருக்கும் பொதுக்கம்பனிகள் தமது பங்குகளை OTC பட்டியல் ஊடாக கைமாற்றம் செய்து கொள்வதன் மூலம் அக்கம்பனிகள் நிதி உலகிற்கு தம்மை அறிமுகம் செய்து கொள்ளக்கூடிய வாயுப்புக்களை பெற்றுக்கொள்கின்றன.OTC பட்டியல் திரையில் தற்போது இரண்டு கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவையாவன,

* ஜனசக்தி ஆயுள் காப்புறுதிக் கம்பனி
* கண்டி தனியார் மருத்துவமனை

தற்போது OTC பட்டியல் திரையில் நடவடிக்கைகள் அரிதாகக் காணப்படுகின்றன.

### மீறுவோர் பட்டியற் திரை (Default Board)

பங்குச்சந்தையில் பட்டியற்படுத்திக் கொள்வதற்கான ஒழுங்கு விதிகளை மீறும் கம்பனிகளினதும், ஒழுங்கு விதிகளை பின்பற்றத்தவறும் கம்பனிகளினதும், பெயர்களை மற்றுமொரு பட்டியல் திரையில் பட்டியலிடுவதற்கு கொழும்பு பங்குச்சந்தைக்கு அதிகாரம் வழங்கப் பட் டுள்ளது. இவ்வகையான கம்பனிகளின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டியல் திரை மீறுவோர் பட்டியற்திரை என அழைக்கப்படும். கம்பனி ஒன்று மீறுவோர் பட்டியல் திரைக்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் மாற்றப்படும்.

அ. பட்டியல்படுத்தப்பட்ட கடன் பிணைப்பத்திரங்களுக்கான வட்டியை குறித்த கம்பனி அதனைச் செலுத்தவேண்டிய உரிய காலத்தில் செலுத்தத் தவறுதல்.

ஆ. பட்டியல்படுத்தப்பட்ட கடன் பிணைப்பத்திரங்களுக்கான மீட்கத்தகு மூலதனத்தை மீட்கப்பட வேண்டிய தினத்தில் மீட்கத்தவறுதல்.

இ. காலாண்டுக்கான பிரசுரிப்பு அறிக்கையை அது வெளியிடப்பட வேண்டிய தினத்திற்கு பின்னர் வரும் வாரம் ஒன்றிற்குள் வெளியிடத் தவறுதல்.

ஈ.ஆண்டறிக்கையைஅதுவெளியிடப்படவேண்டியதினத்திற்கு பின்னர் வரக்கூடிய இரு வாரகாலங்களுக்குள் வெளியிடத் தவறுதல்.ஒழுங்குவிதிகள்மீறப்பட்டுள்ள காலம் வரை குறித்த கம்பனியின் பிணைப்பத்திரங்கள் மீறுவோர் திரையில் பட்டியலிடப்பட்டிருக்கும். குறித்த ஒழுங்கு விதிகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் அப்பிணைப்பத்திரங்கள் மீறுவோர் பட்டியல் திரையிலிருந்து நீக்கப்பட்டு உரிய பட்டியல் திரையில் பட்டியலிடப்படுகின்றன. 2005ஆம் ஆண்டு ஜூலை மாதம் இறுதியில் 18 கம்பனிகளின் சாதாரண பங்குகள், இந்த மீறுவோர் பட்டியல் திரையில் பட்டியலிட்டு காட்டப்பட்டிருந்தன.

### பங்குகள் பரிமாற்று செயற்பாட்டுத் துறைகள் (Sectors)

கொழும்பு பங்குகள் பரிமாற்றகத்தில் பட்டியற்படுத்தப்பட்டுள்ள உரிமை மூலதனங்களுக்கான பிணைப்பத்திரங்கள் (Euity Securities) அக்கம்பனிகளின் செயற்பாடுகளுக்கு அமைய 20 பிரதான செயற்பாட்டுத் துறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவையாவன,

* வங்கி, நிதி, காப்புறுதி (Bank, Finance and Insurance)
* உணவு, பானங்கள், புகையிலை (Food, Beverage and Tobacco)
* கட்டடவாக்கமும், பொறியியலும் (Construction and Engineering)
* இரசாயனப்பொருள்களும், மருந்து வகையும் (Chemicals, Pharmaceuticals)
* பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரத் துறைகள் (Diversified)
* காலணிகளும், துணிவகைகளும் (Footwears and Textiles)
* உணவகமும், உல்லாசப்பயணமும் (Hotels and Travels)
* சுகாதாரமும், சுகநலம்பேணுதலும் (Health Care)
* முதலீடும் பொறுப்பாண்மையும் (Investment and Trusts)
* தகவல் தொழில்நுட்பம் (Information Technology)
* காணியும் ஆதனங்களும் (Land and Property)
* தயாரிப்பு உற்பத்திகள் (Manufacturing)
* மோட்டார் வாகனம் (Motors)
* ஒயில் பாம் (Oil Palm)
* மின்சாரமும் சக்தியும் (Power and Energy)
* பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை (Plantations)
* களஞ்சியப்படுத்தலும் வழங்கலும் (Stores and Supplies)
* சேவைத்துறை (Service)
* வர்த்தகத்துறை (Trading)
* தொலை தொடர்புத்துறை (Telecommunication)

இதேபோல் கடன் பத்திரங்களும் (Debt Securities) பின்வரும் 6 துறைகளுள் உள்ளன.

* வங்கி நிதி காப்புறுதி
* பன்முகப்படுத்தப்பட்ட வியாபாரத் துறைகள்
* சுகாதாரமும் சுகநலன் பேணுதலும்
* காணியும் ஆதனங்களும்
* மின்சாரமும் சக்தியும்
* சேவைத்துறை

**உயர்தர மாணவர்களுக்கான ஓர் ஒரு விசேட வழிகாட்டி**

### பங்குத்தரகர்களின் பணிகள்

நற்போதைய பங்குச்சந்தை நடைமுறை மரபுகளுக்கமைய பொதுக்கம்பனிகள் தம்மைப் புதிதாகப் பட்டியற்படுத்திக் கொள்வதற்கு தங்கள் விண்ணப்பப்படிவங்களை தரகர் நிறுவனங்கள் மூலம் கொழும்புப் பங்குச் சந்தைக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு புதிய பங்கு வழங்கல்களுக்காகத் தோன்றும் ஏற்பாட்டுத்தரகர்கள் இடைநடுவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

பங்குச்சந்தையின் தேவைகளை கம்பனிகளுக்கு அறிவித்தல்.

கம்பனிகளின் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களையும் பங்குச்சந்தையின் ''பங்கு வழங்கல்'' உபகமிட்டிக்கு சமர்ப்பித்தல்

தொடர்ச்சி VI ஆம் பக்கத்தில்...

**தொகுப்பு:- இ.ஜனதன் (B.B.A HONS)**

**கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி. (கொழும்பு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க. பொ.த உயர்தர மாணவர்களுக்கான

புள்ளி வழங்கும் திட்டம்- அரச பரீட்சை வினாத்தாள் ஒகஸ்ட்-2008

# அரசியல் மூலத்தத்துவங்கள்-02

**03. சோல்பரி யாப்பில் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக இடம் பெற்ற ஏற்பாடுகளை விமர்சன முறையில் பரிசீலிக்குக.**

சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சோல்பரி யாப்பு பின்வரும் ஏற்பாடுகளை அறிமுகம் செய்திருந்தது. அவையாவன,

**1) அரசியல் யாப்பின் 29 (2) ஆம் சரத்து:**

* 21 (2) ஆம் சரத்தின்படி நாட்டின் சமாதானம், அமைதி, சிறந்த ஆட்சி என்பன தொடர்பாக சட்டவாக்கம் செய்யும்அதிகாரம் பாராளுமன்றுக்கு அதிகாரம் உண்டு.
* 29 (2) ஆம் சரத்தின்படி அவ்வாறான சட்டங்கள்,

அ. ஏதேனும் ஒரு சமயத்தை வழிபடுவதற்குரிய சுதந்திரத்தைத் தடைசெய்யவோ, வரையறைசெய்யவோ கூடாது.

ஆ. ஏதேனும் ஓர் இனத்தவரோ, சமயத்தவரோ பிறிதொரு இனத்தவரின் அல்லது சமயத்தவர்களின் கீழ்ப்படுத்தலுக்கோ, தடைகளுக்கோ, வரையறைகளுக்கோ உட்படுத்தப்படக்கூடாது.

இ. ஏதேனும் ஓர் இனத்தவருக்கோ, சமயத்தவருக்கோ பிறிதொரு இனத்தவருக்கோ அல்லது சமயத்தவருக்கோ வழங்கப்படாத சலுகைகளை அல்லது நன்மைகளை வழங்கக்கூடாது.

ஈ. ஒரு சமயத் தாபனத்தின் யாப்பை அத் தாபனத்தின் ஆளுநர் சபையின் விருப்பமின்றி மாற்றக்கூடாது. ஆனால், ஒரு சமயத் தாபனம் சட்ட ரீதியானதாக இருப்பின் அத்தாபனத்தின் ஆளுநர் சபையின் வேண்டுகோளின்பேரிலன்றி எந்த ஒரு மாற்றத்தையும் செய்யக்கூடாது.

* 29 (2) ஆம் சரத்தை மீறி ஆக்கப்படும் எச்சட்டமும் அவ்வாறு மீறப்படும் அளவுக்குச் செல்லுபடியற்றதாகும்.
* 29 (4) ஆம் சரத்தின்படி இந்த ஏற்பாட்டினைத் திருத்தும் அல்லது இல்லாது ஒழிக்கும் எச்சட்டமும் பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டால் அன்றி சபாநாயகரால் உறுதிப்படுத்தப்பட்டு முடியின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கக்கூடாது.

எனவே, 29 ஆம் சரத்து இனம், வகுப்பு, சமயம் என்ற காரணிகளின் அடிப்படையில் இனங்கண்டு வகைப்படுத்தப்பட்டுச் சட்டவாக்கம் செய்வதற்குப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது. இது சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்காக சோல்பரி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்த பலம்வாய்ந்த ஏற்பாடாகும்.

**2) செனற் சபை**

இது 30 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது. 15 பேர் மக்கள் பிரதிநிதிகள். சபையால் தெரிவுசெய்யப்பட்டனர். எஞ்சிய 15 பேரும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். செனற் சபை நிறுவப்பட்டதன் ஒரு நோக்கம் பொதுத் தேர்தலில் போதிய பிரதிநிதத்துவத்தைப் பெற்றுக்கொள்ளாத சிறுபான்மையினருக்கும் சமூகக் குழுக்களுக்கும் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுப்பது ஆகும். பிறிதொரு நோக்கம் மக்கள் பிரதிநிதிகள் சபை அவசரம் அவசரமாகவும் போதிய பரிசீலனை இன்றியும் நிறைவேற்றும் சட்டங்களை மீள் பரிசீலணை செய்வதாகும். இதன்மூலம் மக்கள் பிரதிநிதிகள் சபையின்மீது ஒரு தடையாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், எதிர்பார்த்ததுபோல் செனற் சபை சிறுபான்மையினர்களுக்கு பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுக்கவில்லை.

**3) பல அங்கத்தவர் தொகுதி முறை**

யாப்பின் 40 (4) ஆம் சரத்தின்படி,''ஒரு மாகாணத்தின் ஏதேனும் ஒரு பிரதேசத்தில் இன, சமய அல்லது வேறும் சமூகப் பண்புகளைக்கொண்டு ஒன்றாகச் செயற்படும். ஆனால், அப்பிரதேசத்தின் ஏனைய குடி பதியாளர்களுள் அதிகாரமானவர்களிலிருந்து அப்பண்புகளுள் ஒன்றினாலோ அதற்கு மேற்பட்டவற்றினாலோ வேறுபடுகின்ற வகையில் குறிப்பிடத்தக்களவு எண்ணிக்கையினர் ஒன்றிணைந்து வாழ்கின்றார்கள் என்று தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு கருதினால், அந்தச் சனக்குழுவின் உரிமைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் அந்த மாகாணத்தைப் பிரதேசங்களாகப் பிரிக்கவேண்டும்.''

இந்த ஏற்பாட்டின் நோக்கம் ஒரு தேர்தலில் சிறுபான்மை இனக்குழுக்கள் பிரதிநிதித்துவம் பெறமுடியாத நிலை காணப்படும். பிரதேசங்களுக்கு பல அங்கத்தவர் தொகுதிகளை உருவாக்குவதன் மூலம் அவர்களுக்குப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதாகும்.

**4) ஆறு நியமன அங்கத்துவம்**

யாப்பின் 11 (2) ஆம் சரத்தின்படி,

''பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டில் ஒரு முக்கியமான ஜனக்குழு பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை என்று மகாதேசாதிபதி திருப்தியுறுவாராயின், ஆறுக்குக் கூடுதலாக அமையாத நபர்களை மக்கள் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர்களாக நியமிக்கமுடியும்.''இந்த ஏற்பாடும் ஒரு தேர்தலில் போதியளவு பிரதிநிதித்துவத்தைப் பெறாத சிறு பான்மையினர்களுக்கு நியமனமுறையின் மூலம் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொடுப்பதையே வலியுறுத்தியது.

நடைமுறையில் இவ் ஏற்பாடு வெற்றிகரமாக அமையவில்லை. ஒருபுறம் பதவியில் இருந்த பிரதமரின் விருப்பின்படியே அப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர். மறுபுறம் சிறு பான்மை இனத்தவர்களிலிருந்து அப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டாலும், அவர்கள் பிரதமரின் விருப்பிற்கேற்பச் செயற்பட்டார்களே அன்றி தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் இனக் குழுக்களின் நலன்களைப் பேணவில்லை.

**5) நீதிச்சேவை ஆணைக்குழு**

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கில் தாபிக்கப்பட்ட இவ் ஆணைக் குழு 3 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. பிரதம நீதியரசர் உத்தியோக முறையில் அதன் தலைவராக இருந்தார். மற்றைய இருவரும் பிரதமரின் ஆலோசனையின் பேரில் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். அவர்களைக் காரணமின்றிப் பதவிநீக்கம் செய்ய முடியாது.

யாப்பின் 56 ஆம் சரத்தின்படி இவ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல் குற்றமாகும். ஜனநாயக ஆட்சிமுறைக்கு நீதிச்சுதந்திரம் அவசியம். ஆயினும், இலங்கை போன்ற ஒரு பல்லினச் சமூகத்தைத் கொண்ட ஒரு நாட்டின் சிறுபான்மை ஜனக்குழுவுக்குப் பாதுகாப்பளிப்பதற்கு இது அத்தியாவசியமானதாகும்.

**6) அரசாங்கசேவை ஆணைக்குழு**

அரசாங்க சேவையைப் பக்கச்சார்பற்ற சுதந்திரமான தாபனமாகக் கொண்டுநடத்தும் நோக்கில் இவ் ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. இது 3 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.அவர்கள் பிரதமரின் சிபாரிசின் பெயரில் மகாதேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். காரணம் இன்றி அவர்களைப் பதவிநீக்கம் செய்யமுடியாது. யாப்பில் குறிப்பிடப்பட்டாலும் ஒரு சிறுபான்மை உறுப்பினரை இதற்கு நியமிக்கும் மரபு பின்பற்றப்பட்டது. ஆகையால், குழுவின் செயற்பாடுகளில் தலையிடுதல் குற்றமாகும். இவ் ஆணைக்குழுவும் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பாக அமைந்தது என்று அறிஞர்கள் கூறினர்.

**04. 1972 யாப்பின் கீழ் பின்வருவனவற்றைப் பரிசீலிக்குக.**

1) அரசியல் யாப்பு நீதிமன்றம்.
2) அடிப்படை உரிமைகள் அத்தியாயம்.
3) குடியரசு ஜனாதிபதி.

**1) அரசியல் யாப்பு நீதிமன்றம்**

* தேசிய அரசுப் பேரவை சமர்ப்பிக்கும் மசோதாக்களின் யாப்புறு தன்மையைப் பரிசீலித்து, அவை யாப்புக்கு முரணானவையாயின், அவற்றை எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என்று தேசிய அரசுப் பேரவைக்கு ஆலோசனை வழங்கி உதவும் நோக்கில் யாப்பினால் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனமே அரசியல் யாப்பு நீதிமன்றமாகும்.
* இது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட 5 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
* அவர்களின் பதவிக்காலம் 4 வருடங்கள் ஆகும்.
* தேசிய அரசுப் பேரவையின் செயலாளரே இந் நீதிமன்றத்தின் பதிவாளராகக் கடமை ஆற்றினார்.
* அரசியல் யாப்பு நீதிமன்றம் தமது பணிகளுக்காகக் கூடும்போது அதன் அமர்வில் 3 உறுப்பினர்கள் இடம்பெறவேண்டும். திருவுளச்சீட்டு முறையின்மூலம் இவர்கள் மூவரும் மற்றும் இவர்களுள் ஒருவர் தவிசாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.
* அரசியல் யாப்பு நீதிமன்றின் அபிப்பிராயத்தை அறிவதற்காகச் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் சாதாரண மற்றும் அவசர மசோதாக்கள் என இரு வகைப்படும்.
* ஒரு சாதாரண மசோதா தேசிய அரசுப் பேரவையின் நிறைவேற்றத்துக்காகச் சமர்ப்பிக்கப்பட்டு அது அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் 7 நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர் அதன் யாப்புறு தன்மை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்குமாறு பின்வருவோருள் எவரேனும் ஓர் ஆள் சபாநாயகருக்கு அறிவித்தால் அவர் அம் மசோதாவை அரசியல் யாப்பு நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்தவேண்டும்.

அ. சட்டமா அதிபர்.

ஆ. தேசிய அரசுப் பேரவையின் சபை முதல்வர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியின் தலைவர்

இ. தேசிய அரசுப் பேரவையின் கூட்ட நடப்பெண்ணுக்குச் (20) சமனான எண்ணிக்கையினரான உறுப்பினர்கள்.

ஈ. சபாநாயகர் அல்லது பிரதிச் சபாநாயகர்.

உ. எவரேனும் ஒரு பிரஜை மசோதாவின் யாப்புறு தன்மைபற்றி கோரிக்கை விடுக்கலாம். இறுதியாகக் குறிப்பிட்ட பிரஜை விடுக்கும் கோரிக்கை ஓர் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் மூலம் முதலில் அரசியல் யாப்பு நீதிமன்றின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டும். பின்னர் அவர் அதனைச் சபாநாயகருக்கு அறிவிப்பார்.

* தேசிய நலனைப் பாதுகாப்பதற்கு அவசியமானது என அமைச்சரவை தீர்மானித்து ''அவசர மசோதா'' எனக் குறிப்பிட்டு தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கும் ஒரு மசோதா அவசர மசோதா என்று கருதப்படும்.
* அவ்வாறான மசோதாக்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படமாட்டாது. எவரும்அவ்வாறான மசோதாவை அரசியல் யாப்பு நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்துமாறு கோரவும் முடியாது.
* ஓர் அவசர மசோதா தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதுபற்றிஅரசியல் யாப்பு நீதிமன்றின் அபிப்பிராயத்தை அறிவதற்குச் சபாநாயகர் அதனை அந் நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்த வேண்டும்.
* ஏதேனும் ஒரு மசோதா சாதாரணமானதாகவோ அவசரமானதாகவோ இருந்தாலும் அதனை அரசியல் யாப்பு நீதிமன்றுக்கு ஆற்றுப்படுத்தியதன் பின்னர் அம் மசோதா தொடர்பான எவ்வித நடவடிக்கைகளையும் தேசிய அரசுப்பேரவை மேற்கொள்ளுதல் ஆகாது.
* ஒரு சாதாரண மசோதாவாயின் அது சமர்ப்பிக்கப்பட்டு 2 கிழமைகளுக்கு உட்பட்ட காலப்பகுதிக்குள் மற்றும் ஓர் அவசர மசோதாவாயின் 24 மணித்தியாலங்களுக்குள்ளும் தனது தீர்மானத்தை அரசியல் யாப்பு நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிக்கவேண்டும்.
* அந்நீதிமன்றம் தனது தீர்மானத்தைப் பின்வரும் வகைகளில் தெரிவிக்கமுடியும்.

அ. மசோதா யாப்புக்கு முரணற்றது என்றோ

ஆ. மசோதா யாப்புக்கு முரணானது என்றோ

இ. மசோதா யாப்புக்கு முரணானது அல்லது மசோதா யாப்புக்கு முரணற்றது என்று தனக்குச் சந்தேகம் நிலவுகிறது என்றோ தனது அபிப்பிராயத்தை அறிவிக்கும்.

* இறுதியாகக் குறிப்பிட்ட இரு முறைகளில் தனது அபிப்பிராயத்தைத் தெரிவித்தால் அம் மசோதா தேசிய அரசுப் பேரவையில் 2/3 பெரும்பான்மையால் நிறைவேற்றப்படவேண்டும்.

**2) அடிப்படை உரிமைகள் அத்தியாயம்**

* இது 1972 யாப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறிதொரு புதிய அம்சம்.
* இவ் அத்தியாயத்தில் சிவில், அரசியல் உரிமைகள் மட்டுமே இடம்பெறுகின்றன. அவை பின்வருமாறு:

அ. சட்டத்தின் முன் சமத்துவத்துக்குச் சமனான சட்டப் பாதுகாப்பு.

ஆ. சட்டப் பிரகாரமின்றி உயிருக்கோ, சுதந்திரத்துக்கோ தனிப்பட்ட பாதுகாப்புக்கோ தீங்கு ஏற்படாதிருத்தல்.

இ. சட்டப் பிரகாரமின்றி எவரும் கைதுசெய்யப்படவோ தடுத்து வைக்கப்படவோ, சிறையிடப்படவோ முடியாது.

ஈ. சிந்தனை செய்யும் சுதந்திரமும், சமயத்தைப் பின்பற்றும் சுதந்திரமும் மனச்சாட்சிக்கேற்ப செயற்படும் சுதந்திரம்.

உ. கலாசார சுதந்திரமும்.

ஊ. ஒன்றுகூடும் சுதந்திரமும் சங்கங்களை அமைக்கும் சுதந்திரமும்.

எ. பேச்சுச் சுதந்திரமும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரமும்

ஏ. பாரபட்சமின்றி அரசபதவிகளைப் பெறும் சுதந்திரம்.

ஐ. நடமாடும் சுதந்திரமும் தாம் விரும்பும் இடத்தில் வதியும் சுதந்திரமும்.

* இவ் உரிமைகளை யாப்பின் 18.2 சரத்திலும் 134 ஆம் சரத்திலும் விதிக்கப்பட்ட வரையறைகளுக்கு உட்பட்டே அனுபவிக்க முடிந்தது.
* உரிமைகள் மீறப்படும்போது நீதித்துறையில் நியாயம் கோருவதற்கான வாய்ப்பு இருக்கவில்லை.

**3) குடியரசு ஜனாதிபதி**

* 1972 யாப்பின் ஜனாதிபதி ஒரு நாம நிருவாகப் பதவி ஆகும். இந்த ஜனாதிபதிப் பதவி இரண்டு விடயங்களைத் தவிர ஏனைய சகல வகையிலும் சோல்பரி காலத்து மகாதேசாதிபதிப் பதவியை ஒத்ததாகும். அவ்விரு விடயங்களாவன,

1. நியமிக்கப்பட்ட முறை:
   1948 மகாதேசாதிபதி பிரித்தானிய மகாராணியால் நியமிக்கப்பட்டார். 1972 இல் ஜனாதிபதி பிரதமரால் பெயர் குறிக்கப்பட்டு நியமிக்கப்பட்டார்.
2. மசோதாக்களுக்கு இறுதி அங்கீகாரம் வழங்குதல்:
   1948 யாப்பில் இவ் அதிகாரம் தேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தாலும் 1972 ஆம் ஆண்டு யாப்பில் இப்பொறுப்பில் இருந்து அவர் அகற்றப்பட்டு தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகருக்கு வழங்கப்பட்டது.

* 1972 யாப்பின் 20 ஆம் சரத்துப்படி ஜனாதிபதி அரசின் தலைவரும் நிறைவேற்றுத் துறையின் தலைவரும் முப்படைகளினதும் பிரதம தளபதியும் ஆவார். இவற்றுக்கு மேலதிகமாக சட்டத்துறை, நீதித்துறை சார்ந்த அதிகாரங்களையும் பணிகளையும் பெற்றிருந்தார்.
* இப்பணிகள் அனைத்தும் 1948 மகாதேசாதிபதி நிறைவேற்றிய பணிகளை ஒத்தவையாகக் காணப்பட்டதுடன் யாப்பின் 27 ஆம் சரத்துப்படி ஜனாதிபதி அப் பணிகளை பிரதமரினதும் அமைச்சர்களினதும் சிபாரிசின் பெயரிலேயே நிறைவேற்றினார்.
* ஜனாதிபதியின் பதவிக்காலம் 4 வருடங்கள் ஆகும். மீண்டும் எத்தனை முறையும் நியமிக்கப்படலாம். சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டு பொது நிதியில் இருந்து வழங்கப்பட்டது. பிரதம நீதியரசரின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து பதவிப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.
* தேசிய அரசுப் பேரவையில் சமுகமளிக்காத உறுப்பினர்கள் உட்பட மொத்த உறுபினர்களுள் 2/3 பெரும்பான்மையினரால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமே அவரைப் பதவியிலிருந்து நீக்க முடிந்தது.



(நான்காம் பக்கம் பார்க்க.....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணக்கீடு-02

தொகுப்பு:-
கல்விச்சுடர் ஆசிரியர் குழு

## பகுதி - 1

நேரம்:
1 மணித்தியாலம்

* பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. வரையறுத்த கம்பனி ஒன்றில் முன்மொழிந்த சாதாரண பங்குலாபம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுவது,
   1) உரிமை மீதான மாற்றங்களின் கூற்றில்.
   2) ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ்.
   3) நிதிக் கூற்றுக்களில் குறிப்புகளின் ஒன்றாக.
   4) ஐந்தொகையில் ஒதுக்கங்களில் ஒன்றாக.
   5) மேற்கூறிய எவையும் அல்ல.

02. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-03 (SLAS - 03) இன் பிரதான நோக்கம்,
   1) நிதிக்கூற்றுக்களின் உண்மையானதும் சரியானதுமான தன்மையைப் பேணுதல்.
   2) வரையறுக்கப்பட்ட கம்பனிகளால் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்கள் பற்றிய தயாரிப்பு வழிகாட்டலை மேற்கொள்ளல்.
   3) நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கான அடிப்படைகளைச் சிபாரிசுசெய்தல்.
   4) நிதிக்கூற்றுக்களுக்குப் பொருத்தமான கட்டமைப்புக்களை அறிமுகப்படுத்தல்.
   5) நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்.

03. கம்பனிகள் சட்டத்தின்படி ஒப்புறுதியாளர் தரகு ஐந்தொகையில் வெளிப்படுத்தப்படுவது,
   1) உருவகச் சொத்தாக.  2) திரவச் சொத்தாக.
   3) ஒதுக்கீடாக.  4) கற்பனைச் சொத்தாக.  5) பொறுப்பாக.

04. செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவாகத் தேறிய காசோட்டத்தைக் கணிப்புச்செய்வதில் உள்ளடங்காத விடயம்,
   1) வழங்குநருக்கான கொடுப்பனவுகள்.
   2) வருமானவரிக் கொடுப்பனவுகள்.
   3) செயற்பாட்டுச் செலவினங்களின் கொடுப்பனவு.
   4) பங்குலாபங்களின் கொடுப்பனவு.
   5) வாடிக்கையாளரிடமிருந்தான பணச்சேகரிப்புக்கள்.

05. கிரயத்தைக் குறிப்பாக அடையாளம் காணமுடியாத சந்தர்ப்பத்தில் இலங்கை கணக்கீட்டு நியமம் இல.5 இன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள கிரயச்சமன்பாடு பின்வருவனவற்றுள் எது?
   1. முதல்வந்தது முதல் சென்றது, இறுதியாக வந்து முதல் சென்றது,நிறையிட்டசராசரி
   2. இறுதியாக வந்தது முதல் சென்றது.நிறையிட்ட சராசரி
   3. முதலில்வந்தது முதல் சென்றது. வேலைக்கிரயமிடல்,நிரையிட்டசராசரி
   4. முதலில் வந்து முதலில் சென்றது.எளிய சராசரி
   5. முதலில் வந்து முதலில் சென்றது.நிறையிட்ட சராசரி

06. பின்வருவனவற்றுள் பங்குகளைக் கழிவு விலையில் வழங்குவதற்குரிய நிபந்தனை ஒன்றாக அமையாதது,
   1) கம்பனியானது ஆகக்குறைந்தது ஒரு வருடமேனும் தொழிற்பட்டிருத்தல்.
   2) முன்னர் வழங்கப்பட்ட வகையையுடைய பங்குகளாக இருத்தல்.
   3) உரிய நீதிமன்ற அனுமதியைப் பெற்றிருத்தல்.
   4) கழிவுத்தொகை பற்றிப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் எடுத்தல்.
   5) கம்பனிப் பதிவாளரிடமிருந்து விசேட அனுமதிபெறுதல்.

* பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி வினாக்கள் 7,8,9 இற்கு விடையளிக்குக.
பிலாகொட லிமிட்டெட் ஒவ்வொன்றும் 10 ரூபாவான 50,000 சாதாரண பங்குகளை 2/= விலையில் 3:2 என்னும் விகிதாசாரத்தில் வழங்கியது. 3,000 பங்குகளுக்கு விண்ணப்பித்த சுனில் ஒதுக்கல் பணம் 6/=, மூதலாவதும் இறுதியுமான அழைப்புப் பணம் 2/= என்பவற்றைச் செலுத்தவில்லை. இவை பறிமுதல் செய்யப்பட்டு 2,000 பங்குகள் முழுவதும் செலுத்தியவையாக 8/= படி மீள வழங்கப்பட்டு பணம் பெறப்பட்டது.

07. ஒதுக்கல் மீதான நிலுவைத் தொகையானது,
   1) 18,000/=  2) 8,000/=  3) 6,000/=
   4) 12,000/=  5) 4,000/=

08. பங்குகளைப் பறிமுதல் செய்ததனால் எழுந்த மூலதன இலாபம்,
   1) 18,000/=  2) 8,000/=  3) 6,000/=
   4) 12,000/=  5) 4,000/=

09. 2,000 பங்குகளை மீளவழங்கிய பின்னர் கூறப்பட்ட மூலதனக் கணக்கு,
   1) 4,000/=  2) 8,000/=  3) 6,000/=
   4) 2,000/=  5) எதுவும் இல்லை.


10. பொருள் கோரிக்கைப் பத்திரம் முக்கியத்துவம் பெறுவதற்கான காரணம்,
   1) களஞ்சியத்திலிருந்து தொழிற்சாலைக்கு விநியோகிக்கப்படும் மூலப்பொருட்களைக் களஞ்சியப் பேரேட்டில் பதிவதற்கு.
   2) கொள்வனவுப் பகுதிக்குக் கொள்வனவு செய்து தரும்படி கோருவதற்கு.
   3) களஞ்சியத்திலுள்ள இருப்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு.
   4) பந்தாய அட்டையிலும் களஞ்சியப் பேரேட்டிலும் விநியோகித்த பண்டங்களைப் பதிவதற்கு.
   5) மேற்கூறிய எதுவுமல்ல.

11. சம்பளப் பட்டியலைத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் ஆவணங்களின் தொகுதியைச் சரியாக விவரிப்பது,
   1) சுற்றுநிருபம், வரவுப் பதிவுப் புத்தகம், வேலை அனுமதி அட்டை, சென்றவருடச் சம்பளப் பட்டியல்.
   2) சுற்றுநிருபம், நியமனக் கடிதம், சம்பள விவரம், சம்பள அதிகரிப்புக் கடிதம்.
   3) நியமனக் கடிதம், வாராந்த நேர அட்டை, சுற்றுநிருபம், சம்பள அதிகரிப்புப் பட்டியல்.
   4) கிரயத்தாள், வரவுப் பதிவுப் புத்தகம், சென்றமாத சம்பளப்பட்டியல்.
   5) வேலை அனுமதி அட்டை, சம்பள விவரம், சம்பள அதிகரிப்புப் பட்டியல், வாராந்த - மாதாந்த நேர அட்டை.

12. றொகான் கம்பனியின் 31.12.2006 இல் முடிவடைந்த கணக்காண்டினது வட்டி, வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 40,000 ஆகும். ஆண்டு வருமான வரி 12,000/=, தொகுதிக்கடன் வட்டி செலுத்தியது 8,000/=, ஆண்டுத் தேய்மானம் 7,000/=, ஐயக்கடன் ஏற்பாடு 2,000/=, மோட்டார் வாகன விற்பனை நட்டம் 10,000/=, பதிவழித்த தொடக்கச்செலவு 5,000/= ஆகும். காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாடு மூலதன மாற்றத்திற்கு முன்னர் இடம்பெறும் செயற்பாட்டு இலாபத் தொகையானது,
   1) 66,000/=  2) 44,000/=  3) 64,000/=
   4) 62,000/=  5) மேற்கூறிய எவையும் அல்ல.

13. சமப்பாட்டுப் புள்ளி வரைபடம் வரைவதுடன் தொடர்பற்ற கோடு எனக் கருதக்கூடியது,
   1) மாறும் கிரயக்கோடு.  2) உற்பத்திக் கிரயக்கோடு.
   3) நிலையான கிரயக்கோடு.  4) மொத்த வருமானக்கோடு.
   5) மொத்தச் செலவுக்கோடு.


* பின்வரும் வரையின் அடிப்படையில் 14, 15 ஆகிய வினாக்களுக்கு விடை தருக.




14. வரைபடத்தில் 'K' என்னும் எழுத்து மூலம் குறிக்கப்படுவது,
   1) பகுதி மாறும் செலவு.  2) மொத்தக் கிரயம்.
   3) மாறும் கிரயம்.  4) நிலையான கிரயம்.
   5) மேற்கூறிய எதுவும் அல்ல.

15. வரைபடத்தில் 'L' என்னும் எழுத்தினால் காட்டப்படும் புள்ளியையும் இவ்வரைபடத்தினது பெயரையும் ஒழுங்கில் காட்டும் தொகுதி,
   1) மரபுச் சமன்பாட்டு வரைபும், இலாபப் புள்ளியும்.
   2) இலாபப் புள்ளியும், மரபுச் சமன்பாட்டு வரைபும்.
   3) இலாபநட்டமற்ற புள்ளியும், மரபுச் சமன்பாட்டு வரைபும்.
   4) இலாபப் புள்ளியும், இலாப அளவு வரைபடமும்.
   5) இலாபநட்டமற்ற புள்ளியும், இலாப அளவு வரைபடமும்.

16. பின்வரும் கூலிக்கிரய வரைபின்மூலம் காட்டப்படும் விடயம்,





   1) இழிவு உத்தரவாதக் கூலியுடன் கூடிய துண்டுக் கூலித்திட்டம்.
   2) நேர்த்துண்டுக் கூலித்திட்டம்.
   3) நேர் நேர அடிப்படைக் கூலித்திட்டம்.
   4) வேறுபடுத்தப்பட்ட துண்டுக் கூலித்திட்டம்.
   5) உச்சநாள் விகிதக் கூலிக் கொடுப்பனவுத் திட்டம்.

17. X லிமிட்டெட் பொருள் ஒன்றை உற்பத்திசெய்து விற்பனைசெய்கின்றது. ஆண்டு ஒன்றில் இப் பொருள் தொடர்பாக விற்பனைப் பங்களிப்பு விகிதம் 30% ஆகும். ஆண்டுக்கான நிலையான கிரயம் 120,000/= ஆயின், ஆண்டுக்கான சமப்பாட்டுப்புள்ளி விற்பனை அலகுகளின் தொகை,
   1) 156,000 அலகுகள்.  2) 171,428 அலகுகள்.
   3) 400,000 அலுகுகள்.  4) 220,000 அலகுகள்.
   5) வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்யமுடியாது.

18. கிரய நிலையம் (கிரயமையம்) எனப்படுவது,
   1) வெளியீட்டு அலகுகள் அல்லது சேவைகளின் கிரயங்களைத் தீர்மானிப்பது.
   2) கிரயங்களைத் தீர்மானிப்பதற்குரிய தொழிற்பாடுகள் அல்லது இடங்கள்.
   3) பாதீடுகளைத் தயாரிப்பதற்கான ஒழுங்கமைப்பின் ஒரு பகுதி.
   4) வேறுபட்ட செயற்பாடுகளில் பங்களிப்புச் செய்த கிரயங்களின் மொத்தங்கள்.

19. மேந்தலை உள்ளடக்க வீதம் பயன்படுத்தப்படுவது,
   1) கிரய நிலையங்களுக்கு மேந்தலைக் கிரயங்களை ஒதுக்குவதற்கு.
   2) உற்பத்திகளுக்கு மேந்தலைக் கிரயங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு.
   3) மேந்தலைக் கிரயங்களைக் கட்டுப்படுத்துவதற்கு.
   4) சேவைப்பகுதி மேந்தலைக் கிரயங்களை உற்பத்திகளுக்குப் பங்கீடு செய்வதற்கு.
   5) மூலக்கிரயங்களைச் சரியாகக் கணிப்பிடுவதற்கு.

20. பின்வரும் மரபுச் சமப்பாட்டு வரைபடத்தில் A,B,C என்னும் எழுத்துக்களால் குறிப்பிடப்படும் கோடுகளை ஒழுங்குமுறையில் காட்டும் தொகுதி யாது?




   1) மொத்த வருமானம், மொத்தக் கிரயம், நிலையான கிரயம்.
   2) மொத்தக் கிரயம், மொத்த வருமானம், நிலையான கிரயம்.
   3) நியைான கிரயம், மாறும் கிரயம், மொத்த வருமானம்.
   4) மொத்த வருமானம், மாறும் கிரயம், நிலையான கிரயம்.
   5) மாறும் கிரயம், மொத்த வருமானம், நிலையான கிரயம்.


மேலதிக தொடர்புகளுக்கு:-
'உதயன்' கல்விச்சுடர்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:-071-4273035,
071-688005, 021-2229944


* பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமாக விடை தருக.

21. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-12 (SLAS - 12) இற்கு இணங்க ஐந்தொகைத் தினத்திற்குப் பிந்திய நிகழ்வுகளுக்கு இரு உதாரணங்கள் தருக.
   1) ..........
   2) ..........

22. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-36 (SLAS - 36) இற்கு இணங்க நிதி அறிக்கைகளில் ஏற்பாடாக அமையும் இரு நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுக.
   1) ..........
   2) ..........

23. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-10 (SLAS - 10) இன் நோக்கங்கள் யாவை?
   1) ..........
   2) ..........

* 2006.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கு பின்வரும் நிகழ்வு தாக்கத்தை ஏற்படுத்துமா? ஏற்படுத்துமாயின், அதற்கான நாட்குறிப்புப் பதிவைத் தருக.

24. நிறுவனத்திற்குச் சொந்தமான காணியினை 2006 ஜனவரி 05 இல் அரசாங்கம் சுவீகரிப்பதாக அறிவிப்புச்செய்தது. 2007 மே 02ஆம் திகதி 200,000 ரூபா நட்டஈடாகத் தருவதாக அறிவித்தது.
..........
..........

25. இலங்கைக் கணக்கீட்டு நியமம்-18 (SLAS -18) இற்கு அமைய சொத்து ஒன்றுக்குத் தேய்மானம் இடுதல் தொடர்பான தீர்மானமெடுத்தலுக்கு முக்கியமாகவுள்ள இரு காரணங்களைக் குறிப்பிடுக.
   1) ..........
   2) ..........

26. சமப்பாட்டுப்புள்ளி ஆய்வின் (இலாபநட்டமற்ற புள்ளி ஆய்வு) இரு நோக்கங்களைத் தருக.
   1) ..........
   2) ..........

27. கழிவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் முறையிலான முதலீட்டுத் தீர்மான நுட்பங்கள் இரண்டு தருக.
   1) ..........
   2) ..........

28. எதிர்காலப் பணப் பெறுமதியினை நிகழ்காலப் பணப் பெறுமதியில் கணிப்பதற்கான சூத்திரங்களைத் (வாய்ப்பாடுகள்) தருக.
   1) ..........
   2) ..........

29. வணிகம் ஒன்று காசோட்டக் கூற்றினைத் தயாரிப்பதற்குரிய பிரதான குறிக்கோள்கள் இரண்டு தருக.
   1) ..........
   2) ..........

**2009 உயர்தர மாணவர்களுக்கு அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள தவணைப்பரீட்சைக்காக இம் மாதிரிவினாத்தாள் வெளியிடப்படுகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# பொருளியல் - 1

ஆசிரியர் : v.முரளி (கொழும்பு)


பகுதி-1

01. தரப்பட்ட அட்டவனையில் புடைவை, கோதுமை உற்பத்தி தொடர்பான தரவுகள் காட்டப்பட்டுள்ளது.

| நாடு | கோதுமை | புடவை |
|---|---|---|
| U.K | 40 | 30 |
| U.S.K | 60 | 90 |

U.K,U.S நாடுக்ள் முறையே கோதுமை உற்பத்திக்கான அமையச் செலவு யாது?
1. 0.75,1.25 2. 1.5,0.75 3. 0.75,1.5 4. 0.5,1.5 5. 1.5,0.5

02. பொருளாதாரம் ஒன்றின் உற்பத்தி சாத்திய வளையி தரப்பட்டுள்ளது. இங்கு புள்ளி X ஆனது Y ஆக மாற்றம் அடைகின்ற பொழுது பின்வருவனவற்றுள் யாது நிகழும்?





1. அமையச் செலவானது மாற்றமடையாது காணப்படுகின்றது.
2. விவசாயப்பண்டத்தின் உற்பத்தியில் பயன்படுத்தப்ப்ட்ட தொழில்நுட்பம் வீழ்ச்சியடைகின்றது.
3. கைத்தொழில் பண்டத்தின் உற்பத்தி நோக்கி வள ஒதுக்கீட்டில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
4. கைத்தொழில் பண்டத்தின் உற்பத்தியில் தொழில்நுட்ப முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.
5. அமையச்செலவானது அதிகரித்து செல்கின்றது.

03. மாம்பழத்திற்கான சந்தைக் கேள்விச்சார்பு $QD = 150 + 3P$, மாம்பழத்திற்கான சந்தை நிரம்பல் சார்பு $QS = 10 + 4P$ தரப்பட்டுள்ளது. இங்கு மாம்பழத்தின் விலை 17.50 எனின், மாம்பழத்திற்கான சந்தையில்,
1. சமநிலை காணப்படும்
2. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
3. மிகைக்கேள்வி ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
4. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை அதிகரிக்கும்.
5. மிகை நிரம்பல் ஏற்பட்டு விலை குறையும்.


04. கைத்தொழில் பண்டம் X, விவசாயப்பண்டம் Y ஆகிய இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நாட்டினுடைய உற்பத்திச் சாத்திய வளையில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடியது யாது?
1. அதனால், உற்பத்தி செய்யக்கூடியது கைத்தொழில் உற்பத்தி
2. அதனால் உற்பத்தி செய்யக்கூடியது விவசாய உற்பத்தி
3. வளங்கள் முழுமையாக பாவனைக்கு உட்படுத்தக்கூடிய எல்லை
4. பொருளாதாரத்தின் விருப்பத்தேர்வு
5. விவசாயப் பண்டத்தின் அடிப்படையில் கைத்தொழில் பண்டத்தின் அமையச்செலவு

05. கைத்தொழில் பண்டம் மற்றும் விவசாயப் பண்டம் தொடர்பாக ஒரு நாட்டின் உற்பத்திச் சாத்திய வளையி AA ஐ கீழ்வரும் படம் காட்டுகின்றது. பின்வருவனவற்றுள் எது உற்பத்திச்சாத்திய வளையியை AA யிலிருந்து BB க்கு நகர்த்துவதற்கு அதிக சாத்தியமான காரணமாக அமைவது
1. அதிகரித்தலாகும்
2. குறைந்த தேறிய முதலீடு
3. பெரியளவிலான உற்பத்தி சிக்கனங்கள்
4. பொதுச் செலவீனத்தின் ஓர் அதிகரிப்பு
5. உற்பத்தித் திறனில் ஓர் அதிகரிப்பு





06. நிறைபோட்டிச்சந்தையில் பண்டத்தின் விலை 100 ரூபா ஆக உள்ள போது 90 m அளவு கேள்வி காணப்படுகிறது. இச்சந்தையில் ஓர் உற்பத்தியாளன் பண்டத்தின் விலையை 110 ரூபா ஆக அதிகரிப்பின் போது அவ் உற்பத்தியின் வருமானம் யாது?
1. பூச்சியம் 2. 900 m 3. 9900 m 4. 1000 m 5. தொடர்பான விலை இல்லை.

07. இங்கு வரைபடமானது நகரசபை பிரதேசமொன்றில்பொதுப்போக்குவரத்திற்கான கேள்வி மற்றும் நிரம்பல் வளையிகளைத் காட்டுகிறது. இங்கு OP என்பது மாறா விலையாகும். (flat rate) இச்சேவையைப் பெற விரும்பும் சகலருக்கும் இந் நகர சபையானது அதனை இலவசமாக வழங்க முடிவு செய்கிறது. எனின் நுகர்வோர் மிகை யாது?




1. MEP ஆல் வீழ்ச்சியடையும்.
2. SEP ஆல் அதிகரிக்கும்.
3. MOT ஆகக் காணப்படும்.
4. OPEQ ஆல் குறைவடையும்.
5. 0PEQ ஆகக் காணப்படும்.

08. தரப்பட்ட வரைபடத்தின் படி எல்லை சேமிப்பு நாட்டம் MPS 0.4 ஆக உள்ள பொழுது நுகர்வுக் கோட்டைப் பயன்படுத்தி A எனும்புள்ளியில் நுகர்வு செலவீட்டின் அளவு யாது?
1. 6000
2. 7000
3. 12000
4. 13000
5. 14000




09. சில பண்டங்களது விலை சார் கேள்வி நெகிழ்ச்சி பின்வருமாறு:-

| பண்டங்கள் | விலைசார் கேள்வி நெகிழ்ச்சி |
|---|---|
| A | 0.0 |
| B | -0.5 |
| C | -1.0 |
| D | -1.5 |

விலையானது 2 சதவீதத்தினால் குறைவடைகின்றபொழுது எப்பண்டத்தின் வருமானம் TR அதிகரிக்கும்.
1. A 2. B 3. C 4. D 5. B,C

10. செலவு தொடர்பான அட்டவனை தரப்பட்டுள்ளது.

| வெளியீடு q | மொத்தமாறும் செலவு VC |
|---|---|
| 1 | 7 |
| 2 | 12 |
| 3 | 16 |
| 4 | 22 |
| 5 | 35 |

4 ஆவது அலகு வெளியீட்டின் எல்லைச் செலவு யாது?
1. 4 ரூபா 2. 6 ரூபா 3. 13 ரூபா 4. 22 ரூபா 5. 35 ரூபா

11. பண்டத்தின் மீது அரச இழிவு விலையினை தீர்மானிக்கும் போது சந்தையில் ஏற்படக்கூடியது எது?
1. மிகைக்கேள்வி 2. மிகை நிரம்பல் 3. சமனிலை தோன்றும்.
4. உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும். 5. நுகர்வோர் மிகை அதிகரிக்கும்.

12. சந்தைதோல்வியை ஏற்படுத்தக்கூடியது எது?
1. விலைப்பொறிமுறை.
2. தனியார்செலவு சமூகச் செலவுக்கு சமனாக இருத்தல்.
3. தொழிற்சாலைகள் மூடப்படல்
4. போட்டி அதிகரித்தல்
5. உற்பத்தியின்போது ஏற்படும் புறநன்மைகள்

13. ஓர் உற்பத்தித் தொழிற்பாட்டில் உற்பத்திக் காரணிகளில் நிலையான காரணி என கருதப்படக்கூடியது எது?
1. ஊழிய மணித்தியாலம் 2. பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு
3. தொழிற்சாலை அமைவிடம்
4. மூலப்பொருள்கள் அளவு
5. போக்குவரத்துச் செலவு

14. தேசிய வருமானக் கணிப்பீட்டின்பொழுது கவனத்தில் கொள்ளப்படாத செலவீடுகள் எனக் கருதப்படுபவை ஏவை?
1. யுத்தசெலவீனம் 2. படையினரது சம்பளம்
3. சொத்துக்கள் மீதான முதலீடு 4. அரச நுகர்வுச் செலவு
5. சொத்துக்களின் மறு விற்பனை

15. மொத்தக் கேள்வியினுள் உள்ளடங்காதது எது?
1. முதலீடு 2. தனியார் நுகர்வு 3. அரச நுகர்வு 4. ஏற்றுமதி
5. உற்பத்தியின் வினைத்திறன்

16. அண்மையில் அரசாங்கத்தினால் 2009 ஆம் ஆண்டுக்கென ஆரம்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் பாதீட்டுப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் எத்தனை சதவீதம்?
1. 8.0 2. 7.7 3. 7 4. 6.7 5. 5.7

17. 2008/2009 ஆண்டுகளில் வரி அரசிறையின் பங்களிப்பு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக எவ்வளவாகும்.?
1. 12 %- 14% 2. 14 %- 15.40% 3. 16-16.40% 4. 17.40-18%
5. 18-19%

18. 2007,2008,2009 ஆம் ஆண்டுகளுக்கான பொருளாதார வளர்ச்சி வீதங்கள் முறையாக அமையப்பெற்றது எது?
1. 7.7,6.8,6.5 2. 6.8,6.5,6.5 3. 5.4,6.2,7.7 4. -1.5,4.0,5.9
5. 6.5,6.0,6.8

19. எளிய பொருளாதாரமொன்றில் மொத்தவெளியீடு y = 15000 MR இங்கு முதலீடு 4,500 MR எனில், எல்லை நுகர்வு நாட்டம் யாது?
1. 0.25 2. 0.3 3. 0.5 4. 0.7 5. 0.75

20. அண்மையில் இலங்கையின் வரி வருமானத்தில் மிக முக்கிய மூலாதாரம் எது?
1. பெறுமதி சேர்வரி 2. கலால்வரி 3. இறக்குமதித்தீர்வை
4. தேசக்கட்டுமான வரி 5. செஸ்வரி

தொடர்ச்சி அடுத்தக் கிழமை வெளிவரும்

2 ஆம் பக்க தொடர்ச்சி தொடர்ச்சி.....

05. 1948 மற்றும் 1978 யாப்புக்களின் கீழ் இடம்பெற்ற பிரதிநிதித்துவ முறைகளைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஒப்பிடுக.
1) வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பு.
2) அரசியல் கட்சிகளின் பங்கு.
3) அரசாங்கத்தின் உறுதிப்பாடு.

1) வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையிலான தொடர்பு.

1948-1978 காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த பிரதிநிதித்துவ முறை எளிய பெரும்பான்மை முறை என்றும், 1978 இலிருந்து இன்றுவரை செயற்படும் பிரதிநிதித்துவ முறை விகிதசமப் பிரதிநிதித்துவ முறை என்றும் அழைக்கப்படுகிறது. கோட்பாட்டு ரீதியாக எளிய பெரும்பான்மை முறையின்கீழ் வாக்காளருக்கும்-பிரதிநிதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பும் விகித முறைமையின்கீழ் சேய்மையான தொடர்பும் நிலவுகிறது. எளிய பெரும்பான்மை முறையின் கீழ் இடம்பெறும் தேர்தல் தொகுதிகளில் வாக்காளர்களின் எண்ணிக்கை சிறியதாக அமைவதன் காரணமாக வாக்காளர் பிரதிநிதியை நன்கு அறிவதோடு பிரதிநிதியும் வாக்காளரை நன்கு அறிவார். குறிப்பாகக் கட்சி இணைவின் அடிப்படையில் கட்சி உறுப்பினர்கள் தமது கட்சி வேட்பாளருக்கு வாக்களிப்பதுடன் தமக்கு யார் வாக்களித்தனர் என்பதைப் பிரதிநிதி அறிவார். இதன் காரணமாக வாக்காளருக்கும் பிரதிநிதிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு ஏற்படும். இத்தொடர்பு வாக்காளர் பக்க மாகச் சிறந்ததாயினும், பிரதிநிதியின் பக்கமாக அவ்வளவு சிறந்த ஒன்றல்ல. காரணம், பிரதிநிதி வாக்காளரின் அடிமையாக மாறுவதனால் ஆகும். அதனால், பிரதிநிதி தேசியக் கொள்கைகளை விட வாக்காளரின் குறுகிய நலன்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதோடு தேசியமட்டத்தில் அது சிறந்த ஒரு நிலையாக அமையாது.

தொடர்ச்சி அடுத்த கிழமை வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மாதிரிப் பரீட்சை - 2009 ஆகஸ்ட்
General Certificate of Education (Advance.Level) Model Examination - 2009 August

# வணிகக்கல்வி

ஆசிரியர் : திரு B.S பசில் (B.B.A)
யாழ்

## பகுதி -1

01. கீழே தரப்படும் கூற்றுக்களில் இலங்கை தொடர்பாக மிகச்சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. ஒரு விவசாய நாடு
2. ஒரு கைத்தொழில் நாடு
3. ஒரு சேவைத் துறை சார்ந்த நாடு
4. ஒரு ஏற்றுமதி சார்ந்த நாடு
5. மேற்சொன்ன எதுவுமல்ல

02. விலங்குகளை இறைச்சிக்காக வளர்ப்பது கீழே தரப்படுபவற்றில் எதனுள் அடக்கப்படும்.
1. கைத்தொழில்
2. வர்த்தகம்
3. வியாபாரம்
4. உதவிச்சேவைகள்
5. மேற்சொன்ன எதுவுமல்ல.

03. பின்வருவனவற்றில் கைத்தொழில் பொருளாக கருதப்படமுடியாதது ?
1. மூலப்பொருட்களும் பகுதிகளும்.
2. உற்பத்திசெய்யப்பட்ட உள்ளீடுகள்
3. உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகள்
4. மூலதனப்பொருட்கள்
5. விநியோகமும் வணிகச்சேவைகளும்

04. வணிகமொன்றினது உற்பத்திக் கிரயத்தை இழிவுபடுத்தக்கூடியதாக இருப்பது அந்த வணிகத்திற்கு,
1. பலம்
2. பலவீனம்
3. வாய்ப்பு
4. அச்சுறுத்தல்
5. உள்ளீடு

05. வணிகத்தின் அமைவிடத்தெரிவு பின்வருவனவற்றுள் எத்தொழிற்பாட்டினுள் அடக்கப்படும்.
1. நிதியும் கணக்கீடும்.
2. உற்பத்தி
3. ஆளணி
4. ஆராய்ச்சி அபிவிருத்தி
5. நிர்வாகம்

06. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பணியாகக் கருதமுடியாதது
1. போட்டி வியாபாரத்தை உந்துவித்தல்
2. நுகர்வோர் கல்வியை விருத்தி செய்தல்
3. சூழல் பாதுகாப்பில் ஈடுபடல்
4. சில பொருட்களுக்கு விலைக்கட்டுப்பாட்டை பேணல்
5. பொய்யான தகவல்கள் அளிக்கும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுத்தல்

07. திரு க. பனான்டோ எனும் அரச வைத்திய அதிகாரி தனது பொருளாதார நலன்களை முன்னேற்றுவிக்கும் வகையில் பங்குடைமை அமைப்பு ஒன்றில் இணைந்து கொண்டார். இங்கு திரு. க. பனான்டோ உண்மையில்,
1. இயங்கும் பங்காளி
2. தூங்கும் பங்காளி
3. பெயரளவில் பங்காளி
4. போலிப்பங்காளி
5. இரகசியப்பங்காளி

08. பொதுக்கம்பனி ஒன்றில் இழிவுக்கட்டணம் திரட்டப்பட்டதை உறுதிப்படுத்துவது.
1. முன்விவரணம்
2. முன்விவரணத்திற்குப் பதிலான கூற்று
3. சட்டமுறை அறிக்கை
4. ஆண்டறிக்கை
5. அமைப்புப் புறவதி

09. பின்வருவனவற்றில் கணினி மென்பொருள் வகையைச் சேராதது எது ?
1. சொல்செயன்முறைப்படுத்தல்
2. எக்ஸெல்
3. எம்.எஸ்.டொஸ்
4. செயன்முறைப்படுத்தும் அலகு.
5. அக்ஸல்

10. பின்வருவனவற்றுள் எது தொழில்நுட்ப சூழல் என்பதில் அடக்கப்படக் கூடியது ?
1. பணக்கொள்கை
2. வரி விதிப்பு
3. வாழ்க்கை முறை
4. நுகர்வோர் எதிர்பார்ப்புக்கள்
5. வீட்டுச் சூழல்

11. பின்வருவனவற்றுள் எதில் சில சமயங்களில் ஒரு அல்லதுசிலஉடமையாளர்களுக்கு மூலதன எல்லைக்கு மேல் இடரைத் தாங்கிக் கொள்ளக்கூடிய நிலை ஏற்படலாம்.
1. வரையறுக்கப்பட்ட சொந்தக்கம்பனியில்
2. வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனியில்
3. வரையறுக்கபட்ட மக்கள் கம்பனியில்
4. வரையறுக்கப்பட்ட பங்குடைமையில்
5. மேற்சொன்ன எவையுமல்ல.

12. வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் அனுகூலமாக கருத முடியாதது ?
1. அதிகளவு வணிகம்
2. அதிகளவு பிரமாணங்கள்
3. அதிகளவு வாடிக்கையாளர்
4. அதிகளவு வளர்ச்சி
5. அதிகூடிய வாழ்க்கைக் காலம்.

இவ் இதழில், மாவட்ட ரீதியாக முன்னிலையில் திகழும் ஆசிரியர்களினதும் மூத்த அனுபவமிக்க ஆசிரியர்களினதும் மாதிரி வினாத்தாள்கள் தொடர்ச்சியாக வெளிவரவுள்ளன.

13. கப்பல் முகவர் நிலையத்தின் பணியல்லாதது ?
1. வியாபார ஆவணங்களை ஒழுங்கு செய்தல்
2. பொதி செய்தலுக்கு உதவுதல்
3. பொருட்களை அப்புறப்படுத்த உதவுதல்
4. கப்பலை ஒழுங்கு செய்தல்
5. தோற்றுவாய் சான்றிதழை வழங்குதல்

14. வர்த்தக வங்கியின் பணியல்லாதது ?
1. வட்டியைப் பெறுதல்
2. வட்டியை வழங்குதல்
3. வங்கி வீதத்தை தீர்மானித்தல்
4. தரகு பெறுதல்
5. மேற்சொன்ன எவையுமல்ல

15. தகவல் பரிவர்த்தனையில் தடையாக கருத முடியாதது ?
1. சத்தம்
2. அவதானம்
3. உணர்ச்சி வசப்படுதல்
4. தகவல் மிகை
5. தகவல்பற்றாக்குறை

16. காப்புறுதி செய்முறையில் முதலாம்,இரண்டாம் நபர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள இணக்கத்தைக் காட்டுவது,
1. காப்புறுதிக் கடிதம்
2. காப்புறுதித் தத்துவம்
3. காப்புறுதிப்பூட்கை
4. காப்புறுதிப்படிவம்
5. மேற்சொன்ன எவையுமல்ல

17. பொருளின் உரிமை மாற்றலை எடுத்துக்காட்டுவது
1. விலைக்கூற்று
2. விலை விசாரணை
3. பட்டியல்
4. கட்டளை
5. வரவுத்தாள்

18. ஓர் குறித்த உற்பத்திக் கம்பனியில் பொருட்களை மட்டும் விற்பனை செய்ய உடன்பட்டு அதை நடைமுறைப்படுத்தும் அமைப்பு,
1. பகுதிக் கடை
2. கிளைக் கடை
3. சிறப்புக் கடை
4. கழிவுக்கடை
5. கட்டுக்கடை

19. ரெலர் அட்டை தொடர்பாக தவறான கூற்று,
1. 24 மணிநேர வங்கிச்சேவையைப் பெற உதவுதல்
2. இதற்கு வட்டி அறவிடப்படமாட்டாது
3. இரகசியத்தன்மை இருப்பதனால் பாதுகாப்பானது
4. இதற்கு கலாவதித் திகதியில்லை
5. மேற்சொன்ன எவையுமல்ல

20. பூரணப்படுத்துக.

[ ] → விருப்பம் → கொள்வனவுச்சக்தி → [ ]

21. 2005 ஆம் ஆண்டில் இருந்து நிதிக்கம்பனிகளுக்கு எச்செயற்பாட்டை மேற்கொள்ள மத்திய வங்கி அனுமதி அளித்தது ?

..............................................................................

22. இலங்கை இறுதியாக ........................................... நாட்டுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்துள்ளது.

23. அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| | |
|---|---|
| 2007 இல் இலங்கையின் நுகர்வோரின் தொகை | |
| 2007 இல் இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் | |

24. இலங்கை மத்திய வங்கி அறிக்கைப்படி 2004 ஆம்,2007 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதப் பங்களிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| துறைகள் | 2004 (%) | 2007(%) |
|---|---|---|
| 1. விவசாயம்,காட்டுத்தொழில்,கடல்தொழில் | 17.8 % | 11.9 |
| 2. சுரங்கத்தொழிலும், கல்லுடைத்தலும் | 2.0 % | 1.9 |
| 3. தயாரிப்புத்தொழில் | 15.4 % | 17.7 |
| 4. மின்வலு,நீர் | 1.5 % | 2.5 % |
| 5. கட்டவாக்கம் | 7.9 % | 6.4 % |
| 6. மொத்த சில்லறை வர்த்தகம்,சுற்றுலா விடுதிகளும், உணவகங்களும் | 21.4 % | 24.5 % |
| 7. போக்குவரத்து,களஞ்சியப்படுத்தல்,தொடர்பாடல் | 14.4 % | 12.8 % |
| 8. நிதியியல் பணிகள், உண்மைச்சொத்துக்கள் வர்த்தகப்பணிகள் | 12.1 % | 8.7 % |
| 9. பொதுநிர்வாகம்,ஏனைய அரச பணிகளும் பாதுகாப்பும் ஏனைய சமூகங்கள்,சமூக தனியாள் பணிகளும் | 7.8 % | 13.6 % |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.0 | 100.0 |

அ. முதன் நிலை உற்பத்தி ( முதன்நிலைக் கைத்தொழிலின்)சதவீதப் பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)

..............................................................................

ஆ. இரண்டாம் நிலை உற்பத்தி (இரண்டாம் நிலைக் கைத்தொழிலின்)சதவீதப் பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)

..............................................................................

இ. மூன்றாம் நிலை உற்பத்தி ( மூன்றாம்நிலைக் கைத்தொழிலின்) சதவீதப்பங்களிப்பு யாது ? ( 2007 ஆம் ஆண்டுக்கு)

..............................................................................

தொடர்ச்சி அடுத்தக் கிழமை வெளிவரும்

3 ஆம் பக்க தொடர்ச்சி.....

30. உற்பத்தித் தாபனம் ஒன்றின் கூலி தொடர்பான தரவுகள் வருமாறு.
பொருள் ஒன்றை உருவாக்குவதற்கான நியம நேரம் 2 மணித்தியாலங்கள்.
உற்பத்திசெய்த அலகுகள் 60
உற்பத்திக்கு எடுத்த நேரம் 100 மணித்தியாலங்கள்
நிறுவனம் சேமித்த நேரங்களுக்கு 75% உபகாரச் சம்பளம் வழங்கும்.
மணித்தியாலம் ஒன்றுக்கான கூலி 420/=
மேற்குறித்த நிலைமையில் றோவான் முறையில் உபகாரச் சம்பளம் வழங்கப்படின் வழமையான முறையிலும்பார்க்க ஊழியர் பெறும் நலன் யாது ?

**✱ பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் 'உண்மை' அல்லது 'பொய்' என எழுதுக.**

31. கழிவுசெய்யப்பட்ட காசேட்டு முறையில் தேறிய இன்றைய பெறுமதி பூச்சியமாக இருக்கும் போது முதலீட்டுத் திட்டம் தெரிவுசெய்யப்படும். ( )

32. செயற்றிட்டம் ஒன்றில் கால எண்ணக்கரு அடிப்படையில் பணத்தின் நீண்டகாலப் பெறுமதிவரையறுக்கப்படுகின்றது. ( )

33. நிலையான கிரயமும், இலாபமும் சேர்ந்த பகுதி பங்களிப்பு (உதவுதொகை) எனப்படும். ( )

34. துண்டுகளாக்கி விற்பனைசெய்யும் நோக்குடன் காணி ஒன்றைக் கொள்வனவுசெய்தல் முதலீட்டு நடவடிக்கையான காசு வெளிப்பாய்ச்சல் ஆகும். ( )

35. பங்குவட்டத்தின் நிதியினால் அருவ மற்றும் கற்பனைச் சொத்துக்களைப் பதிவழிப்புச் செய்ய முடியாது. ( )

**✱ பின்வரும் வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புக.**

36. கிரய இலாப அளவுப் பகுப்பாய்வில் ( CVP ஆய்வு) மொத்தக் கிரயமானது .................................. என வகைப்படுத்தப்படும்.

37. பங்குவட்டம் என்பது ஒரு.............................. ஒதுக்கம் என்பதுடன் அது ஒரு ........................... ஒதுக்கமும் ஆகும்.

38. எல்லைக்கிரயவியலில் மதிப்பிடப்பட்ட விற்பனை அலகுகளிலிருந்து சமப்பாட்டுப் புள்ளி விற்பனை அலகுகளைக் கழிக்க வருவது .................................. எனப்படும்.

39. மூலதன இணைப்பு விகிதம் தாழ் இணைப்பு நிலையில் இருக்கும்போது கடன் முதலைவிட உரிமை முதல் .................................. இருக்கும்.

40. காசோட்டக்கூற்று ஒன்றில் எப்போதும் இடம்பெறமுடியாத ஒரு பங்குவழங்கல் ........................... ஆகும்.

தொடர்ச்சி அடுத்தக் கிழமை வெளிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குச்சந்தையின்..... (முதலாம்பக்கத் தொடர்ச்சி.....)

போன்றவை தரகர்களின் பணிகளாகும். கம்பனிகளின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டதும், ஏற்பாட்டு தரகர்களும் பங்குச்சந்தையின் ஏனைய தரகர் நிறுவனங்களும் பொது மக்களுக்கு பங்குகளை விற்கும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு விரும்பும் பொதுமக்கள் பங்குச்சந்தையின் தரகர் நிறுவனங்கள் மூலமோ அல்லது பங்குகள் வழங்கும் வங்கிகள் மூலமோ பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு விண்ணப்பிக்கமுடியும்.அதன் பின்னர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகள் இரண்டாந்தர சந்தை ஊடாக கைமாற்றம் செய்யப்படுகின்றன. இரண்டாந்தரச் சந்தையில் பங்குகளின் கைமாற்றல்கள் கொழும்புப் பங்குச்சந்தையின் தன்னியக்கக் கணினிகள் மூலம் நாளாந்தம் வேலை நாட்களில் காலை 9.30 முதல் பிற்பகல் 2.30 வரை நிகழ்கின்றன.அடையக்கூடியதாக இருக்கின்ற அதே வேளைபங்குகளின்விலைஅதிகரிக்கும்போதுநட்டத்தைஏற்படுத்த கூடியதாகவும் அமைகின்றது. மறுபுறத்தில் தன்னிடம் கைமாற்றகம் செய்யப்படாமல் இருக்கும் பங்குகளை கடனுக்கு கொடுப்பதன் மூலம் கடன் வழங்குபவர் கடன் பெறுபவரிடமிருந்து ஏற்கனவே இணங்கியபடி ஒரு வருமானத்தைப் பெறக்கூடியதாக இருக்கின்றது. பங்குகளைக் கடனுக்கு பெற்றுக்கொண்டவரிடமிருந்து பங்குத்தரகர் தாம் ஆற்றிய பணிகளுக்காக தாம் முன்னரே இணங்கிய கட்டணங்களை அறவிட்டுக்கொள்ள முடியும். இக்கட்டணங்கள் கொழும்புப் பங்குச்சந்தையினால் நிர்ணயிக்கப்படாமல், அப்பணிகளில் பங்காற்றும் கட்சியினர்களால் தீர்மானிக்கப்படுகின்றன.பங்குகளைக்கடனுக்கு வழங்குநரும் பங்குகளை கடனுக்கு பெறுநருமாகிய கட்சியினர்களுக்கிடையில் ஏற்படக்கூடிய ஒப்பந்தத்தில் பங்குத்தரகர் அக்கொடுக்கல் வாங்கல்களுக்கு இடைநடுவராகச் செயற்படுவதனால்அவரும் ஒப்பந்தத்தில் இரு கட்சியினராக இருக்கின்றார். பங்குகள்கைமாற்றலுக்கானஒப்பந்தக்காலம் ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. குறித்த கட்சியினர் எழுத்துருவான ஒப்பந்தம் ஒன்றிற்கு இணங்கியதும் கடன்கொடுநரின் எழுத்து மூல வேண்டுதலுக்கு அமைய மத்திய வைப்புத் திட்டத்தினால் பங்குத்தரகரின்விசேடபிணைப்பத்திரக்கணக்கொன்றுக்கு அப்பங்குகள் ஒப்படைக்கப்படும். அதன் பின் உடனடியாக பங்குகள் அவ்விசேட கணக்கிலிருந்து மத்திய வைப்புத் திட்டத்திலுள்ள கடன்படுநர்களின் சாதாரண கணக்கிற்கு மாற்றப்படுகின்றன.

பொதுமக்கள் தரகர் நிறுவனங்கள் மூலமாகவே பங்குச்சந்தை நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். இவ்வாறு பங்குச்சந்தையில் இடைநடுவராக தரகர் நிறுவனங்கள் பணிபுரிவதற்கு இரு அடிப்படைக் காரணங்கள் உள்ளன.

அ. கம்பனிகளின் நிதி நிலைமைகள் பற்றி மேற்கொள்ளப்படும் நிதிப்பகுப்பாய்வுத் தகவல்களின் அடிப்படையில் அதன்பங்குகள் கொள்வனவு செய்வதற்கு தெரிவு செய்யப்படும். ஒரு கம்பனியின் நிதி நிலைமையைஅதன்ஆண்டறிக்கையை(இலாபநட்டக் கணக்கு,ஐந்தொகைஉள்ளடங்கியநிதிக்கூற்று)பகுப்பாய்வுசெய்வதன்மூலம்அறிந்து கொள்ளலாம்.பங்குச்சந்தையில் அங்கம் வகிக்கும் தரகர் நிறுவனங்கள்,நிதிப்பகுப்பாய்வுகள் பற்றிய விசேட தகைமையுள்ளவர்களைப் பணிகளில் ஈடுபடுத்துவதால், முதலீடுசெய்யக்கூடியகம்பனிகளை தெரிவு செய்து கொள்வதற்கானஅறிவுரைகளையும்ஆலோசனைகளையும் முதலீட்டாளர்களுக்கு வழங்குகின்றன. இப்பணியானது முதலீட்டாளர்களுக்குசிறந்தமுறையில்அவர்களதுமுதலீட்டைமேற்கொள்ளவழிகாட்டுகின்றது.

ஆ.தன்னியக்க கணினிப்பொறிகள் மூலம் பங்குகள் கைமாற்றல்கள் இடம்பெற்ற போதிலும் அக்கொடுக்கல்வாங்கல்கள்நிறைவுற்றதாகக்கருதமுடியாது.அவைஅக்கொடுக்கல் வாங்கல்களின் ஆரம்ப நிலையாகும். குறித்த ஏதாவது சந்தர்ப்பம் ஒன்றில் கம்பனிகள் தமதுபங்குதாரர்களின்விவரங்களைத்திரட்டிக்கொள்ளவேண்டியசூழ்நிலைகள் கம்பனிகளுக்கு ஏற்படலாம். கம்பனிப்பங்குதாரர் இடாப்பில்பங்குகள் கொள்வனவு செய்தநபர்களின் பெயர்களைப்பதிவதற்குமேற்கொள்ளவேண்டியபணிகளுக்கான ஆவணங்களைத் தயாரிப்பது பற்றியவிசேட அறிவும், அனுபவங்களும்இன்றியமையாதன. பங்குத்தரகர்கள்இத்துறையில்பூரணஅறிவும்தேர்ச்சியும்உள்ளவர்களாககருதப்படுகின்றனர். எனவே, பங்குச்சந்தை தொழிற்பாடுகளில் இவ்விரு முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொள்வதற்காக இடைநடுவராக தரகர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது. இதன் மூலம் பொதுமக்கள் தத்தம் முதலீடுகளை சிறந்த முறைகளில் மேற் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

### பங்குகள் கைமாற்றல் கிரயம் (Transaction Costs)

பங்குச்சந்தையில் பங்குகள் கைமாற்றல்கள் நிகழும்போது அப்பணிகளுக்காக வாடிக்கையாளர்களிடம் அறவிடப்படும் கட்டணங்கள் பங்குக் கைமாற்றல் கிரயம் சதவீதமாகத் தீர்மானிக்கப்படும்.

ஒரு மில்லியன் ரூபாவுக்கு அல்லது அதனிலும் குறைவான பெறுமதி வாய்ந்த கைமாற்றல்களுக்கு 1.425% கட்டணம் அறவிடப்படும். இது பின்வருமாறு கணிக்கப்படுகின்றது. தரகர்களுக்கான தேறிய பெறுமதி 1.00%(கைமாற்றலின் குறைந்தபட்மாகக் கட்டணம் ரூபா 10)பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு செஸ்வரி 0.090%கொழும்புப் பங்குச்சந்தைக் கட்டணம் 0.105%மத்திய வைப்புத்திட்டக்கட்டணம் 0.030%(கைமாற்றலின் குறைந்தபட்சக் கட்டணம் ரூபா 5)அரசாங்க செஸ் வரி 0.020%,1.425%

ஒருமில்லியன்ரூபாவுக்குமேற்பட்டபெறுமதியுடையகைமாற்றல்களுக்கு1.225%கட்டணம் அறவிடப்படும். இது பின்வருமாறு கணிக்கப்படுகின்றது.தரகர்களுக்கான தேறிய பெறுமதி 0.800% பிணைகள் பரிமாற்று ஆணைக்குழு செஸ்வரி 0.090%கொழும்புப் பங்குச்சந்தைக் கட்டணம் 0.105% மத்திய வைப்புத்திட்டக் கட்டணம் 0.030% அரசாங்க செஸ் வரி 0.020%, 1.225%.

### பங்குச்சந்தையில் கைமாற்றம் செய்யப்படும் பிணைகள்

பொதுக்கம்பனிகளின் சாதாரண பங்குகள் மாத்திரம் கொழும்புப் பங்குச்சந்தையில் பட்டியற்படுத்தப்படுவதில்லை. மாறாகமுன்னுரிமைப்பங்குகள்,பங்குஆணைப்பத்திரங்கள், கம்பனித்தொகுதிக்கடன் பத்திரங்கள்போன்றபிணைப்பத்திரங்களையும் பட்டியற்படுத்திக் கொள்ள முடியும்.

### சாதாரண பங்குகள் (Ordinary Shares)

பொதுக்கம்பனி ஒன்றின்உரிமையாண்மையைப் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய பங்குகள் சாதாரணபங்குகள் என அறிமுகம் செய்து கொள்ளமுடியும்.கம்பனியின்பொறுப்புக்களை ஏற்றுக்கொள்பவர்கள் சாதாரண பங்குதாரர்களாவர். இவ்வகையான பங்குகளுக்கு குறித்த ஒரு சதவீத பங்குலாபம்வழங்குவதற்கு கம்பனிகள் கட்டுப்படுத்தப்படுவதில்லை. அதேபோல் பொதுக்கம்பனி ஒன்று வங்கி முறியும் பட்சத்தில் அதனது அனைத்துவெளியார் பொறுப்புக்களும் தீர்க்கப்பட்ட பின்னர் மீதியாகவுள்ள நிதியினையே சாதாரண பங்குதாரர்களுக்கு பிரித்துக்கொடுக்கப்படும். தற்போது கொழும்புப் பங்குச்சந்தையில் 237 பொதுக் கம்பனிகளின் சாதாரண பங்குகள் பட்டியற்படுத்தப் பட்டுள்ளன.

### முன்னுரிமைப்பங்குகள் (Preference Share)

குறித்த பங்கிலாப வீதத்தை பெறுவதற்கு உரிமையுள்ள பங்குகள் முன்னுரிமைப் பங்குகள் எனப்படும். கம்பனி கலைப்பின்போது சாதாரண பங்குதாரர்களிலும் கூடிய முன்னுரிமை, முன்னுரிமைப்பங்கு தாரர்களுக்கு உண்டு. முன்னுரிமைப்பங்குகளுடன் சாதாரண பங்குகளை சார்பளவாகஒப்பிடும்போதுபங்குகளுக்கானநட்டஅச்சம்குறைந்தளவில் காணப்படுகின்றது. தற்போது கொழும்புப் பங்குச்சந்தையில் ஒரு பொதுக்கம்பனியின் முன்னுரிமைப் பங்குகள் பட்டியற் படுத்தப்பட்டுள்ளன. அவையாவன.இலங்கை வர்த்தக வங்கியின்,

அ. 13% மீட்கத்தகு வங்கியின்,
(Redeemable Cumulative Preference Share)

ஆ. 11.25% மீட்கத்தகு திரண்ட முன்னுரிமைப்பங்குகள்
(Redeemable Cumulative Preferred Shares)

### பங்கு ஆணைப்பத்திரம் (Share Warrants)

எதிர்காலத்தில் குறித்த விலைக்கு ,குறித்த கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்துகொள்வதற்கான உரிமையை வெளிப்படுத்தக்கூடிய ஓர் ஆவணமாக பங்கு ஆணைப்பத்திரம் கருதப்படுகின்றது. தற்போது கம்பனி ஒன்று வழங்கும் பங்கு ஆணைப்பத்திரத்தை கொள்வனவு செய்பவர், அதனைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் கம்பனியின் தற்போதைய இணங்கிய விலைக்கு பங்குகளைக் கொள்வனவு செய்துகொள்வதற்கு இவ்ஆவணம் துணைபுரிகின்றது. தற்போது கொழும்புப் பங்குச்சந்தையில் இரண்டு கம்பனிகளின் பங்கு ஆணைப்பத்திரங்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. பட்டியற்படுத்தப்பட்டிருக்கின்றன.

**தொகுப்பு:- இ.ஜனதன் (B.B.A HONS)**
**கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி. (கொழும்பு)**

தொடர்ச்சி அடுத்த கிழமை வெளிவரும் ............

கடந்தவாரத் (17.03.2009) தொடர்ச்சி....

## இலங்கைப் பரீட்சைத்திணைக்களம்:கல்விப்பொதுத் தராதரப் பத்திர (உ/தர)ப் பரீட்சை - 2009, ஓகஸ்ட்.

## திட்டமிடப்பட்ட நேர அட்டவணை

| நாள் | முற்பகல் | பிற்பகல் |
|---|---|---|
| 06 | 08.30 - 11.30<br>01 பௌதிகவியல்-11<br>51 சித்திரம் -111 | 12.30 - 15.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும்-1 |
| 07 | 08.30 - 11.30<br>71 சிங்களம்-1<br>72 தமிழ்-1 | 12.30 - 15.30<br>28 மனைப்பொருளியல்-1<br>76 இலத்தீன்-11 |
| 08 | 08.30 - 11.30<br>71 சிங்களம்-11<br>72 தமிழ்-11 | 12.30 - 15.30<br>28 மனைப்பொருளியல்-11<br>76 இலத்தீன்-1 |
| 09 | 08.30 - 10.30<br>02 இரசாயனவியல்-1<br>08.30 - 11.30<br>41 பௌத்தம்-1<br>77 கிரேக்கம்-1<br>81 பிரெஞ்சு-1 | 12.30 - 15.30<br>24 அளவையியலும் விஞ்ஞான முறையும்-11 |
| 10 | 08.30 - 11.30<br>02 இரசாயனவியல்-11<br>41 பௌத்தம்-11<br>77 கிரேக்கம்-11<br>81 பிரெஞ்சு-11 | 14.00 - 17.00<br>32 வணிகக் கல்வி-1 (பகுதி-1,11)<br>84 ஹிந்தி-1 |
| 11 | 08.30 - 11.30<br>13 பொது ஆங்கிலம்-1 | 12.30 - 15.00<br>13 பொது ஆங்கிலம்-11 |
| 12 | 08.30 - 10.30<br>14 குடிசார்த் தொழில்நுட்பவியல்-1<br>15 பொறிமுறைத் தொழில்நுட்பவியல்-1<br>16 மின், இலத்திரன், தகவல் தொழில் நுட்பவியல்-1<br>17 உணவுத் தொழில்நுட்பவியல்-1<br>18 விவசாயத் தொழில்நுட்பவியல்-1<br>19 உயிர் வளத் தொழில்நுட்பவியல்-1<br>08.30 - 11.30<br>46 இந்து நாகரிகம்-1<br>47 இஸ்லாமிய நாகரிகம்-1<br>74 பாளி-1 | 12.30 - 15.30<br>25A வரலாறு-11(இந்தியா) (பகுதி-1,11)<br>25B வரலாறு-11(ஐரோப்பா) (பகுதி-1,11) |
| 13 | 08.30 - 11.30<br>25 வரலாறு-1 (பகுதி 1,11) | 12.30 - 15.30<br>73 ஆங்கிலம்-1 |
| 14 | 08.30 - 11.30<br>45 பௌத்த நாகரிகம்-1 | 12.30 - 15.30<br>32 வணிகக்கல்வி-11 (பகுதி 1,11)<br>84 ஹிந்தி-11 |
| 15 | 08.30 - 11.30<br>14 குடிசார்த் தொழில்நுட்பவியல்-11<br>15 பொறிமுறைத் தொழில்நுட்பவியல்-11<br>16 மின், இலத்திரன், தகவல் தொழில்நுட்பம்-11<br>17 உணவுத் தொழில்நுட்பவியல்-11<br>18 விவசாயத் தொழில்நுட்பவியல்-11<br>19 உயிர் வளத் தொழில்நுட்பவியல்-11<br>46 இந்து நாகரிகம்-11<br>47 இஸ்லாமிய நாகரிகம்-11<br>74 பாளி-11 | 12.30 - 15.30<br>22 புவியியல்-1 |
| 16 | 08.30 - 11.30<br>07 கணிதம்-1<br>11 உயர் கணிதம்-1<br>87 ஜப்பானிய மொழி-1 | 14.00 - 17.00<br>22 புவியியல்-11 (பகுதி 1,11) |
| 17 | 08.30 - 11.00<br>12 பொதுச்சாதாரணப் பரீட்சை | 12.30 - 15.30<br>22 புவியியல்-111 (பகுதி 1,11) |
| 18 | 08.30 - 11.30<br>07 கணிதம்-11<br>11 உயர் கணிதம்-11<br>87 ஜப்பானிய மொழி-11 | 12.30 - 15.30<br>45 பௌத்த நாகரிகம்-11 |
| 19 | 08.30 - 11.30<br>23 அரசியல் மூலத்துவங்கள்-1 (பகுதி 1,11) | 12.30 - 15.30<br>73 ஆங்கிலம்-11 |
| 20 | 08.30 - 11.30<br>23 அரசியல் மூலத்துவங்கள்-11 (பகுதி 1,11) | 12.30 - 15.30<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)-1<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்)-1<br>59 நாடகமும்அரங்கியலும் (ஆங்கிலம்)-1 |
| 21 | 08.30 - 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல்-1<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)-11<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்)-11<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)-11 | 12.30 - 15.30<br>42 இந்து சமயம்-1<br>43 கிறிஸ்தவம்-1<br>44 இஸ்லாம்-1<br>75 சமஸ்கிருதம்-1 |
| 22 | 08.30 - 11.30<br>31 வணிகப் புள்ளிவிபரவியல்-11<br>57 நாடகமும் அரங்கியலும் (சிங்களம்)-111<br>58 நாடகமும் அரங்கியலும் (தமிழ்)-111<br>59 நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்)-111 | 14.00 - 17.00<br>42 இந்து சமயம்-11<br>43 கிறிஸ்தவம்-11<br>44 இஸ்லாம்-11<br>75 சமஸ்கிருதம்-11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org